# தமிழ்நாட்டின் நிர்வாக வரலாறு


ஆசிரியர்

**முனைவர் ரெ. செல்வராசு**

**இணைப் பேராசிரியர், மற்றும் வரலாற்றுத் துறைத் தலைவர்**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,**

**திருநெல்வேலி – தமிழ்நாடு.**



**வரலாற்றுத் துறை**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**தொலைவு மற்றும் தொடர் கல்வி இயக்குனர்**

**திருநெல்வேலி – தமிழ்நாடு.012 627-**

**டிசம்பர்.2023-**

# பொருளடக்கம்


| வ.எ | இயல் | உள்ளடக்கம் | ப.எண் |
| --- | --- | --- | --- |
| 1 | முதல் | நீதிக்கட்சி - ஏ. சுப்பராயுலு ரெட்டியார்- பனகல் ராஜா - ப. சுப்புராயன் - பொப்பிலி ராஜா - சாதனைகள் - இட ஒதுக்கீடு - வகுப்புவாத G.O. பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கம் - பெண்களுக்கு வாக்குரிமை - கோவில்களை ஒழுங்குபடுத்துதல் - மதிய உணவு திட்டம் | 1-31 |
| 2 | இரண்டு | காங்கிரஸ் ஆட்சி - சி. ராஜகோபாலாச்சாரி - கே. காமராஜர் - எம். பக்தவச்சலம் - முன்னேற்றங்கள்: இலவச மதிய உணவு திட்டம் - புதிய பள்ளிகள் திறப்பு - நீர்ப்பாசன வசதிகள் அதிகரிப்பு - தொழில்துறை வளர்ச்சி. | 32-51 |
| 3 | மூன்று | தி.மு.க. நிர்வாகம் - சி.என். அண்ணாதுரை - மதராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என பெயர் மாற்றம் - இரு மொழிக் கொள்கை - பி.யு.சி வரை அனைவருக்கும் இலவசக் கல்வி. - கலைஞர் எம். கருணாநிதி - குடிசை அகற்றும் வாரியம் - பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் அமைத்தல் - இட ஒதுக்கீடு கொள்கை அமலாக்கம் - சேலம் உருக்காலை - மனுநீதி திட்டம் - விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் - பெண்களுக்கு சொத்துரிமை ; பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் - அரசு வேலைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு - சமத்துவபுரம் திட்டம் - டைடல் பார்க் - ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி - உள்கட்டமைப்பு அதிகரிப்பு - தொழில் வளர்ச்சி. | 52-142 |
| 4 | நான்கு | அதிமுக நிர்வாகம் ; எம்.ஜி.ஆர். - சத்துணவுத் திட்டம் - கல்விச் சீர்திருத்தங்கள் - மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் டூ அறிமுகம் - கிருஷ்ணா நீர் திட்டம் - புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவுதல் - தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் - கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக்கழகம் - ஜே. ஜெயலலிதா - நலத்திட்டங்கள் - அம்மா உணவு - மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி - தொட்டில் குழந்தை திட்டம் - உள்கட்டமைப்பு மேம்பாடு - மழை நீர் சேகரிப்பு. | 143171 |
| 5 | ஐந்து | கொள்கைகள் மற்றும் திட்டங்கள் - பொருளாதார சமூக மற்றும் மக்கள்தொகை தாக்கம் | 172-199 |
| | | கூடுதல் வாசிப்பு நூல்கள் | 200 |

## இயல் - ஒன்று

**நீதிக்கட்சி - ஏ. சுப்பராயுலு ரெட்டியார்- பனகல் ராஜா - ப. சுப்புராயன் - பொப்பிலி ராஜா - சாதனைகள் - இட ஒதுக்கீடு - வகுப்புவாத G.O. பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கம் - பெண்களுக்கு வாக்குரிமை - கோவில்களை ஒழுங்குபடுத்துதல் - மதிய உணவு திட்டம்**

### குறிக்கோள்கள்

- ஈ. சுப்ரமணியம் ரெட்டியாரின் முக்கிய பிரமுகர்களின் அரசியல் பயணம் மற்றும் பங்களிப்புகளை ஆராயுங்கள்.
- புதுக்கோட்டை ராஜா செயல்படுத்திய உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு போன்ற முயற்சிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும்.
- பண்பாட்டு பாரம்பரியத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கோவில்களை சீர்திருத்தம் மற்றும் புத்துயிர் அளிப்பதில் பொப்பிலி ராஜா போன்ற தலைவர்கள் எடுத்த முயற்சிகளை ஆராயுங்கள்.
- பள்ளிக் குழந்தைகளுக்கு சத்தான உணவை வழங்குவதில் ஒரு முன்னோடி நடவடிக்கையாக மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து ஆராயுங்கள்.

தென்னிந்திய வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபதுகளில் நீதிக் கட்சியின் தோற்றம் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 3 சதவீத மக்கள் தொகை கொண்ட பார்ப்பனர்கள் மொத்த சமுதாயத்தின் அரசியல், பொருளாதாரக் களங்களில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதவரிடையே பெரும் இடைவெளி இருந்தது.

நீதிக்கட்சி அந்த இடைவெளியைக் குறைக்க வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்டது. அக்கட்சியின் கோட்பாடுகள், திட்டங்களைத் தெளிவாக ஆய்வு செய்தால், அதனுடைய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது சமூக நீதிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என விளங்கும்.

இத்தகு சூழலில், பார்ப்பனரல்லாத சமூகத்தைச் சார்ந்த தலைவர்களின் எழுத்துக்கள் வாயிலாகவும், ஆங்கிலேயக் கல்வியாளர்கள் வாயிலாகவும்,

பார்ப்பனரல்லாதவர்கள் எல்லாம் இனவழியே திராவிடர்கள் என்ற உணர்வும் வெளியாயிற்று. பார்ப்பனரல்லாத பிரிவினர் தம் நலன்களைப் பாதுகாக்க ஓர் இயக்கத்தை உருவாக்கினர்.

1916 ஆம் ஆண்டு பார்ப்பனரல்லாச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்களில் சிலர், சென்னை மையப் புகைவண்டி நிலையத்தின் அருகில் அமைந்துள்ள விக்டோரியா அரங்கில் தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்பதனைத் தொடங்கினர். அவர்களில் முதன்மையானவர் டாக்டர் நடேச முதலியார் ஆவார். மற்ற இருவர் டி.எம்.நாயர் என அழைக்கப்பட்ட தாராவத் மாதவன் நாயரும், சர். பிட்டி தியாகராய செட்டியும் ஆவர்.

பார்ப்பனரல்லாத சாதி இந்துக்களிடம் அரசியல் உணர்வை ஊட்டுவதே இச்சங்கத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. இந்த அமைப்பு ஆங்கிலத்தில் ‘நீதி’ என்ற செய்தித்தாளையும், தமிழில் ‘திராவிடன்’ என்ற செய்தித்தாளையும் வெளியிட்டது. அதனால் இவ்வமைப்பினர் ‘நீதிக் கட்சியினர்’ என அழைக்கப்படலாயினர்.

சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆளுமை படைத்திருந்த பார்ப்பன இனத்தவருக்கு, அதிலும் கல்வித் துறையிலும், அரசுப் பணிகளிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு அறைகூவலாக இக்கட்சி இருந்தது. எனவே, நீதிக் கட்சியினர் போதுமான எண்ணிக் கைக்கேற்ற பிரதி நிதித்துவம் வேண்டுமென வேண்டினர், போராடினர்.

நீதிக்கட்சியின் தலைவர்கள் விபரமறிந்தவர்களாகவும், மெத்தப் படித்தவர்களாகவும் தங்களது முயற்சி, இலக்கு, தாம் செல்லும் திசை குறித்துத் தெளிந்த உணர்வு கொண்டவர்களாகவும் விளங்கினர். அவர்கள் வெறும் இலட்சிய வாதிகளாக மட்டுமல்லாமல் நடைமுறை அரசியல்வாதிகளாகவும் திகழ்ந்தனர்.

1917 ஆம் ஆண்டு பார்ப்பனரல்லாதார் பேரறிக்கை ஒன்றை இக்கட்சி வெளியிட்டது. டி.எம்.நாயர், தியாகராய செட்டியின் தலைமையில் கட்சி மிக வேகமாக வளர்ந்தது.

1917 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், கோவையில் நீதிக் கட்சியின் மாநில முதல் நாடு நடைபெற்றது. அதன் பிறகு ஆண்டுதோறும் சென்னை மாநிலத்தில் தமிழ், தெலுங்குப் பகுதிகளில் தொடர்ந்து மாநாடுகள் நடைபெற்றன. சட்டசபையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் பார்ப்பனரல்லாத இனத்தினரின் பிரதிநிதித்துவத்தை வென்றடைவது ஒரு முதன்மை குறிக்கோளாக இருந்தது. உண்மையில் நீதிக்கட்சி பார்ப்பனரல்லாதவரிடம் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது.

மாண்டேகு - செம்சுபோர்டு சீர்திருத்தம்

1919-ல் அறிமுகப்படுத்தப்பட்ட மாண்டேகு-செம்சு போர்டு சீர்திருத்தம் இந்திய மாநிலங்களின் சட்ட மன்றங்களின் இயல்பினை மாற்றுவதாக அமைந்திருந்தது. மாநில ஆட்சியின் நிர்வாகத் துறைகள், ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் எனப் பகிர்வு செய்யப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறைகளை ஆளுநரும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினரும் நிர்வகித்தனர். மாற்றப்பட்ட துறையானது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தினரின் பொறுப்பின் கீழ் வந்தது.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு-செம்சுபோர்டு சட்டப்படி அமையப் பெற்ற சட்டமன்றத்திற்கான முதல் பொதுத் தேர்தல் 1920 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளும், டிசம்பர் 1, 2 நாள்களிலும் தேர்தல் நடைபெற்றது. தேர்தலைப் புறக்கணிக்குமாறு தீவிரப் பிரச்சாரத்தைக் காங்கிரஸ் மேற்கொண்டது. காங்கிரஸ், நீதிக் கட்சியை எதிர்த்தது.

நீதிக்கட்சி மாண்டேகு - செம்சு போர்டு சீர்திருத்தங்களை ஏற்க முடிவு செய்தது. தேர்தல் பிரச்சாரத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்கொண்டு பெருவாரி யான வெற்றியும் பெற்றது. 98 இடங்களில் 63 இடங்களைக் கைப்பற்றியது. நியமன உறுப்பினர்களில் இக்கட்சியின் ஆதரவாளர்கள் 18 பேர் இடம் பெற்றனர். 127 பேர் அடங்கிய அவையில் நீதிக்கட்சியின் வலிமை 81 ஆக இருந்தது. பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு இடங்கள் ஒதுக்கியதால் சட்ட மன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் பெற ஒதுக்கீடு வாய்ப்பாக அமைந்தது.

சென்னை மாநில ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபு சர். பி.டி. தியாகராய செட்டியை அமைச்சரவை அமைக்க அழைப்பு விடுத்தார். ஆனால், அழைப்பை ஏற்காத தியாகராயர் கடலூர் ஏ. சுப்பராய ரெட்டியாரை பதவி ஏற்கச் செய்தார்.

இது நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை என்பது மட்டுமல்லாது சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சரவையாகவும் அமைந்தது. 1920 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாள் புதிய அமைச்சரவை பதவியேற்றது. அப்போது முதல் அமைச்சர் என்ற பதவி கிடையாது.

ஆனால் அவர் ஆங்கிலத்தில் பிரிமியர் எனவும் அல்லது முதன்மை அமைச்சர் எனவும் அழைக்கப்பட்டார். அவரின் பரிந்துரையின் பேரில் மாற்றப்பட்ட ஒரு பாதி அதிகாரப் பகிர்வுத் துறைக்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

கல்வி, பொதுப்பணி, கலால், பதிவுத் துறைக்கு பனகல் அரசர் என்றழைக்கப்பட்ட பி.இராமநாயனிங்கர், கூர்மா வெங்கட்ட ரெட்டி, நாயுடு (கே.வி. ரெட்டி நாயுடு) ஆகிய ஆந்திர மாநிலப் பகுதியினர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். உடல்நலக் குறைவினால் மிகக் குறுகிய காலத்திலேயே சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகினார். அவரது இடத்திற்கு ஏ.பி.பாத்ரோ நியமிக்கப்பட்டார்.

அமைச்சரவையில் பார்ப்பனரல்லாதவர்களே முழுவதும் இருந்தனர். அதனால் ஆளுநர் பி.இராஜகோபாலாச் சாரி, பி.சீனிவாச ஐயங்கார், சி.பி.இராம சாமி ஐயர் ஆகியோரை மிக முதன்மைப் பொறுப்புகளில் நியமித்தார். 1921 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12 ஆம் நாள் சென்னை சட்டமன்றம் தொடங்கியது.

நீதிக் கட்சியின் அமைச்சரவை 1923 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் சட்டமன்றத்தின் காலம் முடிவுற்றதால் கலைக்கப்பட்டது. 1923 அக்டோபர் 31 ஆம் நாள் சென்னை மாநில சட்ட மன்றத்துக்கு இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் பல்வேறு காரணங்களினால் நீதிக்கட்சி வலுவிழந்தது.

ஆயினும், சட்ட மன்றத்தில் கூடுதலாக 17 பேர் நீதிக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1923 ஆம் ஆண்டு நவம்பர் 19-ல் இரண்டாவது நீதிக்கட்சி அமைச் சரவை பனகல் அரசர் தலைமையில் அமைந்தது. ஏ.பி.பாத்ரோ, டி.என்.சிவஞானம் பிள்ளை ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். அப்துல்லா கட்டாலா சாகிப் பகதூர், எஸ்.அற்புத சுவாமி உடையார், டி.சி. தங்கவேல் பிள்ளை ஆகியோர் அமைச்சரவை செயலாளராயினர்.

டாக்டர் சி.நடேச முதலியார், ஓ. தணிகாசலம் செட்டி ஆகிய திராவிட இயக்க முன்னோடித் தலைவர்கள் அதிருப்தியுற்று எதிர்முகாம் சென்றனர். இந்தக் கசப்புணர்வு நம்பிக்கையில்லாதத் தீர்மானம் வரை சென்றது. அதுவும் தோற்கடிக்கப்பட்டது. பி. தியாகராய செட்டி 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் மறைந்தார். அவரது மறைவுக்குப் பின் பனகல் அரசர் கட்சிப் பொறுப்பேற்றுக் கட்சிக்குப் புத்துயிர் ஊட்ட முயன்றார்.

டாக்டர் சுப்பராயனின் சுயேச்சை அமைச்சரவை

1926 ஆம் ஆண்டு நவம்பர் 8-ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் 98 இடங்களில் 41 இடங்கள் பெற்றது. அது தனிப் பெருங்கட்சியாக விளங்கியது

நீதிக்கட்சியினர் 21 இடங்களையே பெற்றனர். இந்திய தேசிய காங்கிரஸ் அமைச்சரவை அமைப்பதில்லை என முடிவெடுத்தது. ஆளுநராயிருந்த கோஷ்சன் சுயேச்சை அமைச்சரவை அமைக்க டாக்டர் சுப்பராயனுக்கு அழைப்பு விடுத்தார்.

காங்கிரசின் உதவியுடன் சுயேச்சை அமைச்சரவை பதவியேற்றது. நீதிக் கட்சியினர் எதிர் வரிசையில் இருந்தனர். சைமன் குழு வருகையை ஆதரித்ததன் விளைவால் சுப்பராயன் அமைச்சரவைக்கு ஆபத்து ஏற்பட்டது. வேல்சு இளவரசர் வருகையை எதிர்த்த காங்கிரஸ், தனது ஆதரவை விலக்கிக் கொண்டது. நீதிக் கட்சியினர் சுப்பராயனின் உதவிக்கு வந்தனர். இந்த அமைச்சரவையில் அமைச்சராக இருந்த முத்தையா முதலியார்தான் வகுப்புரிமை ஆணை என்பதை வெளியிட்டுச் சமூக நீதியை நிலைநாட்டினார்.

நீதிக்கட்சியினர் தங்களது செல்வாக்கை வலுப்படுத்திக் கொண்ட நிலையில் தங்களது தலைவர் பனகல் அரசரை 1928 டிசம்பர் 16 ஆம் நாள் இழந்தனர்.

நான்காவது பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்ற போது பி. முனுசாமி நாயுடு தலைமையில் நீதிக் கட்சியை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைத்தார். 1930 அக்டோபர் 27-ல் பி.டி.இராசன் ( பொன்னம்பலம் தியாக ராசன்) டி.குமாரசாமி ஆகியோர் அமைச்சர்களாகப் பங்கேற்றனர்.

நீதிக் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அவர்களுடைய தீர்க்கமான இலட்சியங்களை அடைவதைக் கடினமாக்கின. முனுசாமி நாயுடு பதவி விலகினார். 1932 நவம்பர் 5-ல் ஸ்ரீ தவி வாரு ஸ்ரீ ராமகிருஷ்ண ஸ்வாசாலப்பதி ரெங்காராவ் அவருக்குப் பின் பதவி யேற்றார். அவர் தான் பொப்பிலி அரசர் என அழைக்கப் பெற்றார்.

அவர் சுமார் மூன்றரை ஆண்டுக் காலம் முதன்மை அமைச்சராகப் பதவியிலிருந்தார். உடல்நலக் குறைவின் காரணமாக அவர் பதவி விலகிட நேர்ந்த போது 4.4.1936 முதல் 24.8.1936 வரை பி.டி.இராஜன் முதன்மை அமைச்சரானார். மீண்டும் பொப்பிலி அரசர் 25.8.1936 முதல் 31.3.1937 வரை முதன்மை அமைச்சராய் இருந்தார். 1936 இல் அவரது ஆட்சிக்காலம் முடிந்தாலும் புதிய இந்திய அரசியல் சட்டம் அறிமுகப் படுத்தப்பட்டதால் புதிய ஆட்சியினர் பதவிக்கு வரும் வரை ஆட்சி நீடித்தது. 1935 ஆம் ஆண்டு சட்டத்தின்படி முதன் முதலில் பொதுத் தேர்தல் நான்கு நாட்கள் நடைபெற்றது. 215 இடங்களில் 159 இடங்கள் காங்கிரசுக்கும் 21 இடங்கள் மட்டும் நீதிக் கட்சியினருக்கும் கிடைத்தன. நீதிக் கட்சியின் தோல்வி இது.

தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற காங்கிரஸ் 1935 ஆம் ஆண்டு இந்தியச் சட்டப்படி ஆளுநரிடம் உள்ள கூடுதல் அதிகாரம் குறித்துக் கோரிக்கை வைத்தது. ஆளுநரின் உறுதிமொழி பெற்ற பின்னரே ஆட்சி அமைப்போம் என காங்கிரஸ் கூறியதால் பதவியேற்கத் தாமதமாயிற்று.

அதனால் ஆளுநர் நீதிக் கட்சியைச் சேர்ந்த கே.வி.ரெட்டி நாயுடுவை அமைச்சரவை அமைக்க வேண்டிக் கொண்டார். 1937 ஏப்ரல் 2 ஆம் நாள் முதல் காங்கிரசின் சார்பில் இராஜாஜி முதன்மை அமைச்சராய் பதவியேற்று 1937 ஜூலை 14 வரை ஆட்சியிலிருந்தார்.

1926 முதல் 1929 வரை உள்ள இடைப்பட்ட சுப்பராயனின் ஆட்சிக் காலந்தவிர 1920 முதல் 1937 வரை சென்னை மாநிலத்தை நீதிக் கட்சியினர் ஆட்சி செய்தனர். நீதிக்கட்சி ஆட்சியின் பல நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கன. பொதுப் பணியில் பார்ப்பனரல்லாத வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் முயற்சியினை நீதிக் கட்சி மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. தாழ்த்தப்பட்ட

இனத்தினரின் நிலையை மேம்படச் செய்தல், கல்வித் துறையில் சீர்திருத்தம் முதலியன செய்தன.

வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை 1921, 1922-ல் இயற்றப் பட்ட வகுப்புவாரி பிரதி நிதித்துவ அரசாணைகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு கூடுதல் விகிதத்தில் ஒதுக்கீடுகளைச் செய்தது.

1924-ல் பனகல் அரசரின் அமைச்சரவை உருவாக்கிய பணியாளர் தேர்வு வாரியம் 1929-ல் தேர்வாணையக் குழுவாக உருவெடுத்தது. இத்தகைய அமைப்பு இந்தியாவிலேயே முதலாவதாக அமைந்தது.

இந்து சமய அறநிலையச் சட்டம் எப்பொழுதும் கண்டிராத சமூக, சமய சீர்திருத்த முயற்சியாக நீதிக் கட்சியினரால் 1921-ல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சியானது கோயில் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியதையும், ஊழலின் ஊற்றுக் கண்களையும் வீழ்த்தியது. இச்சட்டத்தின் மூலம் கோவில்கள், மடங்களின் சொத்துக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

பெண்களின் விடுதலைக்கு நீதிக் கட்சியினரே காரணமாயினர். 1.4.1921-ல் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் வழி பெண்கள் விடுதலை இயலக் கூடியதாயிற்று. 1926-ல் தான் ஆளுநர் இச்சட்டத்திற்கு ஒப்புதல் தந்தார். பெண்கள் சட்ட மன்றத்திற்கு நியமிக்கப்படவும், தேர்தலில் போட்டியிடவும் முதன் முதலில் சென்னை அரசே சட்டமியற்றியது இதன் வாயிலாகத் தேர்தலில் பெண்களுக்குப் போட்டியிடத் தகுதியில்லை என்ற நிலை நீங்கியது.

பனகல் ராஜா

பனகல் ராஜா என்று அழைக்கப்படும் சர்.பனகண்டி ராமராயனிங்கர் கே.சி.ஐ.ஐ., காளஹஸ்தியின் ஜமீன்தாராகவும், நீதிக்கட்சித் தலைவராகவும், ஜூலை 11, 1921 முதல் டிசம்பர் 3, 1926 வரை மெட்ராஸ் பிரசிடென்சியின்

முதல்வர் அல்லது பிரதமராகவும் இருந்தார். ராமராயனிங்கர் ஜூலை 9 அன்று காளஹஸ்தியில் பிறந்தார். , 1866. மதராஸில் பள்ளிப்படிப்பை முடித்த அவர், அரசியலில் மூழ்குவதற்கு முன்பு சமஸ்கிருதம், சட்டம், தத்துவம் மற்றும் திராவிட மொழிகளில் பட்டம் பெற்றார். அவர் நீதிக்கட்சியின் நிறுவனர்-உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார் மற்றும் 1925 முதல் 1928 வரை அதன் தலைவராக பணியாற்றினார்.

டிசம்பர் 17, 1920 முதல் ஜூலை 11, 1921 வரை, ஏ.சுப்பராயலு ரெட்டியார் தலைமையிலான முதல் நீதிக்கட்சி அரசில் ராமராயனிங்கர் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றினார். அவர் ஜூலை 11, 1921 முதல் டிசம்பர் 3, 1926 வரை மெட்ராஸ் பிரசிடென்சியின் முதலமைச்சராக பணியாற்றினார். அவர் தனது பதவிக்காலத்தில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். சென்னை தியாகராய நகர் பகுதி அவரது முதல்வராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டது. 1926 ஆம் ஆண்டு சென்னை லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலுக்கு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி பெரும்பான்மையைப் பெறத் தவறியதால் ராமராயனிங்கர் 1926 இல் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். இருப்பினும், அவர் தொடர்ந்து அரசியலில் தீவிரமாக இருந்தார் மற்றும் டிசம்பர் 16, 1928 இல் அவர் இறக்கும் வரை நீதிக்கட்சியின் தலைவராக பணியாற்றினார்.

ராமராயனிங்கர் ஜனநாயகத்தின் வக்கீலாகவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அதிகாரமளிப்பதில் தீவிர ஆதரவாளராகவும் கருதப்பட்டார். 1930 களின் நடுப்பகுதியில் நீதிக்கட்சியின் வீழ்ச்சிக்கு அவரது மரணத்திற்குப் பிறகு நீதிக்கட்சியில் கவர்ச்சியான தலைவர்கள் இல்லாததே வரலாற்றாசிரியர்கள் பொதுவாகக் காரணம்.

ஆரம்ப வாழ்க்கை ராமராயனிங்கர் நிலப்பிரபுக்களின் குடும்பத்தில் பிறந்தார். அவர் வேலமா சமூகத்தைச் சேர்ந்தவர். வேலமக்கள் தெலுங்கு

நாட்டில் குடியேறிய ஆரம்பகால க்ஷத்திரியர்கள் என்று கூறுகின்றனர். ராமராயனிங்கரின் குடும்பம், குறிப்பாக, பிராமணர்களை ஆதரித்தது மற்றும் ராஜா தனது ஆரம்பக் கல்வியை சிபி ராமஸ்வாமி ஐயரின் மாமனார் காலமூர் சுந்தர சாஸ்திரியின் வீட்டில் பெற்றார். அவர் 1886 ஆம் ஆண்டில் டிரிப்ளிகேன் உயர்நிலைப் பள்ளியில் தனது பள்ளிப் படிப்பை முடித்தார் மற்றும் 1893 ஆம் ஆண்டில் பிரசிடென்சி கல்லூரியில் சமஸ்கிருதத்தில் மேம்பட்ட வேதியியலை விருப்பப் பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றார். அவர் 1899 இல் BL மற்றும் MA (தத்துவம் மற்றும் திராவிட மொழிகள்) இல் பட்டம் பெற்றார். 1919 இல், அவர் பிரசிடென்சி கல்லூரியின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஆரம்பகால அரசியல் வாழ்க்கை

ராமராயனிங்கர் வட ஆற்காடு மாவட்ட வாரியத்தில் நியமிக்கப்பட்டபோது அரசியலில் தனது முதல் சுவையைப் பெற்றார். 1912 இல், அவர் இந்திய இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலுக்கு பரிந்துரைக்கப்பட்டார் மற்றும் தென்னிந்தியாவின் நிலப்பிரபுக்கள் மற்றும் ஜமீன்தார்களை பிரதிநிதித்துவப்படுத்தினார். அவர் 1915 வரை சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றினார். இந்த, ராமராயனிங்கர் வைஸ்ராய், ஹார்டிங் பிரபுவின் பாராட்டைப் பெற்றார். இந்து சமுதாயத்தில் சீர்திருத்தங்களை தீவிரமாக ஆதரித்தார். 1914 இல், ராமராயனிங்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலனுக்காக தனி மாகாணத் துறைகளை உருவாக்குவதற்கான சட்டத்தை முன்வைத்தார். 1915 இல், அவர் மூன்றாவது ஆந்திர காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1914 ஆம் ஆண்டு சென்னை திராவிடர் கழகம் சி.நடேச முதலியார் அவர்களால் நிறுவப்பட்டது. சங்கத்தின் முதல் தலைவராக ராமராயனிங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜூலை 19, 1917 அன்று, ராமராயனிங்கார் தலைமையில்

கோயம்புத்தூரில் நடந்த மாநாட்டில், நான்கு பல்வேறு பிராமணரல்லாத சங்கங்கள் ஒன்றிணைந்து தென்னிந்திய லிபரல் கூட்டமைப்பை உருவாக்கின, இது அதிகாரப்பூர்வமற்ற முறையில் நீதிக்கட்சி என்று கூறப்பட்டது. 1921 இல், இராமராயனிங்கர் கூர்மா வெங்கட ரெட்டி நாயுடு மற்றும் கோகா அப்பா ராவ் நாயுடு ஆகியோருடன் இங்கிலாந்தில் உள்ள அதிகாரிகளுக்கு நீதிக்கட்சியின் சார்பாக பரப்புரை செய்ய அனுப்பப்பட்டார்.

அகில இந்திய பிராமணரல்லாதார் இயக்கத்திலும் ராமராயனிங்கர் செயல்பட்டார். அவர் ஷாஹு மஹாராஜின் நண்பராக இறந்தார் மற்றும் முன்னாள் சத்ய ஷோதக் சமாஜுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 1924 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி பெல்காமில் நடைபெற்ற அகில இந்திய பிராமணரல்லாதோர் மாநாட்டில் கலந்துகொண்ட அவர், மே 25, 1925 அன்று சென்னை விக்டோரியா ஹாலில் நடைபெற்ற இரண்டாவது அகில இந்திய பிராமணரல்லாத மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

1919 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் நிறைவேற்றப்பட்டது, வரலாற்றில் முதல் முறையாக சென்னை மாகாணத்தில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நீதிக்கட்சி தேர்தலில் போட்டியிட ஒருமனதாக முடிவு செய்து மாகாணத்தில் ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. அ.சுப்பராயலு ரெட்டியார் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சரானார். ராமராயனிங்கர் சுப்பராயலு ரெட்டியார் அரசில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றினார். சுப்பராயலு ரெட்டியார் உடல்நலக் காரணங்களைக் கூறி ராஜினாமா செய்தபோது, ராமராயனிங்கர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

சென்னையின் முதலமைச்சராக

ராமராயனிங்கர், ஜூலை 11, 1921 முதல் டிசம்பர் 3, 1926 வரை சென்னையின் முதலமைச்சராகப் பணியாற்றினார். சுப்பராயலு ரெட்டியார்

ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பெர்ஹாம்பூரின் ஏ.பி. பட்ரோ நியமிக்கப்பட்டார், மேலும் அவர் கல்வி இலாகாவை ஏற்றுக்கொண்டார்.

நீதிக்கட்சியின் தலைவராக

தியாகராய செட்டி, நீதிக்கட்சியின் நிறுவனர்-தலைவர் 1925 இல் இறந்தார், மேலும் அப்போதைய சென்னையின் முதல்வர் ராஜா, செட்டிக்குப் பிறகு நீதிக்கட்சியின் இரண்டாவது தலைவராக ஆனார். ராஜா 1928 இல் இறக்கும் வரை கட்சியின் தலைவராக பணியாற்றினார்

பொலினி முனுசாமி நாயுடு ராமராயனிங்கர் ஜூன் 5, 1926 அன்று இந்தியப் பேரரசின் நைட் கமாண்டர் ஆனார். நவம்பர் 8, 1926 அன்று நடந்த சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியும் தனிப்பெரும்பான்மை பெற முடியவில்லை. ஸ்வராஜ்ய கட்சி 98 இடங்களில் 41 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது, நீதிக்கட்சி 21 இடங்களை வென்றது. மக்கள் தீர்ப்பு நீதிக்கட்சிக்கு எதிராக இருந்ததால் ராஜா ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்தார். எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காதாலும், தனிப்பெரும் கட்சியாக இருந்த சுயராஜ்யக் கட்சி ஆட்சி அமைக்கத் தயங்கினாலும், ஆளுநர் பி.சுப்பராயனை சுயேச்சையாக முதல்வராக நியமித்து, அவருக்கு ஆதரவாக 34 உறுப்பினர்கள் கவுன்சிலுக்கு நியமித்தார்.

1927 ஆம் ஆண்டில், மாண்டேகு-செல்ம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களின் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடப்பட்ட சைமன் கமிஷன் இந்தியாவில் இறங்கியது. சுயராஜ்யக் கட்சி ஆணையத்தைப் புறக்கணிப்பதற்கான தீர்மானத்தை முன்வைத்தது, இது 61 முதல் 50 வரை நிறைவேற்றப்பட்டது, 12 பேர் நடுநிலையுடன் இருந்தனர். நீதிக்கட்சி மற்றும் சுயராஜ்ஜியவாதிகள் தீர்மானத்தை ஆதரித்தனர், முதல்வர் பி. சுப்பராயன் அதை எதிர்த்து தனது அமைச்சர்களை ராஜினாமா செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். இருப்பினும்,

ஆளுநராக இருந்த லார்ட் கோசென், நீதிக்கட்சி உறுப்பினரான எம். கிருஷ்ணன் நாயரை கேபினட் அமைச்சராக்குவதன் மூலம் பனகல் ராஜாவின் ஆதரவைப் பெற முடிந்தது. பனகல் ராஜா தலைமையிலான நீதிக்கட்சி சுப்பராயன் அரசுக்கு ஆதரவை வழங்கியது. விரைவில், நீதிக்கட்சி சைமன் கமிஷனை வரவேற்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. சைமன் கமிஷன் பிப்ரவரி 28, 1928 மற்றும் பிப்ரவரி 18, 1929 இல் சென்னைக்கு விஜயம் செய்தது மற்றும் சுயராஜ்யக் கட்சி மற்றும் இந்திய தேசிய காங்கிரஸால் புறக்கணிக்கப்பட்டது. இருப்பினும், நீதிபதிகள் மற்றும் சுப்பராயன் அரசு ஆணையத்திற்கு அன்பான வரவேற்பு அளித்தது

ராமராயனிங்கர் டிசம்பர் 16, 1928 அன்று காய்ச்சலால் இறந்தார். அவரைத் தொடர்ந்து பி.முனுசாமி நாயுடு நீதிக்கட்சியின் தலைவராகப் பதவியேற்றார். அவரது மறைவுக்கு, முன்னணி நாளிதழ்களும், பத்திரிக்கைகளும் அவரைப் பாராட்டி வருகின்றன. ராஜாவின் அரசியல் எதிரியான எஸ். சீனிவாச ஐயங்கார் அவரைப் பற்றி கூறினார்:

ப.சுப்பராயன்

இன்றைய நாமக்கல் மாவட்டத்தில் உள்ள குமாரமங்கலத்திற்கு அருகில் உள்ள போக்கம்பாளையத்தில் பரமசிவம் – பாவாயி தம்பதியருக்கு மகனாக 1889 செப்டம்பர் 10 அன்று பிறந்தார் ப.சுப்பராயன். இவரின் குடும்பம் குமாரமங்கலத்தின் ஜாமீன்தாரரர் குடும்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழகத்தில் சட்டப் பயிற்சி பட்டமும் படித்தார். 1918-ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

அவர் தன்னோடு படித்த ராதாபாயை திருமணம் செய்து கொண்டார். இந்திய பொதுவுடைமைக் கட்சியில் இருந்து நான்கு முறை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாரதி கிருஷ்ணன் இவரது மகளாவார். மேலும் பொதுவுடைமை இயக்கத்தில் இருந்து பின்னர் காங்கிரசில் இணைந்து இந்திரா காந்தியின் நம்பிக்கைக்குரிய அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம் இவரது மகன் ஆவார். மேலும் கோபால் குமாரமங்கலம், பரமசிவ பிரபாகர் குமாரமங்கலம் என இவருக்கு மூன்று மகன்கள்.

நிலச்சுவான்தார்களின் சார்பாக சென்னை மாகாண சட்டப்பேரவைக்கு 1922-ம் ஆண்டு சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்பட்டார். பார்ப்பனர் அல்லாதார் அரசியலில் ஈடுபாடு கொண்ட இவரது அரசியல் செயல்பாடு நீதிக்கட்சியை ஆதரித்தும், எதிர்த்தும் இருந்தது.

நீதிக்கட்சி ஆதரவில் பதவியேற்ற சுப்பராயன்

1926-ம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியடைந்து, சுயராஜ்ஜிய கட்சியும் ஆட்சி அமைக்க முடியாத சூழல் ஏற்பட்டு, சுயேச்சை அமைச்சரவை பதவி ஏற்றபோது சுப்பராயன் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். சுயாராஜ்ஜிய கட்சி இவருக்கான ஆதரவை விலக்கிக் கொண்டபோது, நீதிக்கட்சியின் ஆதரவில் சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவை வரலாற்றில் மிக முக்கியமான சாதனைகளை நிகழ்த்தியது.

சட்டசபைக்கு முதல் பெண் உறுப்பினர்

சென்னை மாகாண சட்டசபைக்கு முதன்முதலாக தேர்தல் மூலமாகவோ, நியமனம் மூலமாகவோ பெண் ஒருவரை சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கும் முடிவும் எடுக்கப்பட்டது. மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டியை முதல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினராக நியமித்த பெருமை சுப்பராயன் தலைமையிலான

அரசுக்கு உண்டு. அதே முத்துலட்சுமி ரெட்டி 25.1.1927 அன்று துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்து சமய அறநிலையத் துறை பாதுகாப்பு சட்டம்

இந்து சமய கோயில்கள் வரைமுறையற்று உயர் சாதிக் குழுக்களாலும், நிலப்பிரபுக்களாலும் மட்டுமே ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சூழலை மாற்றி, அனைத்து தரப்பு மக்களுக்குமான இடங்களாக கோயில்களை மாற்றி, அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்காக 'அறநிலையத்துறை பாதுகாப்பு சட்டம்' நீதிக்கட்சியின் பனகல் அரசர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. ஆனால் அது பல்வேறு எதிர்ப்புகளின் காரணமாக நடைமுறைப்படுத்த முடியாமல் நிலுவையில் இருந்தது. வைசிராயின் ஒப்புதலைப் பெற்று அந்த சட்டத்தினை 1927 ஜனவரி 24 அன்று நடைமுறைப்படுத்தியது சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவையே.

இட ஒதுக்கீடு ஆணை

கம்யூனல் ஜி.ஓ என்று சொல்லப்படக் கூடிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை, இவரது தலைமையிலான அமைச்சரவை தான் நடைமுறைப்படுத்தியது.

சுப்பராயன் ஆட்சிக் காலத்தில்தான் கோயில்களில் பின்பற்றப்பட்டு வந்த தேவதாசி முறையை ஒழிப்பதற்கு சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தை சட்டமன்றத்தில் முன்மொழிந்தவர் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி.சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பார்ப்பனரல்லாத மாணவர்களை சேர்ப்பதற்கான உத்தரவு பிறப்பித்ததும் சுப்பராயன் அமைச்சரவை தான்.

சூத்திர பட்டம் நீக்கம்

அரசாங்கத்தின் பதிவேடுகளில் 'சூத்திரன்' என்ற இழி பட்டத்தை நீக்குகிற பணியையும், சுப்பராயன் தலைமையிலான அமைச்சவரவை செய்தது.

ஆதி திராவிடர் கோயில் நுழைவு மசோதா

அரசுத் தலைமையில் இருந்து மட்டுமல்ல, நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் எதிர்க் கட்சி வரிசையில் இருந்த டாக்டர் சுப்பராயன் 2.11.32 அன்று ஆதி திராவிடர்கள் கோயில் நுழைவு மசோதா ஒன்றை கொண்டு வந்தார். அந்த மசோதா சட்டசபையில் தாக்கல் செய்வதற்கு முன்பே, பெரியார்அதை ஆதரித்து “குடி அரசு” பத்திரிக்கையில் ஒரு தலையங்கம் எழுதினார். அதில் நீதிக் கட்சியினரையும் அம்மசோதாவை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

நீதிக் கட்சியின் சார்பில் டாக்டர் நடேச முதலியார் அந்த மசோதாவினை ஆதரித்துப் பேசினார். இரட்டைமலை சீனிவாசன், என்.சிவராஜ் ஆகியோர் பேசிய பின்பு அந்த மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. மசோதாவை ஆதரித்து 56 பேர் வாக்களித்தனர். 19 பேர் நடுநிலையாக இருந்தனர். எதிர்ப்பே இன்றி தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

ராஜாஜியின் அமைச்சரவையில் கல்வியமைச்சராக இருந்தவர் சுப்பராயன். காங்கிரஸ் முன்னெடுத்த ’வெள்ளையனே வெளியேறு’ உள்ளிட்ட போராட்டங்களில் பங்கெடுத்து சிறை சென்றார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகவும் இந்தியாவின் முதல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், நேருவின் அமைச்சரவையில் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும், இந்தோனேசியவிற்கான இந்தியத் தூதராகவும், மகாராஷ்டிர மாநில ஆளுநராகவும், காங்கிரசின் முக்கிய தலைவாரகவும் என பல பதவிகளை வகித்தார்.

மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆளுநராக பதவியில் இருந்தபோதே 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மரணம் அடைந்தார். பல பொறுப்புகளை வகித்திருந்தாலும் அவர் நீதிக் கட்சி ஆதரவில் முதல்வராக இருந்தபோது

நிகழ்த்திய பெண் உரிமை, சமூக நீதி உள்ளிட்ட களங்களின் பங்களிப்பு மட்டுமே அவரது வரலாற்றுப் பெருமையாக இருக்கும்.

**பொப்பிலி அரசர**

பொப்பிலி அரசர் ஆட்சி நீதிக்கட்சி ஜமீன்தார் ஆதரவு குழு, ஜமீன்தார் எதிர்ப்புக் குழு என்று இரு கோஷ்டிகளாகப் பிரிந்து பூசல்களில் முழு மூச்சுடன் நம்பிக்கையும் அதிகரித்தது. இரட்டை ஆட்சியைத் தொடர்ந்து எதிர்த்து வந்த சுயராஜ்யக் கட்சி சத்தியமூர்த்தியின் திறமையான தலைமையின் கீழ் தேர்தலில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தது. இந்நிலையில் நீதிக்கட்சி தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்தது:

- நீதிக்கட்சியில் பிராமணர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளல்
- சுயமரியாதை இயக்கத்தை (ளுநடக-சுநளிநஉவ ஆழஎநஅநவெ)

வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த நடைமுறைப்படுத்தல் அனைத்து நிர்வாக அமைப்புகளுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்தல். இருப்பினும் நீதிக்கட்சி 1934 சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்தது. சுயராஜ்யக் கட்சி 29 இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் திகழ்ந்தது. எனினும், அக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்க மறுத்துவிட்டதால் பொப்பிலி அரசர் தொடர்ந்து முதலமைச்சராக நீடித்தார்.

**ஆட்சியின் வீழ்ச்ச**

பொப்பிலி அரசர் சிறுபான்மை அரசாங்கத்தின் முதல்வராக நீடித்தாலும் நீதிக்கட்சியின் வீழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை. நீதிக்கட்சியின் தலைமைக் கொறடா (ஊாநைக றூாி)வாக இருந்த எம்.ஏ.முத்தையா செட்டியார் அவரது ஆதரவை விலக்கிக் கொண்டதால ் ஆர்.கே.சண்முகம் செட்டியும், ஆர்க்காடு இராமசாமி முதலியாரும் தேர்தலில் தோற்க நேர்ந்தது. எனவே பொப்பிலி அரசர் எம்.ஏ.முத்தையா செட்டியாரை கட்சியின் தலைமைக் கொறடா பதவியிலிருந்து நீக்கினார். அதனால் ஆத்திரமடைந்த செட்டியார் பொப்பிலி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக எ.குமாரசாமி ரெட்டியாருக்கு பதில் எம்.ஏ.முத்தையா செட்டியாரைக் கல்வி அமைச்சராக்கினார். பிறரைத் திருப்திப்படுத்து வதற்காக புதிதாக உள்துறை அமைச்சரகத்தை ஏற்படுத்தி அதில் முகமது உஸ்மானையும், பின்னர் ஏ.டி.பன்னீர் செல்வத்தையும் அமைச்சர்களாக நியமித்தார். பொப்பிலி அரசரின் யதேச்சாதிகாரப் போக்கு நீதிக்கட்சியினரிடையே அதிருப்தியை அதிகரித்து விட்டது.

கட்சி முக்கியஸ்தர்களே அவரை நேரில் பார்த்துப ் பேச முடியவில்லை. தன்னை எதிர்த்தவர்களையும், அவருடன் ஒத்துப்போகாத உள்ளாட்சி நிறுவனங்களையும் ஒடுக்க முற்பட்டார். இதற்காக உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (டுழஉயட டீழயசனள யுஉவ) திருத்தப்பட்டது. தாலுகா போர்டுகள் கலைக்கப்பட்டன. தனக்கு வேண்டாத ஒரு மாவட்ட மன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அவரோடு ஒத்துழைக்காத பிற மாவட்ட மன்றங்களையும் பிரிப்பதற்கான முயற்சிகள ் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று அவரது அதிகாரத்துக்குக் கீழ்ப்பணியாத நகராட்சி மன்றங்கள் முடக்கப்பட்டன் தனக்கு வேண்டாத நகராட்சி மன்றத் தலைவர் தண்டிக்கப்பட்டனர். கமிஷனர்களை நியமிப்பதன் மூலம் இம்மன்றங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தப்பட்டது. சுருங்கக்கூறின்,

நீதிக் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு ஊற்றுக் கண்களாக இருந்த உள்ளாட்சி நிறுவனத ் தலைவர்களை விரோதித்துக் கொண்டார் பொப்பிலி அரசர். அதுமட்டுமல்ல. ஜமீன்தாரியல்லாத நிலப் பகுதிகளில் அதீதமான நிலவரியைக் குறைக்க விடாப்பிடியாக மறுத்துவிட்டார ். பொருளாதார நெருக்கடியில் உழன்று கொண்டிருந்த விவசாயிகளும், நிலச் சொந்தக்காரர்களும் பொப்பிலி அரசரின் விவேகமற்ற நடவடிக்கைகளால பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதன் காரணமாக இவர் கிராம மக்களின் ஆதரவை இழந்தார்.

**காங்கிரசின் செல்வாக்கு**

இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்திய அகில இந்திய காங்கிரசின் செல்வாக்கு மக்களிடையே விரைந்து பரவிக் கொண்டிருந்த சமயத்தில் பொப்பிலி அரசர் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு நிலவரியைக் குறைக்கக் கோரி காங்கிரசார் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகள் காங்கிரசின் மக்கள் செல்வாக்கை அதிகரிக்கவே செய்தன. எளிய உடை அணிந்து நாட்டு விடுதலைக்காக காங்கிரஸ்காரர்கள் போராடிக் கொண்டிருக்கையில் நீதிக்கட்சி முதலமைச்சரும், பிற அமைச்சர்களும் அதிக ஊதியம் பெற்றுக் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்ததை மக்கள் வெறுப்போடு பார்த்தனர் பத்திரிகைகள் கண்டித்தன. சுருங்கக்கூறின், பொப்பிலி அரசர் அடக்குமுறையை விதைத்து மக்களின் வெறுப்பை அறுவடை செய்தார்.

நீதிக்கட்சி மீண்டும் தலைதூக்க முடியாத அளவுக்கு 1934 சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அதன்பின் எதிர்க்கட்சியாக செயல்பட்டு வந்த நீதிக்கட்சி 1938 டிசம்பர் 29 ஆம்

தேதியிலிருந்து 1944 ஆகஸ்டு 27 ஆம் தேதி வரை பெரியாரின் தலைமையின் கீழ் செயல்பட்டது. பெரியார் தனியாகத் திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்த பின்னர் (1944) நீதிக்கட்சி பி.இராமச்சந்திர ரெட்டியின் தலைமையின் கீழும் (1944-1945), பி.டி. இராஜன் தலைமையிலும் (1945-1957) பெயரளவுக்கு நீடித்தது. அதன்பின் நீதிக்கட்சி தமிழ்நாட்டு அரசியல் வானிலிருந்து மறைந்துவிட்டது. நீதிக்கட்சி பிராமணர் எதிர்ப்பு அமைப்பா? நீதிக்கட்சியின் பிராமணர் கொள்கை துவக்கத்திலிருந்தே தெளிவில்லாமல் இருந்தது.

டாக்டர் டி.எம்.நாயர் மட்டுமே ஆதிகால ஆரியர்கள் “தூங்கும்போது நுழைந்த திருடர்களைப் போன்றவர்கள்“ என்றும், அவர்களுடைய வாரிசுகளே பிராமணர்கள் என்றும், ஆரியர் களமும் திராவிடர் களமும் இருவேறு இனங்கள் என்றும் பகிரங்கமாகப் பேசினார். பொதுவாக நீதிக்கட்சித் தலைவர்கள் அரசாங்கப் பதவிகளில் பிராமணர் ஆதிக்கத்தை எதிர்த்தார்களேயன்றி பிராமணர்களை விரோதித்துக் கொள்ளவில்லை. நீதிக்கட்சி துவக்கப்பட்ட போது கட்சிக் கூட்டங்களில் பிராமணர்கள் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டனர். 1926 தேர்தல் தோல்விக்குப் பிறகு பிராமணர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1929 அக்டோபர் மாதம் கூடிய நீதிக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்னர் நெல்லூரில் கூடிய 11வது கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. முனுசாமி நாயுடு, பாட்ரோ போன்ற நீதிக்கட்சித் தலைவர்கள இத்தீர்மானத்துக்கு ஆதரவாக இருந்தனர். ஆனால் பெரியார் ஆர்.கே.சண்முகம் செட்டியார் போன்றோர் இப்போக்கைக் கடுமையாக எதிர்த்தனர். 1930களில் நீதிக்கட்சியின் செல்வாக்கு சரிந்தபோது

1934 ஆகஸ்டு மாதம் நீதிக்கட்சி அதன் கதவுகளைப் பிராமணர்களுக்குத் திறந்துவிட்டது. பெரியார் முஸ்லீம்களும் பிற சிறுபான்மை வகுப்பினரும ் அந்த வாக்குறுதியை நம்பினர் நீதிக்கட்சியை ஆர்வத்துடன் ஆதரித்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே நீதிக்கட்சி செட்டியார், முதலியார், நாயுடு, பிள்ளை போன்ற உயர் சாதியினரின் கோட்டை என்ற எண்ணம் சிறுபான்மையினரிடையே எழுந்தது. சட்டமன்ற உறுப்பினர் அப்பா அலிகான் ஒரு முஸ்லீமுக்குக்கூட அமைச்சரவையில் இடம் தரவில்லை என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார் (1923).

டாக்டர் டி.எம்.நாயர் இறந்தபின் ஆதி திராவிடர்களின் நலன் புறக்கணிக்கப்பட்டது. “புளியந்தோப்பு நிகழ்ச்சிகள்“ என்று அழைக்கப்பட்ட பி அன்டு சி மில் வேலைநிறுத்தம் (டீ யனெ ஊ ஆடைட ளுவசமைந) பிராமணரல்லாத உயர்

வகுப்பாருக்கும் ஆதி திராவிடர்களுக்குமிடையே பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டது. சுருங்கக்கூறின், சென்னை இராஜதானியிலிருந்த சிறுபான்மையினர் மலையை எதிர்பார்த்து மலை எலியைக்கூட பெறவில்லை. நீதிக்கட்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவுடன் பிராமணரல்லாதார் நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட பிராந்திய அரசியல் அமைப்பாகும். துவக்கத்திலிருந்தே நீதிக்கட்சியினர் பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் என்பதை வெளிப்படையாகவே கூறி வந்தனர். அவர்கள் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தையும், காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தையும் எதிர்க்கத் தயங்கவில்லை. நீதிக்கட்சி ஜாலியன் வாலாபாத் படுகொலையைக்கூட கண்டிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. நீதிக்கட்சியினர் தேசியவாதிகளா? அல்லது தேச விரோதிகளா? என்ற வினா விவாதிக்கப்பட்டது. நீதிக்கட்சியினர் தேச விடுதலைப் போராட்ட நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று அந்நிய அரசாங்க ஆதரவுடன் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தனர். அந்த நோக்கம் நிறைவேறிய பின் நீதிக்கட்சி சரிவுப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது. நீதிக்கட்சியினர பிராந்தியவாதிகளேயன்றி தேசியவாதிகள் அல்லர்.

**நீதிக்கட்சியின் சாதனைகள**

நீதிக்கட்சியின் எழுச்சி தற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றின் திருப்புமுனை நிகழ்ச்சியாகும். சென்னை இராஜதானியின பிராமணரல்லாதார் சார்பாகத் துவக்கப்பட்ட முதல் அரசியல் அமைப்பு நீதிக்கட்சி தான். இக்கட்சியின் சாதனைகள் வருமாறு:

- நீதிக்கட்சி குரல் இல்லாதிருந்த பிராமணரல்லாதாரின் குரலாக ஒலித்தது. இக்கட்சியின் குறிக்கோள்கள் பிராமணரல்லாதோர் பிரகடனத்தின் மூலம் தெளிவாக்கப் பட்டது. கட்சிப் பத்திரிகைகள் மூலம் இக்குறிக்கோள்கள் மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது.
- நீதிக்கட்சியின் சட்டச் சாதனைகளில் முதல் முக்கியத்துவம் வாய்ந்தது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாங்க ஆணையாகும். இந்த ஆணையின் அடிப்படையில் தான் பிற்கால இட ஒதுக்கீட்டுக் கொள்கைகள் வகுக்கப்பட்டன.
- இந்து மத அறக்கட்டளைச் சட்டம் இந்து கோயில்களை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த புரட்சிகரமான சீர்திருத்தமாகும்.
- பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது பெண்ணுரிமை வழங்கப்பட்டதற்கான முதல் முன்னேற்ற நடவடிக்கையாகும்.

- சென்னை மாநகராட்சி துவக்கிய இலவச உணவுத் திட்டத்துக்கு சட்ட அங்கீகாரம் அளித்தது. பின்னர் வந்த அரசாங்கங்கள் விரிவுபடுத்திய பள்ளி மதிய உணவுத் திட்டங்களுக்கான அடித்தளமாகும்.
- பஞ்சமர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதி திராவிடர் என்று பெயரிட்டு சமுதாய அங்கீகாரம் அளித்தது நீதிக்கட்சியின் துணிச்சல் மிக்க சமூக சீர்திருத்தச் செயலாகும்.
- உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் மூலம் தமிழ் நாட்டின் பாரம்பரிய புல்லிதழ் ஜனநாயக அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்டப்பட்டது. இந்த நிறுவனங்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற முயற்சி தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்ட பாராட்டுக்குரிய புதுவழியாகும்.
- தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்த வீடு கட்டிக் கொள்வதற்காகப் பட்டா மனைகள் வழங்கும் திட்டத்தை நீதிக்கட்சி அறிமுகப்படுத்தியது.
- மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி தொழில்மயமாவதில்தான் உள்ளது என்பதை நன்குணர்ந்த நீதிக்கட்சி சென்னை மாநில தொழிற்சாலைகளுக்கு உதவச் சட்டத்தை (ஆயனசயள ளுவயவந யுனை வழ ஐனௌரளவசநைள 1922) நிறைவேற்றியது. இது தொலைநோக்குடைய பொருளாதாரத் திட்டமாகும்.

நீதிக்கட்சியின் துவக்ககால நடவடிக்கைகளின் விளைவாக மாநில மக்களிடையே, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே தன்மான உணர்வும், உரிமை வேட்கையும், வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற எண்ணமும் வேர்விட்டு வளரலாயிற்று. நீதிக்கட்சி ஆட்சியின் கீழ் சென்னை வரலாறு காணாத வளர்ச்சி அடைந்தது. சென்னை நகரத் திட்ட சட்டம் (ஆயனசயள வுழறெ ீடயளெைபெ யுஉவ 1920) செயல்படுத்தப் பட்டதன் விளைவாக பல குடியிருப்புக் காலனிகள் உருவாக்கப்பட்டன. நீண்ட நுங்கம்பாக்கம் நீர்நிலை அமைக்கப்பட்டது. மர்மலான் கிராமம், மாம்பலம் ஆயிற்று தியாகராய நகர் என்ற பெயர் பெற்றது. சென்னை நகரின் மையப்பகுதியில் பனகல் பூங்கா புன்னகைத்தது. உஸ்மான் ரோடு, ஹபிபுல்லா ரோடு, தணிகாசலம் ரோடு, நடேசன் பூங்கா, பாண்டி பசார் போன்றவை நவநாகரிக அடையாளங்களாயின. மருத்துவப் படிப்புக்காக இந்திய மருத்துவப் பள்ளி (ஐனெயைெ ளுஉாழழட ழக ஆநனனைஉைநெ) துவக்கப்பட்டது. சிவஞானம் பிள்ளைக் குழுவின் (1926 மார்ச் 22) பரிந்துரையின் பேரில்தான் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது (1929). தமிழ் நாட்டில் இரட்டை ஆட்சிக் காலம் (னுலயசஉால) முழுவதையும் நீதிக்கட்சி ஆக்கிரமித்துக் கொண்டது.

**இரட்டை ஆட்சியின் கீழ் நிர்வாகப் பொறுப்புகள் இரு கூறுகளாக**

1) பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகள் (வுசயளெகநசசநன ளூரடிதநஉவள)

2) ஒதுக்கப்பட்ட துறைகள் (சுநளநசஎநன ளூரடிதநஉவள).

கல்வி, பொதுப் பணிகள், விவசாயம், உள்ளாட்சி, பொது சுகாதாரம், மருத்துவ நிர்வாகம், தொழில் கல்விவளர்ச்சி-ஆராய்ச்சி போன்ற துறைகள் பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகளாகும். அதேபோன்று, காவல், நீதி நிர்வாகம், நில வருவாய், சிறைகள், தொழில் தகராறுகளைத் தீர்த்தல் போன்றவை ஒதுக்கப்பட்ட துறைகளாகும். நீதிக்கட்சி பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது. நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிலையான அரசாங்கத்தை (ளுவயடிடந புழஎநசஅநவெ) அமைத்துச் செயல்பட்டது. அதன் விளைவாக சில ஆரோக்கியமான ஜனநாயக வழக்காறுகள் (னுநஅழஉசயவஉை ஊழஎநவெழைளெ) பின்பற்றப்பட்டன:

- மக்கள் நலம் சம்மந்தப்பட்ட துறைகளை நிர்வகிக்கும் அனுபவம் கிடைத்தது
- ஆளுநர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியின் தலைவரை அரசாங்கம் அமைக்க அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது.
- அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு (ஊழடடநஉவளைந சுநளிழளெiடிடைவைல), அமைச்சரவை சட்ட சபைக்குப் பொறுப்பானது போன்ற பிரிட்டிஷ் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.
- சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும்-சுயராஜ்யக் கட்சியினர் உட்படசட்ட சபையின் முடிவுக்குக் கட்டுப்படல் என்ற வழக்கம் நடைமுறைக்கு வந்தது.
- ஆளும் கட்சி-எதிர்க்கட்சி தொடர்பு ஜனநாயக அரசியல் பண்புக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக அமைந்தது.
- கட்சிக் கொறடா (ீயசவல றூினி) சட்டமன்றத்துக்குள் கட்சிக் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் பழக்கம் வழக்கத்துக்கு வந்தது. இந்திய அரசியல் சமூகவியலை (ீழடவைஉையட ளுழஉழைடழபல) ஆழ்ந்து ஆய்வு செய்த ஆர்.பாஸ்கரன் பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னை இராஜதானியில் மட்டுமே இரட்டை ஆட்சி வெற்றிகரமாக செயல்பட்டது என்று கூறுகிறார்.

**சென்னை மாகாண பிராமணர் அல்லாதார் சங்கம் - 1909**

- பிராமணர் அல்லாத மக்களின் நலனை உறுதி செய்ய - முன்னேற்றம் குறித்து விவாதித்த பி.சுப்பிரமணியம், எம்.புருஷோத்தம நாயுடு என்ற இரண்டு

வழக்கறிஞர்கள் முயற்சியால், The Madras NonBrahmin Association என்ற " சென்னை மாகாண பிராமணர் அல்லாதார் சங்கம்" 1909இல் உருவானது.

• மக்களின் பிள்ளைகள் கல்வி கற்க - இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில்நுட்பக் கல்விப் பயிற்சி பெற - தாய்நாடு திரும்பியதும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தர - சமூக அங்கீகாரத்தை அரசியல் அதிகாரத்தை உறுதி செய்ய வேண்டுமென்ற 5 முதன்மையான குறிக்கோள்களாக முன்வைக்கப்பட்டது.

• தொடங்கப்பட்ட சிலநாட்களிலேயே, வகுப்புவாதத்தைத் தூண்டுகிறது, இன வாதத்தைப் பரப்புகிறது, இதனை ஊக்குவிக்கக் கூடாது என சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பிராமணத் தலைவர்கள் பத்திரிகைகளுக்கும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்கும் எழுதுமளவிற்கு வளர்ந்த இந்தச் சங்கம், பொருளாதாரப் பிரச்னை - அரசியல் நெருக்கடி என தாக்குப்பிடிக்க முடியாமல் அந்த சூழ்ச்சியிலேயே செயல்பாடற்று நின்று போனது!

சென்னை தலைமாகாண பிராமணர் அல்லாதார் சங்கம் முடங்கிய பிறகு தான், பிராமணர் அல்லாத மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு எழுச்சி ஏற்பட்டது என்று கூட சொல்லலாம்.

**சென்னை ஐக்கியக் கழகம்**

• இவ்வேளையில் அரசுப் பணியில் இருந்த பிராமணர் அல்லாதவர்கள் ஒருங்கிணைப்பு அவசியம் என்று உணர்ந்த சரவண பிள்ளை, ஜி. வீராசாமி நாயுடு, துரைசாமி முதலியார், என். நாராயணசாமி நாயுடு போன்ற பிரமுகர்கள் இணைப்பால் சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெருவில் 1912 ஆம் ஆண்டில் சென்னை ஐக்கியக் கழகம் (The Madras United League) என்ற புதிய இயக்கம் சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெருவில் டாக்டர் சி.நடேசன் முதலியார் செயலாளர் - எஸ்.ஜி. அரங்க ராமானுஜம் துணைச் செயலாளர் பொறுப்புகள் ஏற்று

உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டின் அரசியலில் 'கழகம்" என்ற சொல் இடம் பெறுவதற்கான தொடக்கப்புள்ளி இதுதான். இதுவே பின் 1913 முதல் திராவிடர் சங்கம் என்று புதுப் பெயர் பெற்றது.

**தென்னிந்திய மக்கள் சங்கம்**

• 1916-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் 20 ஆம் நாளன்று 'வெள்ளுடை வேந்தர்' பி.தியாகராயச்செட்டியார் வெளியிட்ட ( NON-BRAHMIN MANIFESTO) 'பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை' ஒரு பெரும் கலகக்குரலாக இருந்தது. அதனை தொடர்ந்து டி.எம்.நாயர் உள்ளிட்டோர் முன்னின்று தொடங்கிய 'தென்னிந்திய மக்கள் சங்க'த்தோடு ( South Indian People' s Association Ltd) இணைந்து பிராமணரல்லாத மக்களின் சமூகநீதியையே பிரதான முழக்கமாக கொண்ட பின்னாளில் மக்களால் " JUSTICE PARTY" என்றும் " நீதிக்கட்சி" என்றும் அழைக்கப்ப்படும்படியாக மாறியது.

**திராவிட சங்க விடுதி**

• டாக்டர் சி.நடேசன் முதலியார், அதே ஆண்டில் பிராமணர் அல்லாத மாணவர்கள் தங்கிப் படிக்கும் மாணவர் விடுதிகளில் கூடப் பாகுபாடுகள் நிறைந்திருந்த நிலையில், அந்நிலையைப் போக்க சென்னையில் திராவிட சங்க விடுதியை (Dravidian Association Hostel) உருவாக்கினார்.

பிற்காலத்தில் இந்திய நிதியமைச்சராக ஆகவிருந்த ஆர்.கே.சண்முகம், பாரிஸ்டர் ரங்கராமானுஜம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர்களாக விளங்கிய டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை, எஸ்.ஜி.மணவாள ராமானுஜம் மற்றும் சடகோப முதலியார், பிற்காலத்தில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக வந்த சுப்பிரமணிய நாடார் போன்றவர்களெல்லாம் இந்த விடுதியில் தங்கிப் படித்தவர்கள்தான்!

இந்தியாவின் பல மாநிலங்களில் சுதந்திரத்திற்கு பிறகும் இன்றுவரை சரியாகக் கிடைத்திடாத கல்வியில் சமூக நீதி மற்றும் சமூக நலத்திட்டங்கள், பிரித்தானிய ஆட்சிக்காலத்திலேயே குறைந்த அதிகாரம் கொண்ட மான்டேகு - செம்ஸ்போர்டு திட்ட " இரட்டை ஆட்சி" முறையிலேயே சாத்தியப்படுத்திக் காட்டியது அன்றைய சென்னை மாகாணம்.

150 ஆண்டுகளாகப் பெயருக்குத்தான் ஆங்கிலேயர்கள் ஆட்சி என்று சொல்கிறார்கள் உண்மையில் இங்கே பிராமணர்களின் ஆட்சிதான் நடந்துவருகிறது. பிராமணர்களின் நலனுக்காக மட்டுமே காங்கிரஸ் கட்சி இயங்குகிறது. இதை மாற்றி பிராமணர் அல்லாதார் இன மக்களின் நலனுக்காக ஒரு புதிய அரசியல் இயக்கம் காணவேண்டுமென தென்னிந்தியா கண்ட முதல் இயக்கம் தான் "நீதி கட்சி".

• வடக்கே உருவான 'முஸ்லீம் லீக்' கட்சியின் பெரும் முயற்சியால், 1909 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மின்மோலிமார்லி சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக, இஸ்லாமியர்களுக்குத் தேர்தல்களில் தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நீதிக்கட்சிக்கு பெரிய உந்து சக்தியாக மாறியது. அதுவே, 1917 - 1920 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணம் முழுவதும் அரசியல் கோரிக்கையாக ஒலிக்கத் தொடங்கியது. 1920 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் அக்கட்சியே வெற்றிப் பெற்ற. நீதிக்கட்சி, திவான் பகதூர் கடலூர் சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. 17.12.1920 ஆம் நாளன்று, சென்னை மாகாண அமைச்சரவையை அமைத்தது. பதவியேற்றவுடனேயே, அரசு வேலைவாய்ப்புகளில் அனைத்து மத-சாதியினருக்கம் இடஒதுக்கீடு வழங்க ஆணை பிறப்பித்தது.

**முதல் கம்யூனல் G.O - முதல் வகுப்புவாரி அரசாணை**

சமூக நீதியின் ஆணிவேரான வகுப்புவாரி இடஒதுக்கீட்டுச் சட்டமானது முதல் மசோதாவாக முதல் கம்யூனல் G.O (MRO Public Ordinary Service GO 613)" 1921ஆம் ஆண்டு பனகல் அரசர் பனங்கன்டி ராமராயநிங்கார் ஆட்சியில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

20.5.1922 அன்று கல்லூரிகளில் எல்லாத் தரப்பு மாணவர்களையும் சேர்க்க, குழுக்கள் அமைக்கும் அரசாணைக்கு உத்தரவிட்டது. 21.6.1923 அன்று கல்வி மறுக்கப்பட்ட பிராமணரல்லாத குழந்தைகளைத் தொடக்கப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்க அவசர உத்தரவிட்டது

24.9.1924 அன்று தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கல்வி நிலையங்களில் மிகுதியாகச் சேர்க்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. புதிய பல்கலைக்கழகம் காண இயற்றப்பட்ட சட்டம் " புதிய பல்கலைக்கழகம் சட்டம்" தான் பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக இது காரணமாயிற்று.

**சென்னைத் தலைமாகாண சங்கம்' - பெரியார் + திரு.வி.க**

இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை நீதிக்கட்சி மிக வலிமையாக உயர்த்திப் பிடித்ததால் அக்கட்சியின் செல்வாக்கு, தமிழ்நாட்டிலும், அன்று சென்னைத் தலைமாகாணத்தில் இணைந்திருந்த தென்னிந்தியப் பகுதிகளிலும் மிக விரைந்து பரவியது.

அதனைக் கண்ட காங்கிரஸ் கட்சிக்குள்ளும் விவாதம் பரவியது. காங்கிரசில் இருந்த பார்ப்பனர் அல்லாதோர் ஒருங்கிணைந்து 'சென்னைத் தலைமாகாண சங்கம்' (Madras presidency Association) என ஒன்றை உருவாக்கினர். பெரியார், திரு.வி.க. போன்றோர் அச்சங்கத்தில் பொறுப்பாளர்களாக இருந்தனர். அச்சங்கமும் இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை முன்வைத்தது.

நீதிக்கட்சியின் வகுப்புரிமையை காங்கிரஸ் கட்சி ஏற்க வேண்டுமென நெடுங்காலமாக காங்கிரசுக்குள் வலியுறுத்தி வந்த தந்தைப் பெரியாரின் கோரிக்கையை, மேட்டுகுடிகள் நிரம்பி வழிந்த அன்றைய காங்கிரஸ் கட்சி ஏற்காத காரணத்தால், அக்கட்சியின் சார்பில் நடைபெற்ற காஞ்சிபுர மாநாட்டு பந்தலிலேயே, தாம் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி " வகுப்புவாரி உரிமைக்கு போராடாதவன் கோழை" என்று கூறி சுயமரியாதை இயக்கத்தை கட்டமைத்தார்.

**Communal GO Ms No.1021**

1926ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சியில் அமரும் வாய்ப்பை நீதிக்கட்சி இழந்தது. ஆட்சியை கைப்பற்றிய சுயராஜ்யக்கட்சி, மீண்டும் நீதிக்கட்சி ஆட்சியை அமைக்கும் வாய்ப்பை தந்துவிடக்கூடாது என கருதி நீதிக்கட்சியின் பி.சுப்பராயன் கவுண்டர் என்பவரை மட்டும் அழைத்து சுயேட்சை அமைச்சரவை அமைக்கச் செய்தனர்.

இருந்தாலும் எதிர்கட்சியான நீதிக்கட்சியின் தலைவர் பனகல் அரசர் ஆலோசனையிலேயே இந்த ஆட்சியையும் தொடர்ந்தார் பி.சுப்பராயலு கவுண்டர். இதன் காரணமாக பின்னர் ஜனவரி 1928 அன்று சுயராஜ்யக்கட்சி எதிர்த்து வந்த சைமன் கமிஷனை எதிர்க்க மறுத்த பி.சுப்பராயன் கவுண்டர் அமைச்சரவையில் இருந்து சுயராஜ்யக்கட்சி பின்வாங்க மீண்டும் நீதிக்கட்சியே முழுமையாக ஆளும் கட்சியாக நின்றுவிட்டது.

சமூகநீதி இயக்கத்தின் தளபதி செளந்தரபாண்டியன் அவர்கள் ஆதரவில் எஸ்.முத்தையா முதலியாரின் முயற்சியால் முதல் இடஒதுக்கீட்டுச் சட்டம் 13.9.1928 அன்று வகுப்புரிமை ஆணையாக - communal GO Ms No.1021 அன்று வெளியிட்டப்பட்டு அவ்வாணையை முழுமையாக செயல்படுத்தி, அரசுப் பணிகளில் பார்ப்பனர் - பிறசாதியினர் - தாழ்த்தப்பட்டோர் - முஸ்லிம்கள் -

ஆங்கிலோ_இந்தியர் உள்ளிட்ட அனைத்து சமுதாயத்தினரும் இடம் பெற வழி வகுத்தார்.

15.9.1928 சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பிராமணரல்லாத மாணவர்களைச் சேர்ப்பதற்கான உத்தரவு செயல்முறைக்கு அனுமதிக்கப்பட்டது. 27.2.1929 வகுப்புவாரி ஒதுக்கீட்டுக்கான அரசாணை வெளியிட்டு சமூக நீதிக்கான ஒரு பாதையை திறந்தது. சமூகநீதி முன்னோடிகளில் ஒருவரான சிவகங்கை எஸ்.இராமச்சந்திரன் " தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்க்காத பள்ளிகளுக்கு மானியம் நிறுத்தப்படும்" என்று ஆணையிட்டார்.

வெறும் பதிவுதுறைக்கு மட்டுமே நடைமுறைக்கு வந்த இந்த வகுப்புரிமை ஆணையை எல்லா துறைக்கும் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவைகளை தந்தை பெரியார் " குடி அரசு" இதழில் எழுதினார். பிறகு எல்லா துறைகளுக்கும் இந்த வகுப்புரிமை ஆணை நடைமுறைபடுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**8.33 சதவிகித இடஒதுக்கீடு ஆணை**

'ஏற்றத்தாழ்வு' ஒழிய 'சமூகநீதி' மலர ஒடுக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் அவரவர் மக்கட்தொகை அடிப்படையில் இடஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் 1931 ஆம் ஆண்டில் சாதிவாரிக் கணக்கெடுப்பும் நடந்தது.

எடுக்கப்பட்ட சாதிவாரியான மக்கள் கணக்கெடுப்பின்படி, 32 கோடியாக இருந்த அன்றைய துணைக்கண்ட மக்கள் தொகையில் 8 கோடிப் பேர் இஸ்லாமியராக இருந்தனர். ( அது பாகிஸ்தானையும் உள்ளடக்கிய இந்தியத் துணைக்கண்டம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்). எனவே, அரசின் எல்லா வேலைவாய்ப்புகளிலும், இஸ்லாமியர்களுக்கு 25% இடஒதுக்கீடும், சீக்கியர், பார்சி, கிறித்துவர், ஆங்கிலோ இந்தியர் ஆகிய நால்வருக்குமாகச் சேர்த்து 8.33 சதவிகித இடஒதுக்கீடும் வழங்கும் ஆணை 1933 இறுதியில்

வெளியிடப்பட்டது. சென்னைத் தலைமாகாணப் பார்ப்பனர் அல்லாதோருக்குச் சிறப்பு இடஒதுக்கீடு

சென்னை மாகாண முதலமைச்சராக பொப்பிலி அரசர் பதவி (இரண்டாவது முறையாக 5 நவம்பர் 1934 - 4 ஏப்ரல் 1936) வகித்த போது 1935 ஆம் ஆண்டு அவருடைய ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட 'சென்னைத் தலைமாகாணப் பார்ப்பனர் அல்லாதோருக்குச் சிறப்பு இடஒதுக்கீடு' என்னும் கோரிக்கையை எடுத்துக்கொண்டு, சர்.ஏ.இராமசாமி முதலியார் டெல்லி சென்றார்.

அங்குள்ள அமைச்சர்கள் அனைவரையும் சந்தித்து, தன் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டினார். ஆனால், டெல்லியிலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதுபோன்ற ஒதுக்கீடு, ஆதி திராவிட மக்களின் நலனைப் பாதிக்கும் என்று மறுத்துக் குறிப்பு எழுதினர். இருப்பினும் அங்கேயே இருந்து மீண்டும் அனைவருக்கும் 'சென்னைத் தலைமாகாணப் பார்ப்பனர் அல்லாதோருக்குச் சிறப்பு இடஒதுக்கீடு' குறித்து தெளிவினை ஏற்படுத்தி அதனை நடைமுறைக்கு கொண்டுவர பெரும்பாடுபட்டார்.

பெண்களுக்கு ஓட்டு சென்னை மாகாணப் பெண்கள் 1921 முதல் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர்.இந்தியாவிலேயே முதன் முதலில் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை பெற்றது நீதிக்கட்சி ஆட்சி நடைபெற்ற சென்னை மாகாணத்தில் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.பொதுத்துறையில் தாழ்த்தப்பட்டோர் உட்பட எல்லா மக்களுக்கும் உரிய இடங்கள் வழங்கப்பட்டன.தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பணி உயர்வு, உயர் பதவி நியமனங்கள் செய்யப்பட்டன.

- நீதிக் கட்சியின் முதலாவது அமைச்சரவைக் காலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கக் கோரிய கிருஷ்ணன் நாயரின் தீர்மானம் சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேட்டபட்டது.

- பிரிட்டனிலே 1018ல் தான் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. அதற்கடுத்த நான்காண்டுகளில் இந்தியாவில் முதன்முதலாக சென்னை மாகாணச் சட்டமன்றத்தில் நீதிக் கட்சி ஆட்சியில் அந்த உரிமையை நிலைநாட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடல் நலக்குறைவின் காரணமாக 1921 ஜூலையில் சுப்புராயலு முதல்வி பதவியிலிருந்து விளகிகொண்டார்.
- அவருக்கு பதிலாக ராமராயநிங்கர் முதல்வராகப் போறுப்பேற்றார். நீதிக் கட்சியின் இரண்டாவது அமைச்சரவையிலும் அவை முதல்வராகத் தொடர்ந்து 1926 வரையில் பதவி வகித்தார்.
- 1923-ல் ஆகஸ்ட்டில் ஒ. தணிகாசலம் கொண்டுவந்த தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்க அலுவலகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிப்பதற்கான தீர்மானம் நிறைவேறியது. அத்தீர்மானத்தையொட்டி அரசானையொன்றும் வெளியிடப்பட்டது.
- 1923-ல் இந்து சமய அற நிலையத் துறை சட்டமும் இயற்றப்பட்டது. புதிய தொழில் நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி அளிக்கவும் ஆலோசனைகள் வழங்கவும் வகை செய்யும் சட்டமும் இயற்றப்பட்டது. சென்னைப் பல்கலைகழகத்தைக் கல்லூரிகளுடன் நெருங்கிய தொடர்புகொள்ளும் வகையிலும் மாகாணத்தின் அனைத்துப் பகுதகளிலும் புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்கும் வகையிலும் இயற்றப்பட்ட சென்னைப் பல்கலைகழகச் சட்டம் – 1923 மாகாணத்தில் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது.

**மதிய உணவுத் திட்டம்**

சென்னை: தமிழ்நாட்டில் ஏராளமான ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகள் கல்வி கற்று இன்று சமுதாயத்தில் உயர் பதவிகளை

அலங்கரிக்க முக்கிய காரணமாக திகழ்ந்த மதிய உணவுத் திட்டம் தற்போது புதிய உருவம் பெற்று காலை சிற்றுண்டி திட்டமாக விரிவடைந்துள்ளது. இந்தியாவில் இந்த சாதியினர்தான் படிக்க வேண்டும், இந்த சாதியினர் இந்த வேலைதான் செய்ய வேண்டும் என்று மேலோங்கி இருந்த சாதிய ஒடுக்குமுறையை தகர்க்க உருவானது நீதிக்கட்சி. அன்று மதராஸ் மாகாணத்தில் ஆட்சியை பிடித்து உயர்சாதியினரின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடியது. கல்விக்கே சாதிய படிநிலைகளை தகர்த்து எரியும் சக்தி இருக்கிறது என்பதை உணர்ந்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய சிறுவர்களுக்கு கல்வி வழங்க முடிவு செய்தது அன்றைய நீதிக்கட்சி அரசு. ஆனால், காலம் காலமாக இருந்த சாதி ஒடுக்குமுறைகளால் வறுமையில் வாடி கூலித்தொழில் செய்து வந்த மக்கள் தங்கள் பிள்ளைகளையும் வேலைக்காக அனுப்பி வந்தனர்.

சர்.பிட்டி தியாகராயர் - உணவு திட்டம் முறையான உணவு கூட இல்லாத அவர்களின் வலியை உணர்ந்த நீதிக்கட்சியின் ஆட்சியாளர் சர்.பிட்டி தியாகராயர் மதிய உணவு திட்டத்தை தொடங்க முடிவு செய்தார். சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சி பள்ளியில் கடந்த 1920 ஆண்டு இதே செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி இந்த திட்டம் நாட்டிலேயே முதல் முறையாக தொடங்கப்பட்டது. இதற்கு கிடைத்த வெற்றியால் அடுத்து 4 பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. ஒருவேளை உணவுக்கு கூட கஷ்டப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள், இந்த உணவுக்காகவே பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள். இப்படி அந்த ஏழை குழந்தைகளுக்கும் கல்வி கிடைத்தது.

**சுய மதிப்பீட்டு கேள்வி**

- தமிழ்நாட்டின் அரசியலில் பனகல் ராஜா , பி.சுப்புராயன், பொப்பிலி ராஜா போன்ற தலைவர்களின் பங்களிப்பை மதிப்பிடுங்கள்.
  ----------------------------------------------------------------------------------------------------
- உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களுக்கான இடஒதுக்கீடு, பெண்களுக்கு அதிகாரம் மதிப்பீடு
  ----------------------------------------------------------------------------------------------------

# இயல் - இரண்டு

**காங்கிரஸ் ஆட்சி - சி. ராஜகோபாலாச்சாரி - கே. காமராஜர் - எம். பக்தவச்சலம் - முன்னேற்றங்கள்: இலவச மதிய உணவு திட்டம் - புதிய பள்ளிகள் திறப்பு - நீர்ப்பாசன வசதிகள் அதிகரிப்பு - தொழில்துறை வளர்ச்சி.**

## குறிக்கோள்கள்

- காங்கிரஸ் நிர்வாகத்தில் சி.ராஜகோபாலாச்சாரி , கே.காமராஜ் மற்றும் எம்.பக்தவத்சலம் பாணியை ஆராயுங்கள்.
- காங்கிரஸ் அரசாங்கத்தின் கீழ் கல்வி வளர்ச்சி பங்களிப்பு பற்றி விவாதிக்கவும்.
- உள்கட்டமைப்பை, சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் அரசாங்கம் முயற்சிகளை மதிப்பீடு.
- பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சியை காங்கிரஸ் அரசாங்கம் முயற்சிகளைப் பற்றி விவாதிக்கவும்.

**ராஜகோபாலாச்சாரியார்**

கிருஷ்ணகிரி மாவட்டம் (அன்றைய சேலம் மாவட்டம்) தொரப்பள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார் (1878). பெங்களூர் சென்ட்ரல் கல்லூரி, மற்றும் சென்னை மாகாணக் கல்லூரியிலும் பயின்றார். 1900-ம் ஆண்டில் ஒரு வழக்குக்கே 1000 ரூபாய் வாங்கும் வெற்றிகரமான வழக்கறிஞராக பணிபுரிந்து வந்தார்.

இளம்வயதிலேயே கிட்டப்பார்வையால் கண்ணாடி போட்ட அவருக்கு பள்ளிக்காலத்தில் நண்பர்கள் வெகு குறைவாகவே இருந்தனர். அரசுப்பள்ளியில் படித்து முடித்த பின்னர் மெட்ரிகுலேசன் தேர்வில் சாதித்துக்காட்டினார் அவர். பின்னர் சட்டம் படித்து முடித்த பின்னர் சேலத்தில் பிரபல வழக்கறிஞர் ஆனார் அவர். அப்பொழுதே ஆயிரம் ரூபாய் ஒரு வழக்குக்கு வாங்குகிற அளவுக்கு வருமானம் உடையவராக இருந்தார் அவர். 1917 இல் சேலம் நகராட்சி தலைவர் ஆனார் அவர். சம்பளமே வாங்கிக்கொள்ளாமல் ஆறு மணிநேரம் தினமும் உழைத்து அடிப்படை வசதிகளை மேம்படுத்தினார் ராஜாஜி.

காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார். வழக்கறிஞர் தொழிலை கைவிட்டார். விடுதலைப் போராட்ட இயக்கத்தில் இணைந்தார். ரவுலட் சட்டத்துக்கு எதிரான போராட்டம் உள்ளிட்டப் பல போராட்டங்களில் பங்கேற்றார். 1917-ல் சேலம் நகராட்சி உறுப்பினராகவும், பின்னர் நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1909-ஆம் ஆண்டு மகாகவி பாரதியாருடன் பழகும் வாய்ப்பு ராஜாஜிக்குக் கிடைத்தது. நாட்டு விடுதலைக்கான போராட்டம் குறித்து இருவரும் பல சந்திப்புகளில் விவாதித்தனர். இது பற்றி காந்தியடிகளையும் சந்தித்து ராஜாஜி பேசினார். சென்னையில் இருந்த ராஜாஜியின் வீட்டில்தான் மகாகவி பாரதியார் முதன்முறையாக காந்தியடிகளைச் சந்தித்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் ஈர்க்க பல்லாயிரம் ரூபாய் வருமானம் தந்து கொண்டிருந்த வக்கீல் தொழிலை துறந்தார் அவர். உப்பு சத்தியாகிரகத்தை தமிழ்நாட்டில் முன்னின்று நடத்தினார் அவர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகப் போராடினார். அவர்களுக்கு பதவிகள் வழங்கினார். 1930-ல் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடத்தி சிறை சென்றார். 1937-ல் மதராஸ் மாகாணத்தின் பிரதான மந்திரியாகப் பொறுப்பேற்றார்.

1937 இல் நடந்த தேர்தலில் காங்கிரஸ் வென்றபின்னர் முதல்வர் ஆனார் அவர். மது விலக்கை சேலத்தில் முதன் முதலில் அமல்படுத்தினார் ராஜாஜி. பின்னர் கடப்பா,சித்தூர்,வட ஆற்காடு மாவட்டங்களில் மதுவிலக்கை விரிவுபடுத்தினார் ராஜாஜி. அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பை சரிசெய்ய இந்தியாவிலேயே முதல் முறையாக விற்பனை வரியைக்கொண்டு வந்தார் அவர். ஆலய பிரவேசத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சாத்தியப்படுத்தினார் விவசாயிகளின் கடன் சுமையை குறைக்கவும் சட்டமியற்றினார்.

1946-ல் அமைக்கப்பட்ட இடைக்கால அரசில் தொழில், கல்வி மற்றும் நிதித்துறை அமைச்சராகப் பணியாற்றினார். படைப்பாற்றல் மிக்கவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதும் திறன் கொண்டவர். ராமாயணம் மற்றும் மகாபாரதம் காவியங்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

'திண்ணை ரசாயனம்', 'கண்ணன் காட்டிய வழி', 'பஜ கோவிந்தம்', 'மெய்ப்பொருள்', 'பக்திநெறி', 'வள்ளுவர் வாசகம்' உள்ளிட்ட ஏராளமான நூல்கள் எழுதியுள்ளார். கல்கி மற்றும் ரசிகமணி டி.கே.சி.யுடன் இணைந்து குற்றாலத்தில் இலக்கிய ஆய்வுகள் நடத்தினார். அமர கீதமான 'குறை ஒன்றும் இல்லை.. மறைமூர்த்தி கண்ணா' உள்ளிட்ட பல பாடல்களையும் இயற்றியுள்ளார்.

சிறந்த நிர்வாகியாக திகழ்ந்தவர். சென்னை மாகாண பிரதம அமைச்சர், வங்க ஆளுநர், இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல், மத்திய உள்துறை அமைச்சர், தமிழக முதலமைச்சர் ஆகிய பொறுப்புகளில் சிறந்த நிர்வாகியாக முத்திரை பதித்தார்.

அடுத்து ஹிந்தி மொழியை 125 பள்ளிகளில் 6,7,8 ஆம் வகுப்புகளில் கொண்டு வந்தார். இந்தியாவின் அரசியல் மற்றும் வணிகத்தை செலுத்த ஹிந்தி அவசியம் என்று ராஜாஜி நினைத்தார். "குழந்தைகளுக்கு பாலூட்டும் பொழுது தாய் பலவந்தம் செய்தாலும் பரவாயில்லை. தமிழ்மொழி கால் போன்றது ; ஹிந்தி வண்டி மாதிரி ,ஆங்கிலம் ரயில் மாதிரி !" என்று விளக்கம் தந்தார் அவர். நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் திருச்சியில் ஹிந்தி எதிர்ப்புக்குழு உருவானது. பெரியார் ,"ஆச்சாரியார் ஹிந்தி புகுத்துவதால் தமிழ் கெடாது என்று பித்தலாட்டம் பேசுகிறார். இங்கே தமிழ் எங்கே இருக்கிறது ?" என்று முழங்கினார். அண்ணா,பெரியார் உட்பட ஆயிரக்கணக்கானோர் சிறை புகுந்தார்கள். தாளமுத்து, நடராசன் எனும் இருவர் சிறையில் மரணம் அடைந்தார்கள். ஹிந்தி

திணிப்புக்கு எதிராக சிறை சென்றவர்களை ,"அற்ப கூலிக்கு அமர்த்தப்பட்ட அடியாட்கள் !" என்று அழைத்தார் ராஜாஜி . இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேய அரசு ஈடுபடுவதை கண்டித்து காங்கிரஸ் அரசுகள் பதவி விலகியதால் ஹிந்து திணிப்பு அதோடு நின்று போனது.

ராஜாஜி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்து காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேறினார். போர்க்காலத்தில் ஆங்கிலேயருக்கு உதவ வேண்டும் என்று சொன்னார் அவர். பின்னர் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்குள் வந்தார். 1951 ல் நடந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. கம்யூனிஸ்ட்கள் அதிக இடங்களில் வென்றிருந்தார்கள். ராஜாஜியை அழைத்தார்கள். காமன் வீல் கட்சி,தொழிலாளர் கட்சி ஆகியவற்றை சேர்த்துக்கொண்டு ஆட்சி அமைத்தார் அவர். ராஜாஜி தன் வாழ்நாளில் நேரடியாக தேர்தலில் போட்டியிடுவதை பெரும்பாலும் தவிர்த்தே வந்திருக்கிறார்.

பதவிக்கு வந்ததும் போட்ட முதல் உத்தவரவு கைதிகளுக்கு மோர் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது தான். குலக்கல்வி முறையை அடுத்து கொண்டுவந்தார் அவர். ஐந்து பாடவேளைகள் என்பதை மூன்று பாடவேளைகள் என்று குறைத்தார் ராஜாஜி. ஷிப்ட் முறையில் ஒரே நாளில் இரண்டு பிரிவாக வகுப்புகள் நடக்கும். காலையில் பள்ளியில் படித்துவிட்டு மதியம் போய் பெற்றோர்கள் செய்யும் தொழிலில் பிள்ளைகள் உதவவேண்டும் என்று ராஜாஜி சொன்னார். அது சாதியத்தை காப்பாற்றவும், வலுப்படுத்தவும் செய்யும் என்று எதிர்த்தார்கள். பெரியார் ,"ராஜாஜி கிராமத்து பையனுக்கு கல்வி வேண்டாம் என்று சொல்கிறாரா ? மூன்றே பாடவேளைகள் என்பதால் மிச்ச நேரத்தில் அவன் கழுதை மேய்த்துக்கொண்டும், முடி வெட்டிக்கொண்டும், துணி துவைத்துக்கொண்டும். இருக்க வேண்டுமா?" என்று பொங்கினார். தொழிற்கல்வித்திட்டம் குலக்கல்வி என்று அழைக்கப்பட்டது.

ராஜாஜி அமைச்சரவையை கலந்து ஆலோசிக்காமல் இப்படி முடிவை எடுத்ததற்கும் எதிர்ப்பு கிளம்பியது. "ராமானுஜர்,சங்கரர் முதலானோர் மற்றவரை கேட்டுவிட்டா தங்களின் தத்துவங்களை வெளியிட்டார்கள் ? இது நிர்வாக ரீதியான முடிவு " என்றார் ராஜாஜி. ஆனாலும்,ஆசிரியர்கள் ஆறு பாடவேளைகள் பாடமெடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டாலும் அவர்களுக்கு எந்த சம்பள உயர்வையும் ராஜாஜி வழங்கவில்லை. அவர்களை கலந்தாலோசிக்கவும் இல்லை. பருலேகர் கமிட்டி அமைத்து ஆய்வு செய்து தான் செய்தது சரியென்று சொன்னார் ராஜாஜி. அவரின் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு வலுத்து பதவி விலகினார் அவர்.

காங்கிரசின் சோஷலிசக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சியிலிருந்து விலகி சுதந்திராக் கட்சியை நிறுவினார். மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக ஆதரித்தார். பிரதான அமைச்சராக இருந்த சமயத்தில் சென்னை மாகாணம் முழுவதும் முழுமையான மதுவிலக்கை அமல்படுத்தினார்.

1967-ல் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிரான அணியை ஒருங்கிணைத்து, தமிழக அரசியலில் முதன்முறையாக காங்கிரஸ் அல்லாத ஆட்சி அமைய துணை நின்றார். காந்தியத்தைத் தமிழ் மண்ணில் வளர்த்தெடுக்கப் பாடுபட்டார். புதுப்பாளையம் என்ற கிராமத்தில் ஆசிரமம் அமைத்து சமூகத் தொண்டாற்றினார்.

1954-ல் இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. தேசத் தொண்டையே உயிர்மூச்சாகக் கொண்டிருந்த இவரது சேவையைப் போற்றும் வகையில் இவர் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக மாற்றப்பட்டுள்ளது. சேலத்து மாம்பழம் என்றும் ராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்பட்ட சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சரியார் 1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் தேதி 94-ம் வயதில் காலமானார்.

**காமராஜர்**

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக கருதப்படுபவர், ‘பெருந்தலைவர் காமராஜர்’. தமிழகத்தை ஒன்பது ஆண்டு காலம் ஆட்சிசெய்த இவருடைய காலம், தமிழக அரசியல் வரலாற்றில் “பொற்காலமாக” கருதப்படுகிறது.

பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தினை ஏற்படுத்தி, ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார். தன்னுடைய உழைப்பால், தொண்டால், படிப்படியாக உயர்ந்த இவர், ‘பெரும் தலைவர்’, ‘தென்னாட்டு காந்தி’, ‘படிக்காத மேதை’, ‘கர்ம வீரர்’, ‘கல்விக்கண் திறந்த காமராஜர்’ என பல்வேறு சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

சமுதாயத்தில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் ஏழைகளுக்கு நல்லது செய்யும் அவரின் தன்னலமற்ற தொண்டிற்காக, இந்திய அரசு, அவரின் மறைவிற்கு பின்னர் 1976 ஆம் ஆண்டு “பாரத ரத்னா” விருதினை வழங்கியது. இந்தியாவின் மதிக்கத்தக்க இரண்டு பிரதம மந்திரிகளை உருவாக்கி, இந்தியாவின் ‘கிங்மேக்கராகப்’ போற்றப்படும் காமராஜரின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை விரிவாகக் காண்போம்.

**பிறப்பு:**

கு. காமராஜர் அவர்கள், 1903 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள “விருதுநகரில்” குமாரசாமி நாடாருக்கும் சிவகாமியம்மாவுக்கும் மகனாக பிறந்தார். இவருடைய இயற்பெயர் ‘காமாக்ஷி’. அவருடைய தாயார் மிகுந்த நேசத்துடன், அவரை “ராஜா” என்று அழைப்பார். அதுவே, பின்னர் (காமாக்ஷி + ராஜா) ‘காமராஜர்’ என்று பெயர் வரக் காரணமாகவும் அமைந்தது.

**ஆரம்ப வாழ்க்கை மற்றும் கல்வி:**

காமராஜர் அவர்கள், தனது ஆரம்பக்கல்வியை தனது ஊரிலேய தொடங்கி, 1908 ஆம் ஆண்டில் “ஏனாதி நாராயண வித்யா சாலையில்” சேர்க்கப்பட்டார். பின்னர் அடுத்த வருடமே விருதுப்பட்டியிலுள்ள உயர்நிலைப்பள்ளியான “சத்ரிய வித்யா சாலா பள்ளியில்” சேர்ந்தார். அவருக்கு ஆறு வயதிருக்கும் பொழுது, அவருடைய தந்தை இறந்ததால், அவரின் தாயாரின் நகைகளை விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தன்னுடைய பள்ளிப்படிப்பை தொடரமுடியாத நிலைக்கு தள்ளப்பட்ட காமராஜர், தன்னுடைய மாமாவின் துணிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார்.

**காமராஜர் கல்வி பணி:**

காமராஜர் அவர்கள், தனது ஆரம்பக்கல்வியை தனது ஊரிலேய தொடங்கி, ஏனாதி நாராயண வித்யா சாலையில் **1908** ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டார். பின்னர் அடுத்த வருடமே விருதுப்பட்டியிலுள்ள உயர்நிலை பள்ளியான “சத்ரிய வித்யா சாலா பள்ளியில்” சேர்ந்தார். அவருக்கு ஆறு வயதிருக்கும் பொழுது அவருடைய தந்தை இறந்து விட்டார். அதனால் அவரால் படிக்கச் முடியவில்லை. அதன் பிறகு தன்னுடைய மாமாவின் துணிக்கடையில் வேலைக்கு சேர்ந்தார்.

தனது **18**-வது வயதில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அவரது அயராது உழைப்பின் காரணமாக தலைவரானார். தாய்நாட்டின் உள்ள மக்களுக்காக **9** ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் **1954** ஆம் ஆண்டு முதலமைச்சராக பதவி வகித்தார்.

இவர் முதலமைச்சர் ஆன பிறகு அனைத்து குழந்தைகளுக்கும் தொடக்க கல்வி இலவசமாகமாக்கப்பட்டது. காமராஜர் படிக்க விட்டாலும் தன் தேசத்தில் உள்ள மக்கள் படிக்க வேண்டும் என்று நினைத்தார்.

எந்த சொத்தும் இல்லாவிட்டாலும் கல்வி ஒன்றே சொத்து என்று நினைத்தார். கல்வி என்ற அறிவை நாம் பெற்று விட்டாலே வறுமை ஒளிந்து விடும் என்று நினைத்தார். மாடு மேய்த்து கொண்டிருந்த சிறுவனிடம் பள்ளிக்கு செல்லவில்லையா என்று கேட்டார்.

அதற்கு அந்த சிறுவன் உணவு தருவீர்களா என்று கேள்வியை எழுப்பினார். அதற்கு கொண்டு வந்த திட்டம் இலவச மதிய உணவு திட்டம். மாடு பிடித்த கையை கல்வியை கற்க வைத்த பெருமை காமராஜரே சேரும்.

இதனால், ஆங்கிலேயேரின் ஆட்சிக்காலத்தில் 7 சதவீதமாக இருந்த கல்வி கற்போரின் எண்ணிக்கை, இவருடைய ஆட்சியில் 37 சதவீதமாக இருந்தது. இந்திய அரசியலில் தலைச்சிறந்த பணியாக கருதப்பட்ட இந்த திட்டம், உலக அளவில் பாராட்டப்படும் திட்டமாகவும் அமைந்தது எனலாம்.

காமராஜர், தன்னுடைய அமைச்சரவையை மற்றவர் பார்த்து வியக்கும் வகையில் ஆட்சி நடத்தினார். தன்னை எதிர்த்து போட்டியிட்ட சி சுப்பிரமணியத்தையும் அவரை முன்மொழிந்த எம்.பக்தவத்சலத்தையும் அமைச்சராக்கினார்.

முதல்வரான பின்னர் தன்னுடைய முதல் பணியாக ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வி திட்டத்தினை கைவிட்டு, அவரால் மூடப்பட்ட **6** ஆயிரம் பள்ளிகளை திறந்தார்.

**விடுதலைப் போராட்டத்தில் காமராஜரின் பங்கு:**

கல்யாணசுந்தர முதலியார் மற்றும் ஜார்ஜ் ஜோசப் போன்ற தேசத்தலைவர்களின் பேச்சுக்களில் கவரப்பட்ட காமராஜர் சுதந்திரப் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். "ஹோம் ரூல் இயக்கத்தின்" ஒரு அங்கமாக மாறிய அவர், பல போராட்டங்களிலும் கலந்துகொண்டார். பிறகு, இந்திய நேஷனல் காங்கிரஸில் முழு நேர ஊழியராக, 1920 ஆம் ஆண்டில், தனது

16வது வயதில் சேர்ந்தார். உப்பு சத்யாக்ரஹத்தின் ஒரு பகுதியாக, 1930 ஆம் ஆண்டு, சி. ராஜகோபாலாச்சாரி தலைமையில் வேதாரண்யத்தை நோக்கி நடந்த திரளணியில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அடுத்த ஆண்டே, 'காந்தி இர்வின் ஒப்பந்தத்தின்' அடிப்படையில் விடுதலைசெய்யப்பட்டார்.

மேலும், 'ஒத்துழையாமை இயக்கம்', 'வைக்கம் சத்தியாக்கிரகம்', 'நாக்பூர் கொடி சத்தியாகிரகம்' போன்றவற்றில் பங்கேற்ற காமராஜர் அவர்கள், சென்னையில், 'வாள் சத்தியாக்கிரகத்தைத்' தொடங்கி, நீல் சிலை சத்தியாகிரகத்திற்குத் தலைமைத் தாங்கினார். மேலும், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அனைத்து போராட்டங்கள், மற்றும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற அவர், ஆறு முறை சிறையில் அடைக்கப்பட்டு, ஒன்பது ஆண்டுகள் சிறைதண்டனை அனுபவித்தார்.

- ❖ வேலை செய்து கொண்டிருக்கும் போது பல தலைவர்களின் சொற்பொழிவுகளை கேட்டு அரசியலில் ஈடுபடும் ஆர்வம் வந்தது. அரசியலில் இருந்த ஆர்வத்தாலும், நாட்டுப்பற்றாலும் 1920-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் தொண்டனாக சேர்ந்தார்.
- ❖ 1930-ம் ஆண்டு நடைபெற்ற (வேதாரண்யம்) உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் கலந்து கொண்ட போது காமராஜர் அவர்கள் கல்கத்தாவில் உள்ள போலீசாரால் கைது செய்யப்பட்டார். ஒரு வருடம் அலிப்பூர் சிறையில் தண்டனைக்கு உள்ளானார்.
- ❖ 1940-ம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பு, 1942-ம் ஆண்டு நடந்த ஆகஸ்ட் புரட்சி போன்ற போராட்டங்களில் கலந்து கொண்ட போது சிறையில் அடைக்கப்பட்டார்.

**காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தியுடன் ஏற்பட்ட நல்லுறவு:**

'காங்கிரஸ் தலைவர்', 'இந்திய விடுதலை வீரர்', 'இந்திய அரசியலில் மக்களாட்சி நெறிமுறைகளை ஆழமாக வேரூன்ற செய்தவர்', 'மிகச் சிறந்த பேச்சாளர்' எனப் புகழப்பட்ட சத்தியமூர்த்தி அவர்களை தன்னுடைய அரசியல் குருவாக மதித்தார். 1936 ஆம் ஆண்டு சத்திய மூர்த்தி காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்ற போது, காமராஜரை செயலாளராக நியமித்தார். இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பே, சத்திய மூர்த்தி அவர்கள் இறந்துவிட்டார், ஆனால் காமராஜர் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, முதலில் சத்திய மூர்த்தி வீட்டிற்குச் சென்று தேசியக்கொடியை ஏற்றினார். அதுமட்டுமல்லாமல், காமராஜர் தமிழக முதலமைச்சராக பதவி ஏற்பதற்கு முன், சத்திய மூர்த்தியின் வீட்டுக்குச் சென்று அவருடைய படத்திற்கு மாலை அணிவித்து வணங்கி, தன்னுடைய பணியைத் தொடர்ந்தார்.

**தமிழக முதல்வராக காமராஜர்:**

1953 ஆம் ஆண்டு, ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வி திட்டத்தால், எதிர்ப்புகள் கிளம்பியது. இதனால், ராஜாஜியின் செல்வாக்கு குறைந்தேதோடு மட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சி உள்ளேயும் மதிப்புக் குறைந்தது. இதனால், ராஜாஜி அவர்கள் பதவியிலிருந்து விலகி, தன் இடத்திற்கு சி. சுப்பிரமணியத்தை முன்னிறுத்தினார். ஆனால், கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில், காமராஜர் பெருவாரியான வாக்குகளைப் பெற்றதால், 1953 ஆம் ஆண்டு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார்.

**முதல்வராக காமராஜர் ஆற்றியப் பணிகள்:**

காமராஜர், தன்னுடைய அமைச்சரவையை மிகவும் வித்தியாசமாகவும் வியக்கும் படியும் அமைத்தார். தன்னை எதிர்த்து போட்டியிட்ட சி.சுப்பிரமணியத்தையும், அவரை முன்மொழிந்த எம். பக்தவத்சலத்தையும்

அமைச்சராக்கினார். முதல்வரான பின்னர், தன்னுடைய முதல் பணியாக ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தினை கைவிட்டு, அவரால் மூடப்பட்ட 6000 பள்ளிகளைத் திறந்தார். மேலும், 17000த்திற்கும் மேற்பட்ட பள்ளிகளைத் திறந்தோடு மட்டுமல்லாமல், பள்ளிக்குழந்தைகளுக்கு "இலவச மதிய உணவு திட்டத்தினை" ஏற்படுத்தி, ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார். இந்திய அரசியலில் தலைச்சிறந்த பணியாக கருதப்பட்ட இந்தத் திட்டம், உலக அளவில் பாராட்டப்படும் திட்டமாகவும் அமைந்தது எனலாம். இதனால், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் 7 சதவீதமாக இருந்த கல்விக் கற்போரின் எண்ணிக்கை, இவருடைய ஆட்சியில் 37 சதவீதமாக உயர்ந்தது.

- காமராஜர் வாழ்க்கை வரலாறு தமிழ்: தமிழகத்தில் உள்ள அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நெய்வேலி நிலக்கரித் திட்டம், பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை, திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், கல்பாக்கம் அணு மின்நிலையம், ஊட்டி கச்சா ஃபிலிம் தொழிற்சாலை, கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலைகளை உருவாக்கினார்.
- விவசாயம், நாட்டின் முதுகெலும்பு என்பதை உணர்ந்து பல்வேறு நீர்வள திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். மேட்டூர் கால்வாய்த்திட்டம், பவானி திட்டம், காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம், மணிமுத்தாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, ஆரணியாறு போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியவர் கர்மவீரர் காமராஜர்.

**தொழில்துறையின் வளர்ச்சிக்காக காமராஜர் மேற்கொண்ட திட்டங்கள்:**

காமராஜர் கல்வித் துறையில் மட்டுமல்லாமல், தொழில்துறை, நீர்பாசனத் திட்டங்கள், மின் திட்டங்கள் போன்றவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். தமிழகத்தில் தொழில் துறைகளை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு,

பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்தத் தொடங்கினார். ‘நெய்வேலி நிலக்கரித் திட்டம்’, ‘பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை’, ‘திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ்’, ‘கல்பாக்கம் அணு மின்நிலையம்’, ‘ஊட்டி கச்சா ஃபிலிம் தொழிற்சாலை’, ‘கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை’, ‘மேட்டூர் காகிதத் தொழிற்சாலை’, ‘சேலம் இரும்பு உருக்கு ஆலை’, ‘பாரத மிகு மின் நிறுவனம்’, ‘இரயில் பெட்டித் தொழிற்சாலை’, ‘நிலக்கரி புகைப்படச் சுருள் தொழிற்சாலை’ என மேலும் பல தொழிற்சாலைகள் காமராஜரால் உருவாக்கப்பட்டன. இதைத் தவிர, ‘மேட்டூர் கால்வாய்த்திட்டம்’, ‘பவானி திட்டம்’, ‘காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம்’, ‘மணிமுத்தாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, ஆரணியாறு போன்ற நீர்பாசன திட்டங்களையும்’ ஏற்படுத்தினார். காமராஜர் ஆட்சியின் இறுதியில், தமிழகம் தொழில் வளத்தில் வடநாட்டு மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி, இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

**அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராஜர்:**

மூன்று முறை தமிழக முதலமைச்சராக தேர்தெடுக்கப்பட்ட காமராஜர் அவர்கள், பதவியை விட தேசப்பணியும், கட்சிப்பணியுமே முக்கியம் என கருதி “கே-ப்ளான் (K-PLAN)” எனப்படும் “காமராஜர் திட்டத்தினை” கொண்டுவந்தார். அதன்படி, கட்சியின் மூத்த தலைவர்கள் பதவிகளை, இளைஞர்களிடம் ஒப்படைத்துவிட்டு, கட்சிப்பணியாற்ற வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். அதன் பேரில் அக்டோபர் 2, 1963 ஆம் ஆண்டு தன்னுடைய முதலமைச்சர் பதவியைத் துறந்த காமராஜர் பொறுப்பினை பக்தவத்சலத்திடம் ஒப்படைத்துவிட்டு, தில்லிக்குச் சென்றார். பிறகு, அதே ஆண்டில் அக்டோபர் 9 ஆம் தேதி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றார். இத்திட்டத்தினை நேரு போன்ற பெரும் தலைவர்கள் ஏற்றுக்கொண்டது

மட்டுமல்லாமல், லால்பகதூர் சாஸ்திரி, மொரார்சி தேசாய் செகசீகன்ராம், எசு.கே. பட்டேல் போன்றோர் பதவியைத் துறந்து இளைஞர்களிடம் ஒப்படைத்தனர். இதனால், கட்சியினரிடமும், தொண்டர்களிடமும், மக்களிடமும் மரியாதைக்குரிய ஒருவராக மாறி, அனைவருக்கும் முன்மாதிரியாகவும் திகழ்ந்தார். 1964 ஆம் ஆண்டு, ஜவர்ஹலால் நேரு மரணமடைந்தவுடன், லால்பதூர் சாஸ்திரி அவர்களை இந்திய பிரதமராக முன்மொழிந்தார். பிறகு, 1966 ஆம் ஆண்டு லால்பதூர் சாஸ்திரியின் திடீர் மரணத்தைத் தழுவ, 48 வயது நிரம்பிய நேருவின் மகள் இந்திராகாந்தியை இந்தியாவின் அடுத்த பிரதம மந்திரியாக்கினார், காமராஜர்.

**தேசிய தலைவர்**

இவர் தமிழகத்தின் முதலமைச்சராக மூன்று முறை பதவியல் இருந்த பெருமைக்குரியவர். இவர் நினைத்திருந்தால் இன்னும் பல முறை கூட முதலமைச்சராக இருந்திருக்கலாம். ஆனால் அவர் நாட்டின் வளர்ச்சி இளைஞர்களிடம் உள்ளது என்பதை உணர்ந்து தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். முதல்வர் பதவியை ராஜினாமா செய்த அதே ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவராக பொறுப்பேற்றார்.

**எளிமை குணம்**

மூன்று முறை முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் வாடகை வீட்டில் வசித்து, கதர் ஆடையை உடுத்திக்கொண்டு இருந்தார்.

**இறப்பு:**

தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சமூகத்தொண்டு செய்வதிலேயே அர்பணித்துக்கொண்ட காமராஜர் அவர்கள், 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி தன்னுடைய 72 வது வயதில் காலமானார். அதற்கு அடுத்த ஆண்டு, இந்திய

அரசின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா" விருது மத்திய அரசால் அவருக்கு வழங்கப்பட்டது. சமூகத் தொண்டையே பெரிதாக நினைத்து வாழ்ந்த அவர், கடைசிவரை திருமணம் செய்துகொள்ளாமலே வாழ்ந்தார். ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபொழுதும் இறுதிவரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்து இருந்தார். அவருக்காக அவர் சேர்த்து வைத்த சொத்து சில கதர் வேட்டிகள், சட்டைகள், புத்தகங்கள் மற்றும் 150 ரூபாய் மட்டுமே. இப்படிப்பட்ட உன்னதமான நேர்மையான இன்னொரு தலைவனைத் தமிழக வரலாறு மட்டுமல்ல, உலக வரலாறும் இனி சந்திக்குமோ என்பது சந்தேகமே?

இந்தியாவின் மதிக்கத்தக்க இரண்டு பிரதமர்களை உருவாக்கி, 'இந்தியாவின் கிங்மேக்கராகத்' திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர், 'பகைவர்களும் மதிக்கும் பண்பாளராகவும்', 'படிக்காத மேதையாகவும்', 'கல்வியின் நாயகனாகவும்', 'மனிதநேயத்தின் மறுஉருவமாகவும்' திகழ்ந்தார். சினிமாவில் நாம் பார்த்து ஆச்சரியப்படும் ஹீரோக்களைப் போல இல்லாமல், நிஜ வாழ்க்கையில் உண்மையான ஹீரோவாக வாழ்ந்துக் காட்டியவர். அரசியலில் நேர்மை, வாய்மை, தூய்மை, நாணயம் என அனைத்தையும் கற்பித்த மாமனிதராக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவராக விளங்கியவர்.

**எம்.பக்தவத்சலம்**

**மு**. **பக்தவத்சலம்** (M. Bhakthavatsalam)(9 அக்டோபர் 1897 – 13 பிப்ரவரி 1987) சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார்.[1] விடுதலைப் போராட்டக் காலங்களில் அமராவதி சிறையில் அடைக்கப்பட்டு எண்ணற்ற இன்னல்களை அனுபவித்தவர். 1963 ஆம் ஆண்டு மதராஸ் முதல்வராகப் பொறுப்பேற்ற பின் தமது நிருவாகத் திறனை திறம்பட வெளிப்படுத்தியவர். இந்து சமய

அறநிலையத்துறையின் திருக்கோவில்களின் நிதியிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள் போன்ற சமுதாய நலத்திட்டங்களைத் தொடங்கலாம் என்ற சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்தவர்

1960ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் அழைப்பை ஏற்று அந்நாட்டிற்குச் சென்று வந்த அவர், 'இன்னும் இரு ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் நிறைவேற்றி விட்டால் நாமும் அவர்களது நிலையை அடைந்துவிடலாம், என்று அப்போதே நம்பிக்கையுடன் குறிப்பிட்டவர். அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஒரு மனிதாபிமான உணர்வோடு, மனிதநேய உணர்வோடு வாழ்ந்து காட்டியவர்.

அரசியல் வானில் சூரிய சந்திரர்களுக்கு நடுவில் நட்சத்திரங்கள் அரிதாகத்தான் கவனம் பெறுகின்றன. காமராஜருக்கும் அண்ணாவுக்கும் இடையே தமிழக முதல்வராகப் பொறுப்பு வகித்த எம்.பக்தவத்சலமும் (1897-1987) அப்படியொரு நட்சத்திரமாகிவிட்டார். திறமையிலும் தியாகத்திலும் யாருக்கும் குறையாதவர் என்றாலும், அவர் தமிழக வரலாற்றில் மிகவும் அரிதாகவே நினைவுகூரப்படுகிறார்.

பக்தவத்சலத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவரது தாய்மாமா சி.என்.முத்துரங்க முதலியாரைப் பற்றியும் குறிப்பிடுவது ஒரு வழக்கம். தென்னிந்தியாவின் அரசியல் சூழல் பிராமணர் - பிராமணர் அல்லாதார் என்று அணி பிரிந்து கிடந்த காலத்தில், பிராமணர் அல்லாதார் தரப்பிலிருந்து தேசிய இயக்கத்தை வலுப்படுத்தியவர் அவர். 1934-லேயே மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரை முன்மாதிரியாகக் கொண்டே பக்தவத்சலமும் அரசியல் களத்துக்குள் அடியெடுத்துவைத்தார். வழக்கறிஞர் பட்டம் பெற்ற பக்தவத்சலம், அதைத் தொழிலாகத் தேர்ந்தெடுக்காமல் சுதந்திரப் போராட்டத்தில் முழு மூச்சாகப் பங்கெடுத்தார். மும்முறை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு திருச்சி, வேலூர், மதுரை உள்ளிட்ட சிறைகளில் தண்டனையை அனுபவித்தார்.

அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடுவதால் அந்த ஆட்சியில் சிறையில் எந்தவிதமான சலுகைகளையும் கோரக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர்.

**நல்ல நிர்வாகி**

1964-ல் காமராஜர் காங்கிரஸின் தேசியத் தலைமையை ஏற்றுக்கொள்ள அவரையடுத்து தமிழக முதல்வராக பக்தவத்சலம் பொறுப்பேற்றுக்கொண்டார். உட்கட்சியில் தேர்தல் நடத்தப்பட்டு, ஜனநாயக முறையில் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர். ஆனால், வாய்ப்பும் பெரும்பான்மையும் மட்டுமே அவர் முதல்வரானதற்குக் காரணமல்ல. 1937-ல் ராஜாஜியின் முதல் அமைச்சரவையிலேயே அங்கம் வகித்தவர் அவர். சுதந்திரத்துக்கு முன்பும் பின்புமாக காங்கிரஸ் அமைச்சரவைகளில் விவசாயம், கல்வி, பொதுப் பணித் துறை, அற நிலையத் துறை என்று பல்வேறு துறைகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அமைச்சரவை அனுபவம் பெற்றவர். நல்ல நிர்வாகி என்று பெயரெடுத்தவர்.

1946-ல் அவர் பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோதுதான் கீழ்பவானி அணைக்கட்டுத் திட்டம் உருவானது. கொங்கு மண்டலத்தின் முன்னேற்றப் படிகளில் அது முக்கியமான ஒன்று. அவர் விவசாயத் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோதுதான், கோவை விவசாயக் கல்லூரி மேம்படுத்தப்பட்டது. அதுவே இன்று பல்கலைக்கழகமாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அறநிலையத் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது, கைவிடப்பட்ட நிலையில் இருந்த நூற்றுக்கணக்கான கோயில்களைப் புனரமைத்தார். அதிக வருமானம் கிடைக்கும் கோயில்களின் சார்பில் கல்வி நிறுவனங்களைத் தொடங்கினார். தருமபுர ஆதீனம் அவருக்கு நல்லறங்காவலர் என்று பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. கோயில் நிர்வாகத்தில் அரசின் தலையீடு என்று அந்த நாட்களில் எந்தக் குற்றச்சாட்டும் எழுந்ததில்லை.

**தொழில் துறையும் கல்வியும்**

ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்திலிருந்து ஆந்திர பிரதேசம் பிரிந்து சென்றதால் வேளாண் உற்பத்தி சரிந்த நிலையில், தமிழகத்தைத் தொழில் துறையில் முன்னணி மாநிலமாக உயர்த்தியதில் காமராஜர் தலைமையிலான சி.சுப்ரமணியன், பக்தவத்சலம், ஆர்.வெங்கட்ராமன் கூட்டணிக்கு முக்கியப் பங்குண்டு. பக்தவத்சலம் முதல்வராகப் பொறுப்பு வகித்தபோது ஆர்.வெங்கட்ராமன் தொழில் துறை அமைச்சராக இருந்தார். அவரை முழுச் சுதந்திரத்துடன் பணியாற்ற பக்தவத்சலம் அனுமதித்தார். தமிழகத்தின் தொழில் துறை வளர்ச்சியில் பக்தவத்சலம்-வெங்கட்ராமன் நட்புறவின் பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டியது. முதலமைச்சருக்கும் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருக்கும் இடையிலான உறவுக்கும்கூட அது ஒரு முன்னுதாரணம்.

பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில்தான் உயர்நிலைப் பள்ளிகளில் மீண்டும் ஆங்கில வழி வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் ஆங்கிலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவதற்காகப் பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. பின்னாட்களில், தமிழக மாணவர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தங்களது உயர் படிப்புகளைத் தொடர இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. அதே நேரத்தில், கல்லூரிகளில் தமிழில் கற்கும் வாய்ப்பு உருவானதும் அவரது ஆட்சிக் காலத்தில்தான். புகுமுக வகுப்புகளைத் தமிழில் நடத்துவதற்கு மானியங்களை அளித்து ஊக்குவித்தார். இவர் காலத்தில் தொடங்கப்பட்ட தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்தான் இன்று பாடநூல் நிறுவனமாக விரிந்துபரந்துள்ளது.

வெள்ளையனே வெளியேறு காலகட்டத்தில் காங்கிரஸிலிருந்து ராஜாஜி வெளியேறியபோது, காமராஜருடனும் காங்கிரஸுடனும் இணைந்து நின்ற

பக்தவத்சலம் இந்திரா காலத்தில் காங்கிரஸ் உடைந்தபோது சி.சுப்ரமணியத்துடன் இணைந்து இந்திராவுடன்தான் நின்றார். ஆனால், இந்த முடிவுகள் எதுவும் அவரது தனிப்பட்ட அரசியல் லாபங்களுக்காக எடுக்கப்படவில்லை. அவரது இறுதிக் காலத்தில் பலமுறை அவருக்கு ஆளுநர் பதவிக்கான அழைப்புகள் வந்தபோது நான் பென்ஷன்வாதியல்ல, அரசியல்வாதி என்று சொல்லி அதை மறுத்தவர் அவர்.

**அரசியலில் இழந்தவர்**

பக்தவத்சலத்தின் தந்தையார் இறந்தபோது அவருக்கு 100 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தில் ஒரு சென்ட் அளவுகூட பக்தவத்சலத்தால் பாதுகாக்கப்படவில்லை. அரசியலுக்காக அவர் அளித்ததுதான் அதிகமே ஒழிய அங்கிருந்து பெற்றுக்கொண்டது பெயரையும் புகழையும் மட்டும்தான். அமெரிக்காவில் உயர் கல்வி முடித்த அவரது மகனுக்கு அரசுப் பணிக்குக்கூட அவர் முயலவில்லை. வட இந்தியாவில் தனியார் நிறுவனம் ஒன்றில்தான் அவர் பணியாற்றினார். அதேபோல, அவரது மகள்களில் ஒருவர் ஹோம் சயின்ஸ் படிக்க விரும்பினார். தந்தையின் பெயரைப் பயன்படுத்தி பரிந்துரைகள் பெறுவதற்கு அனுமதியில்லை. எனவே, வேறொரு கல்லூரியில் புவியியல் படித்தார். இன்னொரு மகள், வீட்டு வசதி வாரியத்தில் மனு போட்டிருந்தார். அது தெரிந்து இவர் தடுக்கவே கடைசியில் அவர் மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். அவரது மகள்களில் ஒருவரும் சமூக சேவகியான சரோஜினி வரதப்பனுக்கு சட்டமன்ற மேலவை அல்லது நாடாளுமன்ற மாநிலங்களவையில் இடம் கிடைக்கலாம் என்ற வாய்ப்பு வந்தது. ஒரு வீட்டில் இருவர் பதவி வகிக்கக் கூடாது என்று அந்த யோசனைக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டார். குடும்பமும் உறவுகளும் எப்போதும் எந்த உதவியும் அவரிடமிருந்து பெற முடியாது என்பதில் உறுதியாக இருந்தார் பக்தவத்சலம். ஆனால், மக்களுக்கு அவர் வீடும்

அலுவலகமும் கதவுகளைத் திறந்தே வைத்திருந்தன. காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையில் யாரும் அவரைச் சந்தித்துப் பேச முடியும். அமைச்சராக இருந்த காலத்திலிருந்தே சேவகர்கள் தன்னைப் பின்தொடர்வதையும் வாகனத்தில் சைரன் ஒலிப்பதையும் தவிர்த்தவர். தனிமனித வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்க பல பண்புகளையும் ஒருங்கே பெற்ற பக்தவத்சலம் அரசியலில் தோல்வியுற்றதற்கு முக்கியக் காரணமும்கூட அவரது பண்புகளில் ஒன்றுதான். கட்சிக்கும் தலைமைக்கும் அவர் காட்டிய அளவுகடந்த விசுவாசமே அது.

**தோல்வியின் காரணங்கள்**

காமராஜருக்குப் பிறகு கட்சியில் தேர்தல் நடத்தப்பட்டு பெரும்பான்மையைப் பெற்றே பக்தவத்சலம் முதல்வரானார். ஆனால், காமராஜரின் அமைச்சரவை அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் அவரைப் பின்தொடர்ந்தது. ஒரு முதல்வராக அவர் தன்னிச்சையாக முடிவெடுக்காத நிலையில் இருந்தார். அன்றைய காங்கிரஸின் தேசியத் தலைமை எடுத்த முடிவுகளுக்கெல்லாம் தலையசைத்தார். மிக முக்கியமாக, கட்சித் தலைமையின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப மொழிப் போராட்டங்களை அவர் கையாளத் தொடங்கியபோது அவருடைய ஆட்சி மூர்க்கமானது. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட தவறுகளை அடுத்து வந்த தேர்தலிலும்கூட அவரால் சரிசெய்துகொள்ள முடியவில்லை. அவர் பரிந்துரைத்த வேட்பாளர்களின் பட்டியல் புறந்தள்ளப்பட்டது. கட்சியின் வேட்பாளர் பட்டியலையும் கட்சியின் தேசியத் தலைமையே முடிவுசெய்தது. தமிழ்நாட்டில் கொழுந்துவிட்டு எரியலான தமிழ் உணர்வு பக்தவத்சலத்தின் ஆட்சி, அவருடைய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்ததோடு, தமிழ்நாட்டில் தேசியக் கட்சிகளின் ஆட்சிக் கனவுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது.

எவ்வளவு நல்ல நிர்வாகியாக இருந்தாலும், தியாகங்களை செய்தாலும் ‘மக்களா; கட்சியா?’ என்ற சூழல் வரும்போது அரசியலில் மக்கள் பக்கம் நின்று அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிப்பவர்களே மக்கள் மனதில் நிலைத்திருப்பார்கள் என்பதற்கான வரலாற்றுப் பாடம் ஆகிப்போனார் பக்தவத்சலம்.

**சுய மதிப்பீட்டு கேள்வி**

- **காங்கிரஸ் ஆட்சியின் போது சி.ராஜகோபாலாச்சாரி , கே.காமராஜ், மற்றும் எம்.பக்தவத்சலம் ஆகியோரின் தலைமைத்துவ பாணியைப் பற்றி ஆராயக.**

  ------------------------------------------------------------------------------------------------------------------------
- **காங்கிரஸ் அரசாங்கத்தின் கீழ் புதிய பள்ளிகளை நிறுவுதல் போன்ற முயற்சிகளின் தாக்கத்தை மதிப்பிடுங்கள்.**

  ------------------------------------------------------------------------------------------------------------------------
- **பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் காங்கிரஸ் அரசாங்கத்தின் பங்கை மதிப்பிடுங்கள்.**

  ------------------------------------------------------------------------------------------------------------------------

## இயல் - மூன்று

**தி.மு.க. நிர்வாகம் - சி.என். அண்ணாதுரை - மதராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என பெயர் மாற்றம் - இரு மொழிக் கொள்கை - பி.யு.சி வரை அனைவருக்கும் இலவசக் கல்வி. - கலைஞர் எம். கருணாநிதி - குடிசை அகற்றும் வாரியம் - பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் அமைத்தல் - இட ஒதுக்கீடு கொள்கை அமலாக்கம் - சேலம் உருக்காலை - மனுநீதி திட்டம் - விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் - பெண்களுக்கு சொத்துரிமை ; பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் - அரசு வேலைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு - சமத்துவபுரம் திட்டம் - டைடல் பார்க் - ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி - உள்கட்டமைப்பு அதிகரிப்பு - தொழில் வளர்ச்சி.**

### குறிக்கோள்கள்

- சென்னையை தமிழகமாக மாற்றுவது உள்ளிட்ட திமுக அரசின் கல்விக் கொள்கைகளின் தாக்கத்தை ஆராயுங்கள்
- மகளிர் மேம்பாட்டுக் கழகம் நிறுவுதல் மற்றும் அரசு வேலைகளில் 33% இட ஒதுக்கீடு.
- "புது வாழ்வு" போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்துவது உட்பட , பொருளாதார வளர்ச்சி மற்றும் நலனை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் முயற்சிகளைப் பற்றி விவாதிக்கவும்.
- திமுக அரசின் நிர்வாகத்தின் சமூக , பொருளாதார அம்சங்கள் மற்றும் தமிழகத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள்.

### திராவிட முன்னேற்ற கழகம்

நீதிக்கட்சி என்பது இந்தியாவில் 1916 ஆம் ஆண்டு மருத்துவர்கள் சி.நடேசன், டி.எம்.நாயர் மற்றும் வழக்கறிஞர் பி.டி.ராஜன், சர் பிட்டி தியாகராயர் ஆகியோரால் சென்னையில் நிறுவப்பட்ட அரசியல் கட்சியாகும். தமிழ்நாட்டின் சமூக - அரசியல் விழிப்புணர்வில் இக்கட்சி முக்கிய பங்கு வகித்தது. சமூக நீதி மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளுக்காக இக்கட்சி குரல் கொடுத்தது.

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி ஒரு சமூக சீர்திருத்தவாதி ஆவார். அவர் தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிடர் கழகத்தை நிறுவினார்.

பகுத்தறிவு, சுயமரியாதை மற்றும் சமூக நீதிக்கான அவரது வாதங்கள் தமிழ்ச் சமூகம் மற்றும் அரசியலில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, சமூக அரசியல் மாற்றத்திற்கான இயக்கங்களை ஊக்குவிக்கிறது.

பேரறிஞர் அண்ணா திராவிட இயக்கத்தின் முக்கிய தலைவர். தமிழ்நாட்டுக்கு சிறப்பான பங்களிப்பைச் செய்தவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) நிறுவனர். மாநிலத்தில் கட்சியை ஓர் அரசியல் சக்தியாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது 1949 இல் நிறுவப்பட்ட அரசியல் கட்சியாகும். தமிழ்நாட்டில் குறிப்பாகத் தமிழ் மொழி, கலாசாரம், சமூக நீதி மற்றும் திராவிட இயக்கத்திற்குக் குரல் கொடுக்கும் கருவியாக இருக்கிறது. 1960களில் அதன் எழுச்சி மாநிலத்தின் அரசியல் பரப்பில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது. பல மாநில, மக்களவைத் தேர்தல்களில் வெற்றி பெற்றது. கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன் போன்ற துறைகளில் கொள்கை முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கலைஞர் என்று அன்புடன் நினைவுகூரப்படும் முத்துவேல் கருணாநிதி, தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராகப் பதவி வகித்தவர். அவர் சமூக நீதியின் உறுதியான வழக்குரைஞராகவும் சமூகத்தின் விளிம்புநிலை பிரிவினரை மேம்படுத்துவதற்கும், பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் பணியாற்றினார். சாதி அடிப்படையிலான பாகுபாட்டைக் குறைப்பதற்கும் அனைவருக்கும் சம வாய்ப்புகளைப் பெறுவதற்கும் அவர் பல கொள்கைகளை அறிமுகப்படுத்தினார். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், கவிஞர் மற்றும் நாடக ஆசிரியராகவும் இருந்தார். தமிழில் பல இலக்கியப் படைப்புகளை எழுதியவர்.

**பேரறிஞர் அண்ணா**

**1909** செப்டம்பர் **15**ம் தேதி இந்தப் பெயருக்கு உரியவர் காஞ்சிபுரத்தில் ஓர் எளிய நெசவாளர் குடுப்பதில் பிறந்த போது அது அடுத்த தெருவுக்கு கூட செய்தி இல்லை. நடராஜன் – பங்காரு அம்மாள் இணையருக்கு ஒரு மகன் அவ்வளவுதான். 1969 பிப்ரவரி 3-ம் தேதி அவர் இறந்தபோது அது பல கோடி மக்களுக்குப் பெருதுயரம். அண்ணாவின் இறுதி ஊர்வலத்துக்காக சென்னையில் குவிந்தவர்கள் எண்ணிக்கை 1.5 கோடி என்று மதிப்பிடப்பட்டது. இந்த எண்ணிக்கை கின்னஸ் உலக சாதனிப் புத்தகதிதில் பதிவானது.

"அண்ணா! என்னும் மூன்றெழுத்துக்குத் தமிழ்நாட்டில் தனி மாட்சி உண்டு. அண்ணா என்றாலே *பேரறிஞர் அண்ணா! தான். இவர் வீதியில் இறங்கினால் ஊர்வலம்; மேடை ஏறினால் மாநாடு; நாட்டு மக்களுக்குப் பேரறிஞர்; கட்சித் தொண்டர்களுக்கு 'அண்ணா'. நெற்றியில் அறிவைத் தேக்கி, நெஞ்சத்தில் வீரத்தினைத் தேக்கி, நாவில் என்றும் கருத்தைத் தேக்கி, கண்ணில் துடிப்பினைத் தேக்கி, கற்றறிந்த சான்றோர் அனைவரும் திகைக்கும் வண்ணம் வாழ்ந்தவர் அறிஞர் அண்ணா. தந்ைத பெரியார் அவர்களின் பாசறையில் வளர்ந்தவர் அண்ணா. "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு! என்னும் தாரக மந்திரத்தை மக்கள் மனங்களில் விதைத்தவர். அடுக்குமொழி நடையால் அனைவரையும் கவர்ந்தவர், கன்னித் தமிழில் கருத்துகளை வாரி வழங்கும் நாவன்மையால் அறிஞர்களாலும், அரசியல் தலைவர்களாலும், இலக்கிய வல்லுநர்களாலும், எழுத்தாளர்களாலும் பாராட்டுப் பெற்ற பண்பாளர். எழுத்துலகிலும், பேச்சுலகிலும் பெரும் மாற்றத்தை உண்டாக்கிய மாமேதை. "தமிழ்நாட்டுப் பெர்னாட்ஷா" என்று போற்றப்பெற்றவர். அண்ணாவின் எண்ணம், எழுத்து, சொல், செயல் யாவும் சமுதாய மேம்பாட்டை மையமாகக் கொண்டிருந்தன. சமுதாயத்தில் காணப்பட்ட சிக்கல்களுக்கு உண்டான காரணங்களைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து அவற்றுக்கான

தீர்வுகளை எடுத்துரைத்தவர். வாழ்நாளெல்லாம் தம்மைச் சாதாரணமானவன் என அடக்கத்தோடு பேசி அசாதாரணமான சாதனைகளைப் புரிந்தவர் அண்ணா.

சமூக நீதி, மாநில உரிமை, மொழி உரிமை தொடர்பான சிந்தனையாளர், அந்த சிந்தனையை வெற்றிகரமாக அரசியல் படுத்தியவர். அப்படி அரசியல் படுத்துவதற்காக மேடை, பத்திரிகை, நாடகம், சினிமா, நூல்கள் என்று எல்லா ஊடகங்களையும், கையில் எடுத்து அதற்குப் புதிய தோற்றமும், உள்ளடக்கமும் தந்தவர்.

காங்கிரஸ் அல்லாத கட்சி ஒன்றின் சார்பில் இந்தியாவில் முதலமைச்சரான இரண்டாவது தலைவர். தமிழ்நாட்டில் இடையறாமல் நடந்துவரும் 53 ஆண்டுகால திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்கு அதன் மூலம் அடித்தளம் இட்டவர். நவீன தமிழின் மீது, மக்கள் புழங்கும் தமிழின் மீது அண்ணா செலுத்தியிருக்கும் தாக்கம் அளப்பரியது

எல்லாவற்றுக்கும் மேலாக உலகில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஒரு நிலப்பரப்புக்கு அதன் முகவரியாக விளங்கும் 'தமிழ்நாடு' என்ற பெயரை சூட்டியவர் அண்ணா. தங்களை ஒரு தனித்த தேசிய இனமாக உணரத் தொடங்கிய தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு அசைக்கமுடியாத ஓர் அங்கீகாரமாகிவிட்டது

அண்ணா என்ற பெயர் ஒரு பண்பாட்டின் குறியீடாகிவிட்டது. அது ஒரு வரலாறாக, அடையாளமாக கொண்டாடப்படுகிறது. அவரது பெயரில் கட்சி, பல்கலைக்கழகம், விமான நிலையம், சாலை, நூலகம் என்று ஏராளமான நிறுவனங்கள் உள்ளன. ஆனாலும் கூட நவீன தமிழ்நாட்டின் மொழி, அரசியல், இயல்பியல்,சுருக்கமாக அறிமுகம் செய்யும் முயற்சியே ஆகும்.

மிக எளிய குடும்பத்தில் பிறந்த அண்ணா தமது சித்தி ராஜாமணி என்பவராலேயே வளர்க்கப்பட்டார். அவரது குடும்பம் கடவுள் நம்பிக்கை மிகுந்த

குடும்பம். எனவே இயல்பிலேயே அண்ணாவும் சிறு வயதில் கடவுள் நம்பிக்கை மிக்கவராகவே இருந்தார். பின்னாளில் தமிழ்நாட்டின் பிரபலமான நாத்திகத் தலைவரான அண்ணா சிறுவயதில் பிள்ளையார் பக்தர் என்ற தகவலைத் தெரிவிக்கிறது, அண்ணாவின் வளர்ப்பு மகன் டாக்டர் பரிமளம் எழுதிய 'அண்ணா வாழ்க்கை வரலாறு' நூல் ஆகும்.

**பச்சையப்பான் கல்லுரி தந்த திருப்புமுனை**

காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்த அண்ணா சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இன்டர்மீடியேட் படிப்பை முடித்தார். மிக சாதாரண குடும்பத்தில் பிறந்து சராசரி மாணவரைப் போலவே பள்ளிப்படிப்பை முடித்த அண்ணாவுக்கு இந்த பச்சையப்பான் கல்லுரி வாழ்க்கையே திருப்புமுனையை ஏற்படுத்தியது.

அங்கே அவர் சந்தித்த ஆங்கிலப் பேராசிரியரும். நீதிக்கட்சியில் செயல்பட்டவருமான, வரதராஜன்தான் அரசியலின் பக்கம் அண்ணாவின் கவனத்தைத் திருப்பியவர். மண்ணடியில் இருந்த பேராசிரியர் வரதராஜனின் எளிய, நெரிசலான அறையில் எப்போதும் மாணவர்கள் மொய்த்துக்கொண்டிருப்பார்கள். அதுதான் அண்ணாவுக்கு குருகுலம் போல அமைந்த இடம் என்று அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய **(Anna: Life and Times of C.N.Annadurai)** ஆர்.கண்ணன் குறிப்பிடுகிறார். வரதராஜனோடு சேர்ந்து பேராசிரியர் வேங்கடசாமி என்பவரும் அண்ணாவிடம் அரசியல் ஈடுபாடு ஏற்படக் காரணமாக இருந்தவர் என்கிறார்.

மோசூர் கந்தசாமி முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார் ஆகிய தமிழ்ப் பேராசிரியர்கள்தான் அண்ணாவுக்கு சங்கத் தமிழைக் கற்பித்தனர். அவர்களிடம் கற்ற சங்கத் தமிழ்தான் பின்னாளில் அண்ணாவின் புகழ் பெற்ற மேடைத் தமிழுக்கு அடிப்படை. மேற்கொண்டு பட்டப்படிப்பு படிக்க முடியாத

குடும்பச் சூழ்நிலை நிலவியது அண்ணாவுக்கு. பச்சையப்பன் கல்லூரி முதல்வராக இருந்த சின்னத்தம்பிப் பிள்ளை, அவரை பி.ஏ. ஆனர்ஸ் படிக்கும்படி வலியுறுத்தினார். கல்வி உதவித் தொகை கிடைக்கவும், பாடநூல் வாங்கவும் உதவுவதாக அவர் ஒப்புக்கொண்ட பிறகு அண்ணா 1931ம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. ஆனர்ஸ் படிப்பில் சேர்ந்தார்

இதற்கு ஓராண்டு முன்பே, 21 வயதில் அண்ணாவுக்கும் ராணி அம்மையாருக்கும் சம்பிரதாய முறைப்படி திருமணம் நடந்தது. இந்த இணையருக்கு குழந்தை இல்லை என்பதைத் தவிர, இல்லறம் நல்லவிதமாகவே சென்றதாக ராணியை மேற்கோள் காட்டிச் சொல்கிறார் .

கல்லூரியில் தவறாமல் வகுப்புகளுக்குச் செல்கிற அண்ணா, தீவிரமான படிப்பாளி. நீண்ட நேரத்தை நூலகங்களில் செலவிடுகிறவர். கல்லூரிக் காலத்திலேயே தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பங்கேற்றவர். அந்த நாள்களில் தமக்கு இதழியலில் ஈடுபாடு இருந்தது என அண்ணாவே பிற்காலத்தில் சொல்லிருக்கிறார்.

கல்லூரி மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக இருந்த அண்ணா 1931ம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரி மாணவர் பேரவையின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். இரண்டாண்டுகள் கழித்து அவர் கல்லூரி பொருளாதாரத் துறை மாணவர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். படித்து முடித்தவுடன் காஞ்சிபுரம் நகராட்சியில் எழுத்தராக 6 மாதம் பணி செய்தார். பிறகு சென்னை கோவிந்தப்ப நாயக்கன் நடுநிலைப்பள்ளியில் தமிழாசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்.

**நீதிகட்சில் அண்ணா**

இதற்குள், பிராமணர் அல்லாதார் அரசியல் இயக்கமாக இருந்த நீதிக்கட்சி செயல்பாடுகளில் ஈடுபடத் தொடைங்கிவிட்டார் அண்ணா.

அது நீதிக்கட்சி தன்னுடைய செல்வாக்கை இழந்துகொண்டிருந்த காலம். ஆதி திராவிடர்கள் உள்ளிட்ட பிராமணர் அல்லாதார் நலனுக்கான திட்டங்களை அமர்த்துவது, கல்வியைப் பரவலாக்குவது ஆகியவற்றில் அவர்கள் கவனம் செலுத்தினர். ஆனால், நீதிக்கட்சித் தலைவர்கள் பலர் நிலவுடைமையாளர்கள். பிரிட்டிஷ் அரசின் பதவி, பட்டங்களை தாங்கியவர்கள். இது அவர்களை எளிய மக்களிடம் இருந்து அந்நியப்படுத்திய காலம் அது ஆனால், பிராமணர் அல்லாதார் அரசியலுக்கு என்று இருந்த ஒரே கட்சி நீதிக்கட்சிதான் என்பதால் அண்ணாவுக்கு வேறு தேர்வு இருக்கவில்லை. அண்ணாவின் நீதிக் கட்சி தொடர்பு அவருக்கு, ராஜாக்களோடும், பெரும் பணக்காரர்களோடும் கனவான்களோடும் பழகும் வாய்ப்பை அற்படுதித் தந்தது.

**பெரியாரோடு சேர்ந்த அண்ணா**

சாமானியர்களைப் பற்றிய கவலைகளோடு சமூகப் பாகுபாடுகளை அகற்றப் பாடுபட்டுவந்த, அலங்காரங்கள் இல்லாமல், கடும் மொழியில் பேசிவிடக்கூடிய பெரியார் ஈ.வெ.ராமசாமியைத்தான் அண்ணா தலைவராகத் தேர்ந்தெடுத்தார்.

1935ம் ஆண்டு திருப்பூரில் நடந்த செங்குந்த இளைஞர் மாநாட்டில் பெரியாரை முதல் முதலாக சந்தித்தார் அண்ணா. அப்போது முதல் பெரியார் அண்ணாவின் தலைவரானார். அப்போது நடந்த உரையாடலை, 1949ம் ஆண்டு நடந்த திமுக தொடக்க விழாவில் அண்ணா இப்படி நினைவு கூர்த்தார். "பெரியார் என்னைப் பார்த்து என்ன செய்கிறாய் என்று கேட்டார். படிக்கிறேன். பரீட்சை எழுதியிருக்கிறேன் என்றேன். உத்தியோகம் பார்க்கப் போகிறாயா என்று கேட்டார். இல்லை உத்தியோகம் விருப்பமில்லை. பொது வாழ்வில் ஈடுபட விருப்பம் என்று பதில் அளித்தேன். அன்று முதல் அவர் என் தலைவர் ஆனார்.

1937ம் ஆண்டு ஈரோடு சென்ற அண்ணா அங்கு பெரியாரின் குடியரசு, மற்றும் விடுதலை நாளிதழ்களில் துணை ஆசிரியராக 60 ரூபாய் சம்பளத்துக்கு வேலைக்கு சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 28. அந்த வயதில், அண்ணாவின் திறமையைக் கண்டு வியந்த பெரியார், அதே ஆண்டு துறையூரில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டை தலைமையேற்று நடத்தும் பொறுப்பை அண்ணாவுக்கு அளித்தார்.

## முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம்

அதே ஆண்டில் இன்னொரு முக்கிய சம்பவமும் நடந்தது. சென்னை மாகாணத்தில் ஆட்சியைப் பிடித்த ராஜாஜி, பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை இந்தி கற்பது கட்டாயம் என்று ஆக்கினார் (பின்னாளில் ராஜாஜியே இந்தித் திணிப்பை எதிர்த்தார் என்பது வேறு). இதை எதிர்த்து பெரியார் போராட்டம் அறிவித்தார். பெரியார் அண்ணா ஆகியோர் 1938ம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். அண்ணாவுக்கு 4 மாத சிறைவாசம் விதிக்கப்பட்டது.

## திராவிட நாடு

இந்த முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்து பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முன்வைத்தார். அப்போது தமிழ்நாடு என்ற மாநிலமே உருவாகிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையில் இருக்கும்போதுதான் பெரியாருக்கு நீதிக்கட்சித் தலைவர் பதவி தரப்பட்டது.

இதுவே பின்னாளில் நீதிக் கட்சியையும், பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தையும் இணைத்து 1944ல் திராவிடர் கழகமாக ஆக்குவதற்கு வழி கோலியது. நீதிக்கட்சியிலும், திராவிடர் கழகத்திலும் பெரியாரின் தளபதியாக இருந்தார் அண்ணா.

இந்திய சுதந்திரம் குறித்து ஆலோசிக்கவும், இரண்டாம் உலகப் போரில் இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகவும் 1942ல் இந்தியா வந்த கிரிப்ஸ் தூதுக்குழுவை சந்தித்து திராவிட நாட்டை தனி நாடாக அங்கீகரிக்கும்படி பெரியார் கோரிக்கை வைத்தார். அந்த சந்திப்பின்போது அண்ணா உடன் இருதார். இந்தக் கோரிக்கையை சர் ஸ்டா.ஃபோர்ட் கிரிப்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. இதையடுத்து, திராவிட நாடு கோரிக்கை நிறைவேறுவதற்கான வாய்ப்பு நழுவிவிட்டது என்று அண்ணா நினைக்கத் தொடங்கினார் என்று பின்னாளில் அவரோடு முரண்பட்ட ஈ.வெ.கி.சம்பத் அண்ணாவின் மறனத்துக்குப் பின் குறிப்பிட்டார்.

திராவிட நாடு என்ற லட்சியத்தை அண்ணா அத்துடன் கைவிடவில்லை. தன்னுடைய பத்திரிகைக்கு 'திராவிட நாடு' என்று பெயர் வைத்தார். திராவிட நாடு என்ற லட்சியத்துக்கு தடையாக இருந்ததாக அவரும் பெரியாரும் நினைத்தவற்றுக்கு எதிராக தீவிரமாக செயல்பட்டார்.

**கம்பராமாயணம் பெரியபுராணம் எதிர்ப்பு**

கம்ப ராமாயணம், பெரிய புராணம் ஆகிய நூல்கள் திராவிடர்கள் மீது 'ஆரியர்கள்', வட இந்தியர்களின் ஆதிக்கம் செலுத்த வழி செய்வதாகவும், அவை அறிவுக்குப் புறம்பாக இருப்பதாகவும் பெரியாரும் அண்ணாவும் தீவிரமாக பிரசாரம் செய்தனர். இவர்களின் கருத்துகளால் ஏராளமான இளைஞர்கள் ஈர்க்கப்பட்டனர். ஆனால், நீதிக்கட்சியின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட தமிழ் ஆர்வலர்கள், புலவர்கள், சைவை, வைணவ மதப் பற்று மிகுந்தவர்கள் இந்த கம்பராமாயணம் பெரியபுராணம் எதிப்பால் துனுக்குற்றனர்.

கம்ப ராமாயணம், பெரிய புராணம் என்ற இரண்டு நூல்களையும் தீயிட்டுக் கொளுத்தவேண்டும் என்று அண்ணா வாதிட்டார். இந்தக் கருத்தை எதிர்த்த தமிழறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகிய

இருவரோடும் 1943ம் ஆண்டு அண்ணா தனித்தனியாக நேருக்கு நேர்விவாதத்தில் ஈடுபட்டார்.

இரண்டு தரப்பும் மிகவும் மரியாதையான முறையில் நாகரிகமாக தங்கள் கருத்துகளை முன்வைத்து வாதிட்டன. இந்த விவாதம் 'தீ பரவட்டும்' என்ற பெயரில் நூலாக வெளியாகி பிரபலம் அடைத்தது.

தங்கள் கலைகளும், வாழ்க்கை முறையும் வேறுபட்டது என்று நிரூபிக்க முடிந்ததால்தான் இரண்டே ஆண்டுகளில் தங்களுக்கு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம்களால் முன்னெடுக்க முடிந்தது. ஆனால், தமிழர்கள் 'ஆரியர்களின்' வாழ்க்கை முறையையும், கலைகளையும் தங்களுடையது என்று ஏற்றுக்கொண்டதால் தன்னாட்சிக்கோ, தன்மானத்துக்கோ அவர்களால் போராட முடியவில்லை. கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் 'ஆரியர்'களின் மேன்மையைப் பேசுகின்றன. தங்களைத் தாங்களே திராவிடர்கள் சிறுமையாக நினைக்கும்படி செய்கின்றன என்று வாதிட்டார் அண்ணா.

மொழி நடை, அழகிய சொற்கள் ஆகியவற்றைத் தேடுகிறவர்கள் கம்ப ராமாயணம், திருவாசகம் ஆகியவற்றைப் படிக்கலாம் என்று கூறிய அண்ணா 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்றார். எதிரிகளின் நேர்மறைப் பண்பை ஏற்கவேண்டும் என்று சொல்வதற்கு அண்ணாவின் இந்த வாசகம் இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

**பெயாருடன் முரண்பாடு**

திராவிடர் கழகத்தினர் கட்டாயம் கருப்புச் சட்டை அணியவேண்டும் என்று பெரியார் கொண்டு வந்த தீர்மானத்தை அண்ணா விரும்பவில்லை. இதனால், சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று அண்ணா கருதினார். சில கூட்டங்களுக்கு அண்ணாவே வெள்ளை சட்டையில் வந்து பேசியது பெரியாரை எரிச்சல்படுத்தியது. அண்ணாவின் புகழ் காரணமாக

அவர் புறக்கணிக்கப்பட முடியாதவராக இருந்தார். எதையும் வலுவாக ஆனால், நாசூக்காகப் பேசும் அண்ணாவின் திறமை காரணமாக மாற்றுக் கருத்து உடையவர்களையும் கவரும் ஆற்றல் அவருக்கு இருந்தது. இப்படி பல விஷயங்களில் கொஞ்சம் கொஞ்சமாக பெரியார் - அண்ணா இடையே விரிசல் அதிகமானது.

இந்நிலையில், பிரிட்டாஷாரிடம் இருந்து நேரடியாக, பாகிஸ்தான் போல திராவிட நாடு என்பதைத் தனி நாடாக்கி விடுதலை பெறவேண்டும் என பெரியார் மேற்கொண்ட முயற்சி தோட்ட்றுப் போனது. 1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா விடுதலை பெற்றது. வட இந்தியர்களிடம் திராவிடர்களின் எதிர்காலம் ஒப்படைக்கப்படுவதாக கூறி இதை பெரியார் துக்க தினம் என்று வருணித்தார்.

இந்நிலையில் 70 வயதைக் கடந்த பெரியார் தன்னைவிட சுமார் 40 வயது குறைந்தவரான மணியம்மையை திருமணம் செய்ய முடிவெடுத்தது திராவிடர் கழகத்துக்குள் பெரும் புயலைக் கிளப்பியது. இது கட்சிக்கு அவப்பெயரைக் கொண்டுவரும் என்று விமர்சனம் எழுந்தது. இது வெறும் திருமணம் மட்டுமல்ல, பெரியார் தனக்குப் பிறகு தனது மனைவியை தலைவராக்கப் பார்க்கிறார் என்ற விமர்சனமும் வந்தது. இந்நிலையில், அதிருப்தியாளர்கள் கூடி 1949 செப்டம்பர் 17ம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்படுத்தினர். அண்ணா அதன் பொதுச் செயலாளர் ஆனார். பெரியார் இந்த புதிய கட்சியை கடுமையாக விமர்சித்தார்.

**திராவிட முன்னேற்றக் கழகம்**

முதலில் திராவிடர் கழகத்தைப் போலவே தேர்தல் அரசியலில் ஈடுபடாத இயக்கமாகவே திமுக இருந்தது. பிறகு 1957ம் ஆண்டு நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் பங்கேற்று 15 எம்.எல்.ஏ.க்களை வென்றது. காஞ்சிபுரத்தில் அண்ணா வெற்றி பெற்றார். 1962-ம் ஆண்டு நடந்த அடுத்த தேர்தலில் திமுக 50

தொகுதிகளை வென்றது. ஆனால், அண்ணா தோல்வி அடைந்தார். இதையடுத்து திமுக எம்.எல்.ஏ.க்களால் நாடாளுமன்ற மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கு அவர் ஆற்றிய உரை புகழ் பெற்றது திமுகவைத் தோற்றுவித்தபோது அதன் கொள்கையாக நாத்திகம் இருக்கவில்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சமரசக் கொள்கையை அண்ணா வெளிப்படுத்தினார். இது தீவிர பெரியாரியவாதிகளால் விமர்சிக்கப்பட்டது .

'நான் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன் அதற்குத் தேங்காயும் உடைக்கமாட்டேன்' என்ற அண்ணாவின் வாசகம், வெகுஜன அரசியலுக்கேற்ற நிலைப்பாடாக, அதே நேரம் மதச்சார்பற்ற அரசியலுக்கேற்ற நிலைப்பாடாகவும் இருந்தது. அண்ணாவுக்கு முன்பே உடுமலை நாராயணகவி, பாரதிதாசன் போன்ற திராவிட இயக்க சிந்தனை உள்ள கவிஞர்கள் சினிமாவுக்குள் நுழைந்துவிட்டனர். ஆனால், 1948ம் ஆண்டு நல்ல தம்பி படத்துக்கு வசனகர்த்தாவாக அண்ணா திரைத்துறையில் நுழைந்தபோது அது திராவிட இயக்கத்துக்கும், திரைத்துறைக்குமே முக்கியமான திருப்பு முனையாக பண்பாட்டு மாற்றமாக இருந்தது என்கிறார் திரைப்படம் குறித்து முனைவர் பட்ட ஆய்வு செய்தவரும்,

"நல்ல தம்பிக்கு அண்ணா வசனம் எழுதியிருந்தாலும், **1949**ம் ஆண்டு அண்ணாவின் கதை வசனத்துடன் வெளியான வேலைக்காரி படம்தான் உண்மையில் திரைத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அதற்கு முன்பு காவியப் படங்கள், அரசர்கள்களைப் பற்றிய படங்கள், தெய்வங்களைப் பற்றிய படங்கள் வந்துகொண்டிருந்த நிலையில், அண்ணாவின் வேலைக்காரிதான் சமானிய மனிதர்களைப் பற்றிய கதையை தமிழ்த் திரைத்துறையில் பேசிய முதல் படம் என்கிறார் முருகன். தெய்வீகமான, காவியமான பெயர்களைத்

தாங்கியே படங்கள் வந்துகொண்டிருந்த நிலையில், வேலைக்காரி என்ற பெயரே அந்தக் காலத் திரைத்துறையில் புரட்சிகரமானது".

**திராவிட நாடு கோரிக்கையை கைவிடுதல்**

இந்த நிலை வரையிலும் திமுக தன்னுடைய திராவிட நாடு பிரிவினை கொள்கையை கைவிடாமல் இருந்தது. ஆனால், 1963ம் ஆண்டு மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு பிரிவினை கோரும் அமைப்புகள் இந்தியாவில் தேர்தலில் பங்கேற்பதை தடை செய்யும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தியது. இந்த 16வது அரசமைப்பு சட்டத் திருத்தமே திமுகவை குறிவைத்து கொண்டுவரப்பட்டதுதான் என்று தமது 'ரீபப்ளிக் ஆஃப் ரெட்டோரிக்' நூலில் குறிப்பிடுகிறார்.

இதையடுத்து திமுக திராவிட இயக்கக் கோரிக்கையைக் கைவிடுவதா அல்லது தேர்தலில் போட்டியிடும் திட்டத்தைக் கைவிடுவதா என்ற சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்தப் பிரச்சனை 1963 ஜூன் 8,9,10 தேதிகளில் நடந்த திமுக பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டது. திராவிட நாடு கோரிக்கையை தற்காலிகமாக கைவிட்டு தேர்தலில் பங்கேற்கவேண்டும் என்பதற்கான காரணங்களை அடுக்கி மிக நீண்ட உரையை அண்ணா ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிவைத்து பொதுக்குழுவில் வாசித்தார். இந்த தமிழ் உரையை பின்னாளில் கருணாநிதி 'எண்ணித் துணிக கருமம்' என்ற பெயரில் தனி நூலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

**ஆட்சிக்கு வந்தது எப்படி**

திராவிட நாடு கோரிக்கை கைவிடப்பட்டது. ஆனால், அந்தக் கோரிக்கைக்கான காரணம் அப்படியே இருப்பதாகத் தெரிவித்தார் அண்ணா. இதன் பிறகு, திராவிட நாடு கோரிக்கை, மாநில சுயாட்சிக் கோரிக்கையாக மாற்றம் பெற்றது. மாநிலங்களுக்கு கூடுதல் உரிமை வேண்டும் என்று வாதிட்டார்

அண்ணா. 'மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி' என்பது அண்ணாவின் புகழ் பெற்ற முழக்கம். இதன் பிறகு, 1965ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அண்ணா தலைமையிலான திமுக தீவிரமாக ஈடுபட்டது. போராட்டம் வன்முறையாக மாறியபோது அண்ணா போராட்டத்தை நிறுத்தினாலும்கூட அந்தப் போராட்டம் திமுக ஆட்சிக்கு வருவதற்கான உந்து விசையாக மாறியது. அத்துடன் விலைவாசி உயர்வு போன்ற வாழ்வாதாரப் பிரச்சனைகளும் பக்தவத்சலம் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக அதிருப்தி அலையை உர்வாக்கியிருத்தன

ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட திமுக பெரு வெற்றி பெற்றது. 1967 மார்ச் 6-ம் தேதி அண்ணா முதல்வரானார். அண்ணாவும் அமைச்சர்களும் இறைவனின் பெயரால் பதவி ஏற்காமல் உளமாற உறுதி கூறி பதவி ஏற்றனர். வெற்றி பெற்ற பிறகு, 18 ஆண்டு காலப் பிரிவுக்குப் பின் பெரியாரை சென்று பார்த்தார் அண்ணா. தங்கள் தேர்தல் வெற்றியை பெரியாருக்கு சமர்ப்பிப்பதாகவும் அவர் கூறினார். அதன் பிறகு திமுக மற்றும் அண்ணா மீதான பகையை விட்டார் பெரியார்.

**செயல் படுத்த முடியாத மூன்று அரிசித் திட்டம்**

சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது, புரோகிதர்கள் இல்லாமல் நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆகியவை அவரது குறுகிய கால ஆட்சியின் சாதனைகள். திமுகவின் தேர்தல் வாக்குறுதியான ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசித் திட்டத்தை நிதி நெருக்கடியால் அண்ணாவின் அரசால் செயல்படுத்த முடியவில்லை. அதற்குப் பதிலாக ரூபாய்க்கு ஒரு படி திட்டம் செயல்படுத்தப்பட்டது.

சிக்கன நடவடிக்கையாக அமைச்சர்களின் ஊதியம் பாதியாக குறைக்கப்பட்டது. அண்ணா சென்னை நுங்கம்பாக்கம் அவென்யூ சாலையில் உள்ள தமது எளிமையான வீட்டிலேயே வாழ்ந்தார். ஒருவர் வைத்திருக்கக் கூடிய நில அளவுக்கான உச்ச வரம்பை 30 ஏக்கரில் இருந்து 15 ஏக்கராக குறைத்து சட்டம் இயற்ற அண்ணா நடவடிக்கை எடுத்தார். அந்த நடவடிக்கை அவரது மரணத்துக்குப் பிறகே நிறைவடைந்து கருணாநிதி முதல்வராக இருந்தபோது 1,78,880 ஏக்கர் மிகை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு 1,36,236 நிலமற்ற விவசைகளுக்கு பிரித்து வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தியது அண்ணாவின் மற்றொரு சாதனை. இதையடுத்து தமிழ்நாடு அரசின் கொள்கையாக இருமொழிக் கொள்கையையும் அண்ணா கொண்டுவந்தார். 1968 ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்துக்கு சென்று அங்கு உரையாற்றினார் அண்ணா. அதே ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகம் அண்ணாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்தது. அதே ஆண்டு செப்டம்பரில் அண்ணாவுக்கு புற்றுநோய் இருப்பது தெரியவந்தது. சிகிச்சைக்காக அண்ணா செப்டம்பர் 10ம் தேதி அமெரிக்காவுக்கு கிளம்பினார். சிகிச்சை முடிந்து அண்ணா சென்னை திரும்பிய பிறகும் அவரது உடல் நிலை மிகவும் பலவீனமாகவே இருந்தது. 1969 ஜனவரி இறுதியில் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பிப்ரவரி 3-ம் தேதி அதிகாலை 12.20க்கு அண்ணா இறந்தார்.

## தமிழும் அண்ணாவும்

'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல' என்ற தொடரை பலரும் பழமொழி என்று கருதியிருக்கலாம். ஆனால், இது அண்ணாவின் சொல்லாட்சி. 'உறுப்பினர்' என்ற சொல் தமிழுக்கு அண்ணாவின் கொடை என்று தமிழ் ஆட்சிமொழித் துறை அலுவலர் ஒருவர் ஒரு கருத்தரங்கில் தெரிவித்ததை

கேட்டிருக்கிறேன். தமிழில் ஏராளமான சம்ஸ்கிருதச் சொற்கள் கலந்து மணிப்பிரவளம் என்று சொல்லக்கூடிய கலப்பு மொழியாக ஆகிவிட்டிருந்த நிலையில், அந்த சம்ஸ்கிருதச் சொற்களை நீக்கி தமிழை மீட்க முயன்றது தனித்தமிழ் இயக்கம். மறைமலைஅடிகள், பரிதிமாற்கலைஞர், தேவநேய பாவாணர் போன்றோரால் முன்னெடுக்கப்பட்ட அந்த இயக்கம் பெரிதும் புலவர்களின் இயக்கமாகவேஇருந்தது.

தமிழ்ச் சமூகத்தின் புதிய தேவைகளுக்கு ஏற்ப தனித்தமிழ்ச் சொற்களைப் படைத்து அதை மேடையில் பேசி, பிறகு பேச்சு மொழியாகவும் ஆக்கியது திராவிட இயக்கத்தின் சாதனை என்றால் அந்த சாதனைப் பயணத்தை தொடங்கியவர் அண்ணா. பஞ்சாயத்து சமிதி என்ற சொல் ஊராட்சி ஒன்றியம் ஆனதும், காரியக் கமிட்டி செயற்குழு ஆனதும், மந்திரி அமைச்சர் ஆனதும், அக்கிரசேனார் அவைத்தலைவர் ஆனதும், சட்ட சபை சட்டப் பேரவை ஆனதும் அண்ணா.

"20-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் மேடைப் பேச்சு பழங்காலப் பேச்சைப் போல ஒலிக்கத் தொடங்கியது. பழங்காலச் சொற்களை, உவமைகளை, உருவகங்களைப் பயன்படுத்த தொடங்கியது. ஆனால், இவையெல்லாம் நவீன, ஜனநாயக அரசியலைப் பேசுவதற்காகவே பயன்பட்டன. வேறு சொற்களில் கூறுவதானால், தமிழர்கள் தங்களை ஒரு நாடாக, ஒரு மக்களாக, பொது மக்கள் திரளாக, ஓர் அரசியல் பொருளாதாரமாக, பெரிய அளவில் இவை அனைத்துமாக நினைக்கத் தொடங்கினர். இப்படி அவர்கள் புதிதாக ஒன்றைச் செய்ய முயன்றபோது, அவர்களது பழைய விஷயங்கள் மேலெழுந்து வந்தன"

அதாவது மேடைப் பேச்சில் செந்தமிழைக் கொண்டுவந்த திராவிட அரசியல், அதை பழமையை நோக்கி கொண்டு செல்வதற்காக செய்யவில்லை. நவீன ஜனநாயக அரசியலுக்காக அதை செய்தது. புதிதாக ஒரு சமூகமாக, நாடாக,

பொருளாதார அமைப்பாக தங்களை நினைக்கத் தொடங்கிய நிலையில், அந்த அரசியலைப் பேசுவதற்காகவே பழைய மொழியை மீட்டெடுத்து அவர்கள் பயன்படுத்தினர் என்பதே அவர் கூறுவதன் பொருள். இப்படி பழமையான செம்மொழியை மீட்டெடுத்து அதை புதிய அரசியலுக்குப் பயன்படுத்தும் அசகாய சூரத்தனத்தை திராவிட அரசியலுக்கு கொடையாக அளித்தது வேறு எவரும் அல்ல. அண்ணாதான்.

**தமிழ்நாடு பெயர் மாற்றம்**

1967 இல் நடைபெற்ற தேர்தலில் பங்கு பெற்ற திமு கழகம் வெற்றி பெற்று முதன் முறையாக திராவிட ஆட்சியை தமிழகத்தில் அமைத்தது. அவரது தலைமையில் 1967 மார்ச் 6இல் அமைந்த அமைச்சரவை இளைஞர்களை கொண்ட அமைச்சரவையாக விளங்கியது. ஆட்சி பொறுப்பை ஏற்றதும் சுயமரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கி தனது திராவிடப் பற்றை உறுதிப்படுத்தினார். இரு மொழி சட்டங்களை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உருவாக்கி முந்தைய அரசின் மும்மொழித்திட்டத்தினை (தமிழ், இந்தி, ஆங்கிலம்) முடக்கினார், மேலும் மதராஸ் மாநிலம் என்றிருந்த சென்னை மாகாணத்தை 1969 ஜனவரி 14ல் தமிழ்நாடு என்று பெயர் மாற்றி தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார். அண்ணாதுரையை யேல் பல்கலைக்கழகம், சப் பெல்லோசிப் (Chubb Fellowship) என்ற கவுரவ விரிவுரையாளராக 1967–1968 இல் அழைத்தது இந்தியர் ஒருவரை கவுரவ விரிவுரையாளராக அழைத்ததும் இதுவே முதல் முறை.

**அண்ணாவின் இருமொழிக் கொள்கை**

இந்தியா சிந்தாமல் சிதறாமல் எதிர்காலத்தில் வலுவுடனும், பொலிவுடனும் நின்று நிலைத்திருக்க அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கையே தீர்வாகும். இதை மறுத்து இந்தியையும், சமஸ்கிருதத்தையும் இந்தி

பேசாத மக்களின் மீது திணித்தால், சோவியத்திற்கு ஏற்பட்ட கதி இந்தியாவிற்கும் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்பு உண்டு.

இந்தியா ஒரு தேசமல்ல, பல நாடுகளின் ஒன்றியமே (Union of States) என்பது இந்திய அரசியல் சாசனத்தின் முகவுரை பறைசாற்றும் வரலாற்று உண்மையாகும். இதற்கு மாறாக மொழிவழித் தேசிய இனங்களின் மொழிப் பாதுகாப்பிற்கும், அதன் தனித்தன்மைக்கும் எதிராக இன்றைய பாஜக, ஆர்எஸ்எஸ், தங்களது இன மொழிகளான இந்தியையும், வடமொழியையும் தமிழக மக்கள் மீது 'ஒரே நாடு' 'ஒரே மொழி' என்ற கொள்கையின் அடிப்படையில் ஆட்சியிலும், நிர்வாகத்திலும், கல்வியிலும், வேலையிலும் திணித்தால் பிற மொழி வழி மாநிலங்கள் அந்நியமாக்கப்பட்டு, இந்தியன் என்ற பொது உணர்வு அழிக்கப்பட்டு, தனி நாட்டு மொழி உணர்வு ஓங்கி ஒலிக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டு விடும்.

இந்தியா போன்ற பல்வேறு சாதி, மத, இன, மொழி அடிப்படையில் அமைந்த ஒரு நாட்டில் அனைத்தையும் சமமாக நடத்த வேண்டியது ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பாகும். இதில் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வாதம் சொத்தையாகும்.

அண்ணா கூறியதை இங்கு எடுத்துக்காட்டுவது சாலச்சிறந்ததாகும். அதாவது நாடு முழுவதும் காகங்கள் எண்ணற்ற வகையில் வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றன. எண்ணிக்கையில் ஏராளமாகக் 'காகங்கள்' இருந்தாலும், இந்திய நாட்டின் தேசியப் பறவை 'மயில்' தான் என்பது தீர்க்கமான முடிவு.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். மயில் என்ற சொல், 'நற்றமிழ்ச்' சொல். வடமொழிக் கலவாதச் சொல். பேரறிஞர் மறைமலையடிகளார் இச்சொல் ரிக் வேதத்தில் தமிழிலிருந்து எடுத்துள்ளது

என்பதை, வேதங்களில் உள்ள தமிழ் சொற்களில் ஒன்று ‘மயில்’ என்பதை விளக்கியுள்ளார்.

ஆக, தமிழ் தொன்மைக்கும், இலக்கண, இலக்கியச் செறிவிற்கும் சான்றாய் உலக மொழிகளில் முன்னிற்கின்றது. தமிழ் இன்று உலக மொழிகளில் ஒன்று என்பதை எவரும் மறுத்துக் கூற இயலாத நிலையில் தமிழ்ப் பகைவர்கள் உள்ளனர்.

அன்றாட வாழ்வியலில் வழக்கொழிந்த கிரேக்கம், ரோமம், வடமொழி (சமஸ்கிருதம்) போன்றவை போலில்லாமல், தமிழ்மொழியை இன்றளவும் எந்த மொழியின் துணையுமின்றிப் பேசவும் எழுதவும் முடியும். இதைப் பதினெட்டு மொழிகளைக் கற்றுணர்ந்து ஆய்வு முடிவாக ஆங்கில அறிஞர் இராபர்ட் கால்டுவெல் உலகிற்கு அறிவித்துள்ளார். இதை உலக மொழியியல் அறிஞர்கள் நன்று அறிவர்.

இதன் காரணமாகத்தான் மகத்தான மனிதர், கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் இந்திய அரசியல் நிர்ணய சபையில் மொழிப் பிரச்சனை வரும்பொழுது ‘தமிழ் மொழி’யை இந்தியாவின் தேசிய மொழியாக அறிவிக்கும்படி வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்க வரலாற்று உண்மையாகும்.

வடநாட்டுத் தலைவர்களில் இந்தி பேசும் மாநிலத்தவர்கள் இந்தியைத் தேசிய மொழியாக அறிவிக்கக் கூறினர். ஆனால், அலுவலக மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றாலும் இந்தி தேசிய மொழி அன்று என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய மக்கட்தொகை 2001ல் 120 கோடியாகும். இதில் இந்தி மொழி பேசுவோர் 42 கோடியாகும். மேலும், ‘ஆரியவர்த்தா’ என்று அழைக்கப்பட்ட மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார், இமாச்சலப் பிரதேசம் போன்றவற்றில் 6 கோடி மக்கள் பிற மொழிகளைப் பேசி வருகின்றனர்.

## இந்தியா என்றால் இந்தி இல்லை

இந்தியா என்றால் இந்தி என்பது வரலாற்று உண்மைக்குப் புறம்பானது. புதிதாகத் தோன்றியுள்ள மாநிலங்களான உத்தர்கண்ட், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் போன்றவை தனித்தனியே இலக்கியம், இலக்கணம், எழுத்துக்களைக் கொண்ட மொழிகளைப் பெற்றுள்ளன.

மைதிலி என்ற மொழியை 4 கோடி மக்கள் பேசுகின்றனர். சந்தாலி மொழி பேசுபவர்களையும் இந்தியோடு சேர்த்துள்ளனர். ஆனால் 2003ஆம் ஆண்டு 8வது அட்டவணையில் அதற்குத் தனி அலுவல் மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் போஜ்புரி மொழியை உ.பி.யிலும், பீகாரிலும் 15 கோடி மக்கள் பேசி வருகின்றனர். கடந்த காலத்தில் உத்தரப் பிரதேசம் (United Province) இணைக்கப்பட்ட பிரதேசங்கள் என்றும், மத்தியப் பிரதேசம் (Central Province) மையப் பிரதேசங்கள் என்றும் அழைக்கப்பட்டன. ஆக, அப்பெரும் மாநிலங்கள் ஒட்டுமொத்தமாக இந்தி பேசும் மாநிலங்கள் அல்ல என்பது உண்மை.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் நுழைந்த பொழுது இன்றுள்ள இந்தி மொழி இல்லை. பீகாரைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் வடக்கு எல்லைப் பிரதேசங்கள் (North Frontier Province) என்றனர். உண்மையில் அப்பிரதேசத்தில் முக்கியமாக நான்கு பெரும் மொழிகளைப் பேசி வருகின்றனர். அம்மொழிகள் யாவும் சொந்த எழுத்துக்களைக் கொண்டிருந்தன என்பது வரலாறு. அரியானாவின் மக்கட்தொகை 2001ல் 2.1 கோடி. இதில் 70 விழுக்காட்டினர் அரியானாவி மொழியைப் பேசுகின்றனர். இதில் 68 விழுக்காட்டினர் இந்தி மொழி பேசுகின்றனர் என்பதில் 55 விழுக்காட்டினர் அரியானாவி மொழியினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது ஒரு மொழி மோசடிச் செயலாகும்.

1948ல் ராஜஸ்தானை ‘ஒன்றிணைக்கப்பட்ட மாநிலங்கள்’ (United States of Rajasthan) என்பர். இதன் மக்கள் தொகை 2001ல் 5.64 கோடி. இதில் 1.6 கோடி மக்கள்

மார்வாரி மொழியினர். இந்த மொழி 8வது அட்டவணையில் சேர்க்கப்பட உள்ளது. இதற்குத் தனி எழுத்து உண்டு. மேலும், மேவாரி என்ற மொழியை 52 இலட்சமும், பக்ரி என்ற மொழியை 20 இலட்சமும் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.

இன்னும் சில மொழிகள் மேவாத்தி, சேக்காவதி, ஹமேவத்தி, துந்தாரி என்று பல மொழிகள் உள்ளன. இந்த மொழிகள் தனித்தனியே பிரதேசங்களைக் கொண்டுள்ளன. பிராஜ் என்ற மொழியை கிழக்கு ராஜஸ்தான் பகுதியில் காணலாம். அதைப் போலவே கொண்டி, சவாரா, கோயா போன்றவற்றை இந்தி என்று அழைக்க முடியாது. அவை திராவிடத் தெலுங்காகும். இமாச்சலப் பிரதேசம் தனிக்குழு மொழிகளைக் கொண்டுள்ளது. காஷ்மீரி மொழி தனித் தொகுதியைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட எல்லையில் நிலவி வருகிறது. ஒரே இந்தியா, ஒரே மொழி என்ற போர்வையில் இந்தி மாநிலங்கள் என்று பொய்யாக இந்து சனாதனவாதிகள் கூறி வருகின்றனர்.

இந்தி இலக்கியம் 19ஆம் நூற்றாண்டில்தான் பிறப்பிக்கப்பட்டது. அது ஒரு செயற்கை (Test Tube Baby) குழாய் குழந்தையாகும். அது ஒரு கலப்பின உருவாக்கம். ஆக, இந்தியாவின் 'சுய பிறப்பு' மொழி அல்ல என்பது வரலாறு. பிற மொழி இலக்கியங்கள் இந்தி மொழி இலக்கியங்களாகவும் எழுத்துக்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

**தென்னிந்திய மொழிகள்**

தென்னிந்திய மொழிகள் திராவிட மொழிகளாகும். வடமொழியான சமஸ்கிருதத்திற்கும், திராவிடத் தமிழ் மொழிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்தியாவின் பூர்வீக மொழி தமிழும், இதர திராவிட மொழிகளும். இவையாவும் தனி இலக்கிய இலக்கணங்களைக் கொண்டுள்ளன. ஆக, இந்தியா என்பது இந்தி அல்ல என்பது வரலாறு நிறுவும் உண்மையாகும். அப்படியிருக்கையில், இந்தி மொழி இந்தியாவின் தேசிய மொழி என்றும்,

அலுவல் மொழி என்பதும் இந்தியாவைச் சிதறடித்து விடுமோ என்ற ஐயம் தோன்றுகிறது.

பாகிஸ்தான் தனது ‘உருது’ மொழியை அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் புகுத்தியது. இதை கிழக்கு பாகிஸ்தானியர்களான ‘வங்காள மொழியினர்’ எதிர்த்தனர். எனவே, பாகிஸ்தானிலிருந்து தனிநாடாகப் பிரிந்தனர். ‘வங்காள மொழி’ பிரித்துவிட்டது. மேற்கு கிழக்கு பாகிஸ்தான் ஒரே மதமான இஸ்லாமாக இருந்தாலும் மொழிப் பிரிவு அவர்களைப் பிரித்துத் தனி நாடாக மாற்றிவிட்டது. இறுதியாகக் கூறவேண்டிய தீர்வு, அண்ணாவின் இருமொழிக் கொள்கையாகும்.

இன்றைய இந்தியாவின் அலுவல் மொழியாக இந்தி இருப்பதற்குக் காரணம் பீகாரைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி பாபு இராஜேந்திர பிரசாத் ஆவார். அகில இந்திய மொழித் தேர்வுக்கு நடந்த வாக்கெடுப்பில், இந்தியை ஆதரித்து 50 விழுக்காடும், எதிர்த்து 50 விழுக்காடும் வாக்குகள் சரிபாதியாக இருந்த நிலையில், பாபு ராஜேந்திர பிரசாத் தலைவர் என்ற முறையில் அளித்த வாக்கில் தான் ‘இந்தி மொழி’ அலுவல் மொழி என்ற அந்தஸ்தை அடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆக, அனைத்து மொழிகளும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது அரசியல் சட்டத்தின் தேவையாகும். (All are equal and equality of National Languages). அனைத்து மொழிகளும் சமம் என்ற கோட்பாட்டின்படி இந்தி படிப்பவரும், தமிழ் படிப்பவரும், ஏனைய மொழியினரும் ஆங்கிலம் என்ற ஒரு தொடர்பு மொழியைப் படித்தால் போதும். அவ்வாறு அல்லாமல், இந்தி படிப்பவர் ஆங்கிலம் என்ற ஒரு மொழி படித்தால் போதும். ஆனால், தமிழ் போன்ற பிற மொழியினர் இந்தியும், ஆங்கிலமும் இருவேறு மொழிகளைப் படிக்க வேண்டும்.

ஆங்கிலம் என்பது அறிவியல் மொழி. இராஜாஜி கூறியதைப் போல் அது உலகத்தின் சாளரமாகும். அறிவியலும், தொழில்நுட்பத்தையும் அறிந்துகொள்ள

ஆங்கிலம் போதும். எனவே, ஒவ்வொருவருடைய தாய் மொழியும், ஆங்கிலமும் போதும். பிற மாநில, மத்திய அரசுடன் தொடர்பிற்கு ஆங்கிலமே வேண்டும் என்பது அண்ணாவின் அறுதியிட்ட மொழிக்கொள்கை ஆகும்.

ஆக, இந்தியைத் திணிக்க முயலும் ஆரிய சனாதன சமூக சர்வாதீனக் கொள்கை இந்தியாவின் மதநல்லிணக்கத்தையும், பன்முகத்தன்மையையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் சிதைத்து சோவியத் உடைந்ததைப் போல் இந்தியாவிலும் நேரிடலாம்,

**முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி**

முத்துவேல் கருணாநிதி இயற்பெயர் தட்சிணாமூர்த்தி , பிறப்பு: சூன் 3, 1924) திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முன்னாள் தமிழக முதல்வரும் ஆவார். 1969ல் முதன் முறையாக தமிழக முதல்வரானார். மே 13, 2006ல் ஐந்தாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். கருணாநிதி, தமிழ்த் திரையுலகில் கதை, உரையாடல் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். 'தூக்குமேடை' நாடகத்தின் போது எம். ஆர். ராதா, இவருக்கு 'கலைஞர்' என்ற பட்டம் அளித்தார். இன்றும் அப்பெயராலேயே இவரது ஆதரவாளர்களால் அழைக்கப்படுகின்றார். இந்திய அரசியலில் தொடர்ந்து ஒரு பங்கு வகித்த மிக முக்கியமான மூத்த அரசியல் பிரமுகர்களுள் ஒருவர்.

**இளமைப்பருவம்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 சூன் 3-இல் ஏழை இசை வேளாளர் குடும்பத்தில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தட்சிணாமூர்த்தி. கருணாநிதி, தனது பள்ளிப் பருவத்தில் நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். நீதிக்கட்சியின் தூணாக கருதப்பட்ட பேச்சாளர் அழகிரிசாமியின் பேச்சால் ஈர்க்கப்பட்ட கருணாநிதி, தனது

14ஆவது அகவையில், சமூக இயக்கங்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டார் . தனது வளரிளம் பருவத்தில், வட்டார மாணவர்கள் சிலரின் உதவியுடன் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை உருவாக்கினார். இளைஞர்கள் தங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்ள அவ்வமைப்பு உதவியது. சில காலத்துக்குப் பின், அவ்வமைப்பு மாநில அளவிலான "அனைத்து மாணவர்களின் கழகம்" என்ற அமைப்பாக உருபெற்றது.இது திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் பிரிவாக இருந்தது. கருணாநிதி, மற்ற உறுப்பினர்களுடனான சமூகப் பணியில் மாணவர் சமூகத்தையும் ஈடுபடுத்தினார்.

**தி.மு.க. கட்சியின் உத்தியோகபூர்வ செய்தித்தாளான**

முரசோலி வளர்ந்து அதன் உறுப்பினர்களுக்காக ஒரு பத்திரிகை ஒன்றை அவர் ஆரம்பித்தார். கருணாநிதி தமிழ் அரசியலில் களமிறங்குவதற்கு உதவிய முதல் பிரதான எதிர்ப்பு, கல்லக்குடி ஆர்ப்பாட்டத்தில் ( 1953) ஈடுபட்டது. இந்த தொழிற்துறை நகரத்தின் அசல் பெயர் கள்ளகுடி. இது வட இந்தியாவில் இருந்து ஒரு சிமென்ட் ஆலை ஒன்றை உருவாக்கிய சிம்மோகிராம் பிறகு டால்மியாபுரத்தில் மாற்றப்பட்டது. தி.மு.க. அந்த பெயரை கள்ளுகுடிக்கு மாற்ற வேண்டுமென விரும்பினார். கருணாநிதி மற்றும் அவருடைய தோழர்கள் இரயில் நிலையத்திலிருந்து டால்மியாபுரம் என்ற பெயரை அழித்தனர் மற்றும் ரயில்களின் பாதைகளைத் தடுப்பதைத் தடுக்கிறார்கள். ஆர்ப்பாட்டத்தில் இருவர் இறந்தனர், கருணாநிதி கைது செய்யப்பட்டார்.

**அரசியல்**

**மாணவர் மன்றம்**

கருணாநிதி தன்னுடைய 14 வது வயதில் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அழகிரிசாமியின் பேச்சின்பால் ஈர்க்கப்பட்டு, அரசியலில்

ஈடுபடலானார். அதன்பின் இந்தி எதிர்ப்பு போரட்டத்தின் மூலம் தன் அரசியல் தீவிரத்தைக் காட்டினார். அவர் வாழ்ந்த திருவாரூர் பகுதியில் இளைஞர்களை " மாணவ நேசன் " என்ற துண்டு கையெழுத்துப் பதிப்புகள் மூலம் ஒன்று திரட்டினார். அவ்விளைஞர் அணியை பின் மாணவர் அணியாக "தமிழ்நாடு மாணவர் மன்றம்" என்ற பெயரில் உருவாக்கினார். தமிழ்நாட்டில் உருவான முதல் திராவிட இயக்க மாணவர் அணி என்ற நிலையை ஏற்படுத்தினார். கருணாநிதியும் அவரது மாணவர் அணித் தோழர்களும் பல்வேறு குடிசை வாழ் மக்களிடையே சென்று சமூக பணிகளிலும், விழிப்புணர்வு வேலைகளிலும் ஈடுபட்டனர்.

**முரசொலி நாளிதழ்**

இந்த நிலையில் அவர் துண்டுப் பதிப்பாகத் தொடங்கிய முரசொலி செய்தித்தாளாக, கட்சிப் பத்திரிகையாக உருவெடுத்தது. முரசொலி ஆரம்பித்த முதலாமாண்டு விழாவை தன் மாணவர் மன்ற அணித்தோழர்களான அன்பழகன், இரா. நெடுஞ்செழியன் , மதியழகன் ஆகியோருடன் கொண்டாடினார்.

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்**

1957 இல் நடைபெற்ற திமுக இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தமிழ் நாட்டில் நடுவண் அரசால் இந்தி திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்ப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்டோபர் 13 , 1957 அன்றைய நாளை இந்தி எதிர்ப்பு நாளாக பெருந்திரளான மக்களுடன் அமைதியான முறையில் கடைப்பிடிப்பது என முடிவானது. இப்போராட்டத்துக்கு தலைமை தாங்கிய கருணாநிதி நடுவண் அரசின் இந்தி திணிப்பை எதிர்த்து இவ்வாறு முழக்கமிட்டார்: "மொழிப்போராட்டம்.. எங்கள் பண்பாட்டை பாதுகாக்க, இது எமது மக்களின் தன்மானம் மற்றும் எங்களது கட்சியின் அரசியல் கொள்கை.. மேலும் இந்தி என்பது உணவு விடுதியிலிருந்து எடுத்துச் செல்லும் உணவு (எடுப்பு சாப்பாடு),

ஆங்கிலம் என்பது ஒருவர் சொல்ல அதன்படி சமைக்கப்பட்ட உணவு , தமிழ் என்பது குடும்பத் தேவையறிந்து, விருப்பமறிந்து, ஊட்டமளிக்கும் தாயிடமிருந்து பெறப்பட்ட உணவு ” என்று அவர் கூறினார். அக்டோபர் , 1963 , இந்தி எதிர்ப்பு மாநாடு சென்னையில் ( மதராஸ்) கூட்டப்பட்டது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடுவண் அரசின் புரிந்துகொள்ளாமையை உணர்த்தும் விதமாக இந்திய அரசியலமைப்பு தேசிய மொழிகள் சட்ட எரிப்பு போராட்டம் நடத்துவெதென மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. நவம்பர் 16 அன்று அண்ணாதுரையும் , நவம்பர் 19 அன்று கருணாநிதியும் கைது செய்யப்பட்டு 25 நவம்பர் அன்று உயர் நீதிமன்ற ஆணையால் விடுவிக்கப்பட்டனர்.

**தி.மு.க.வி. பதவிகள்**

**பொருளாளர்**

- 1960 ஆம் ஆண்டில் தி.மு.க.வின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1969 ஆம் ஆண்டு வரை அப்பதவியை வகித்தார்.

**தலைவர்**

- 1969 ஆம் ஆண்டில் தி.மு.க.வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது மறைவு வரை 50 ஆண்டுகள் அப்பதவியை வகித்தார்

**சட்டமன்ற உறுப்பினர்**

போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் இவர் வெற்றிபெற்றார். 1957ம் ஆண்டு சுயேச்சையாகவும் மற்ற அனைத்து தேர்தலிலும் திமுக வேட்பாளராகவும் போட்டியிட்டார். 1984ம் ஆண்டு நடந்த தேர்தலில் போட்டியிடவில்லை.

ஆண்டு தொகுதி வாக்கு 2ம் இடம் பிடித்தவர் கட்சி வாக்கு வாக்கு வேறுபாடு

- 1957 குளித்தலை 22785 கே. எ. தர்மலிங்கம் காங்கிரசு 14489 8296
- 1962 தஞ்சாவூர் 32145 பரிசுத்த நாடார் காங்கிரசு 30217 1928

- 1967 சைதாப்பேட்டை 53401 எஸ். ஜி. வினாயகமூர்த்தி காங்கிரசு 32919 20482
- 1971 சைதாப்பேட்டை 63334 என். காமலிங்கம் காங்கிரசு 50823 12511
- 1977 அண்ணா நகர் 43076 ஜி. கிருஷ்ணமூர்த்தி அதிமுக 16438 16438
- 1980 அண்ணா நகர் 51290 எச். வி. ஹண்டே அதிமுக 50591 699
- 1989 துறைமுகம் 41632 கே. எ. வகாப் முஸ்லீம் லீக் 9641 31991
- 1991 துறைமுகம் 30932 கே. சுப்பு காங்கிரசு 30042 890
- 6 சேப்பாக்கம் 46097 S. S. நெல்லை கண்ணன் காங்கிரசு 10313 35784
- 2001 சேப்பாக்கம் 29836 தாமோதரன் காங்கிரசு 25002 4834
- 2006 சேப்பாக்கம் 34188 தாவுத் மியாகான் சுயேச்சை 25662 8526
- 2011 திருவாரூர் 109014 எம்.இராசேந்திரன் அதிமுக 58765 50249
- 2016 திருவாரூர் 121473 பன்னீர்செல்வம் அதிமுக 53107 68366 மாநிலத்திலேயே அதிக வாக்கு வித்தியாசம்

**வெற்றிகள்**

- 1957 ஆம் ஆண்டு திமுக தேர்தலில் போட்டியிட முடிவெடுத்து கருணாநிதி குளித்தலையில் போட்டியிட்டு வென்று, முதல் முறையாக திமுக சட்டமன்றத்தில் அடியெடுத்து வைக்கவும், முதல் முறையாக கருணாநிதி தனது சட்டமன்ற வரலாற்றைத் துவக்கவும் வழிவகுத்தது.
- 1967 இல் நடைபெற்றத் தேர்தலின் மூலம் திமுக முதல் முறையாக தமிழக ஆட்சியில் பங்குபெற்றது. நாவலர் இரா. நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராகவும், கருணாநிதி பொருளாளராகவும் கட்சியில் உயர்வு பெற்றனர்.
- தி.மு.க.வின் தொடக்க கால உறுப்பினர் கருணாநிதி. அவர், 1957ம் ஆண்டிலிருந்து

- தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், கடந்த 40 ஆண்டுகளாக தி.மு.க.வின் தலைவராகவும் பதவி வகித்து வருகின்றார். தமிழகத்தின் முதல்வராக ஐந்துமுறை கருணாநிதி பதவி வகித்துள்ளார்.
- 1969–1971 — கா. ந. அண்ணாதுரை மறைவுக்குப் பின் முதல் முறை ஆட்சி
- 1971-1976—இரண்டாவது முறையாக
- 1989–1991 — எம். ஜி. இராமச்சந்திரன் , மறைவுக்குப் பின் மூன்றாம் முறை ஆட்சி
- 1996-2001—நான்காம் முறை ஆட்சி
- 2006-2011—ஐந்தாம் முறை ஆட்சி

**சட்டமேலவை உறுப்பினர்**

இலங்கைத்தமிழருக்காக கருணாநிதியும் அன்பழகனும் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினர். அடுத்துவந்த சட்டமேலவைத்தேர்தலில் கருணாநிதி சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**எதிர்க்கட்சித்துணைத் தலைவர்**

1962ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் அமைந்த மூன்றாவது சட்டப்பேரவையில் இரா. நெடுஞ்செழியன் எதிர்க்கட்சித்தலைவராக இருந்தார். மு. கருணாநிதி எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தார்.

**அமைச்சர்**

1967ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியைப்பிடித்த பின்னர் கா. ந. அண்ணாதுரை தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவிவகித்தார்.

**முதலமைச்சர்**

- 1969–1971 –கா. ந. அண்ணாதுரை மறைவுக்குப் பின் முதல் முறை ஆட்சி
- 1971-1976—இரண்டாவது முறையாக

- 1989–1991 –எம். ஜி. இராமச்சந்திரன், மறைவுக்குப் பின் மூன்றாம் முறை ஆட்சி
- 1996-2001—நான்காம் முறை ஆட்சி
- 2006-2011—ஐந்தாம் முறை ஆட்சி

என ஐந்துமுறை முதலமைச்சராக இருந்தார்.

**அரசு நிர்வாகம்**

மாநிலத்தின் வளர்ச்சிக்காக, கிராமப்புறங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இலவச காப்பீடு திட்டங்கள், தொழில்மயமாக்குதலுக்கான நடவடிக்கைகள் போன்ற பலவற்றையும் மேற்கொண்டார். ஐ.டி துறையை மாநிலத்தில் வளர்க்கும் விதமாக, அவருடைய பதவிக் காலத்தில், டைடல் மென்பொருள் பூங்காவை உருவாக்கினார். ஒரகடத்தில், புதிய உழுவை உற்பத்தி செய்யும் செல்லைத் தொடங்கினார். மஹிந்திரா மற்றும் நிசான் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்த அமைப்பின் கீழ் செயல்படுகிறது.

காலம் தனக்கான தேவைகளை தானே எதிர்கொள்கிறது. சூழல்களுக்கு ஏற்ப தன்னை தகவமைத்து கொண்டு மாற்றங்களை நோக்கி தினமும் பயணிக்கிறது. அப்படிப்பட்ட பயணத்தில் புரட்சிகளும் புதுமைகளும் பூக்கின்றன. மானுடம் செழிக்கிறது. ஆண்டாண்டு காலம் அடிமைப்பட்டு மூட நம்பிக்கை என்னும் இருளில் உழன்று ஒடுக்கப்பட்ட சமூகத்தில் அவர்களின் குரலாய் ஒலிக்க ஒரு தலைவனை காலம் பிரசவித்தது அந்த மாபெரும் அரசியல் ஆளுமையின் பெயர் தான் கலைஞர் !

இந்திய துணைக்கண்ட அரசியல் வரலாற்றில் மூன்று அரசியல் தத்துவங்களை தவிர்த்து விட்டு வரலாற்றை வாசிக்க முடியாது. அந்த மூன்றும் நுட்பமான இந்த மண்ணுக்கான மானுட அரசியலை பேசும் இயக்கங்கள். ஒரு

நூற்றாண்டு கடந்த பின்னும் அந்த இயக்கங்கள் இந்தியாவின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் சக்திகளாகவே இருக்கின்றன.

இந்தியாவின் வட புலத்தில் தோன்றி சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்த காங்கிரஸ் பேரியக்கம், உலக முதலாளித்துவ சிந்தனைகளுக்கு எதிராக முகிழ்த்த கம்யூனிஸ்ட் இயக்கம், இந்தியாவின் தென் புலத்தில் சமத்துவம் சமூக நீதி பகுத்தறிவு முழக்கங்களை முன்னிறுத்தி திராவிடர் இன அரசியல் வடிவமாய் தோன்றிய திராவிட இயக்கம் என்கிற மூன்று இயக்கங்களும் காலத்தின் தேவைக்கேற்ப உருவானவையே. இந்த மூன்று தத்துவங்களும் ஒன்றிற்கொன்று மாறுபட்டிருந்தாலும் ஜாதி, மதத்தை முன்னிறுத்தும் சனாதனங்களுக்கு எதிராகவும் மண் விடுதலை மக்களின் விடுதலை முன்னிறுத்தியும் செயலாற்றியும் வருகின்றன.

நூற்றாண்டு வரலாறு கொண்ட திராவிட இயக்கம் நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிடர் முன்னேற்ற கழகம் என பல பரிணாமங்களை காலத்தின் தேவைக்கேற்ப எடுத்திருந்தாலும், அதன் அடிப்படை கொள்கைகளை ஆட்சி அதிகாரம் கொண்டு நிறைவேற்றிய பெருமை அய்ம்பது ஆண்டுகாலம் அந்த அரசியல் இயக்கத்திற்கு தலைமை தாங்கிய டாக்டர்.கலைஞர் அவர்களையே சாரும். சமூக மாற்றத்திற்கான எண்ணற்ற திட்டங்கள் நீண்ட தொலைநோக்கோடு தந்த வரலாற்று நாயகர் அவர். திராவிட இயக்கத்தின் மூலவர் தந்தை பெரியார் “கல்வி அறிவும், சுயமரியாதையும், பகுத்தறிவுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்” என்றார். அந்த உன்னத குறிக்கோளை நோக்கியே தமது ஆட்சியை வடிவமைத்திருந்தார் கலைஞர்.

காங்கிரஸ் பேரியக்கம் தமிழ்நாட்டை ஆட்சி செய்தபோது இராஜாஜி பல்வேறு காரணங்களை காட்டி 6000 பள்ளிகளை இழுத்து மூடினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமைக்கு வேட்டு வைக்கும் விதமாக

குலக்கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். சமூகநீதிக்கு எதிரான இந்த போக்கை திராவிடர் இயக்கம் வெகு மக்களின் போராட்டமாய் மாற்றியது. போராட்டக்களத்தை தந்தை பெரியார் முன்னின்று நடத்தினார்.

தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்க ஜாதியினர் கைகளில் இருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் கைகளுக்கு மாறியது. பெரியாரின் திராவிட இயக்க கொள்கைகளின் தாக்கம் காங்கிரஸ் இயக்கத்திலும் எதிரொலிக்க ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வாராது வந்த மாமணியாய் திராவிட இயக்க சிந்தனைகளுக்கு செயல்வடிவம் தருகின்ற கர்மவீரராக காமராஜர் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைமை பொறுப்புக்கு வந்தார். மூடப்பட்ட பள்ளிகளை எல்லாம் திறந்தார். ஆயிரக்கணக்கான பள்ளிகளை கட்டி இலவச கட்டாயக் கல்வியை வலுப்படுத்தினார். அதைக்காட்டிலும் மேட்டிலும் காடு கழனியில் சுற்றி திரிந்தவனை கல்வி சாலைக்குள் கொண்டு வந்த பெருமகன் காமராஜர். அப்படி கல்வி பயில வந்தவனை கைப்பிடித்து உயர் கல்விவரை அழைத்து வந்து கற்றறிவாளனாக மாற்றிய பெருமை டாக்டர் கலைஞரையே சாரும்.

கல்வி ஒன்று தான் உலகத்தையே மாற்றி அமைக்கும் கருவி என்றார் நெல்சன் மண்டேல்லா. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுயர்வு கல்வி மூலமே சாத்தியம் என்றுணர்ந்து அடுக்கடுக்கான திட்டங்களை தீட்டி மாபெரும் கல்வி புரட்சியை காமராஜரின் நீட்சியாய் தொடர்ந்தார் டாக்டர் கலைஞர். நாடு விடுதலை பெற்ற பின் கல்வி அனைத்துத் தரப்பினருக்கும் கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதை வழங்குவதில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. கிராமப்புற மாணவர்களுக்கும், சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கும் சிறப்பான முறையில் கல்வி வசதிகள் சென்றடையவில்லை. இவற்றையெல்லாம் உணர்ந்து கலைஞர் அவர்கள் சமச்சீர் கல்வி திட்டத்தை அறிவித்து பெரும் மாற்றத்தை உருவாக்கினார். கிராமப்புறங்களில் ஓராசிரியர்,

ஈராசிரியர் பள்ளி என்ற நிலைமை மாறி 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் மாற்றினார்.

பத்தாம் வகுப்புத் தேர்விலும் 12ஆம் வகுப்புத் தேர்விலும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களது உயர் கல்விச் செலவு, பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களில் இருந்து ஒவ்வொரு வகைத் தொழில் கல்விப் பிரிவுகளிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவை அவரது அரசு ஏற்றது. அதுப்போல தனியார் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் அவருடைய அரசு தான் இயற்றியது. 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழி பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு ஆண்டுக்கு ஏறத்தாழ 10 லட்சம் மாணவ மாணவியர் பயன் பெற்று வருகின்றனர் .

சத்துணவுடன் வாரம் 2 முட்டைகள், மதிய உணவு திட்டத்தின் கீழ் முட்டை உண்ணாத மாணவர்களுக்கு வாழைப் பழங்கள், இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டமும், பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பயண திட்டமும், 10, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்று, வருவாய்ச் சான்று ஆகியன பள்ளியிலேயே வழங்கும் திட்டமும் அவர் அரசின் சாதனைகளில் ஒன்று.

முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்வி, வேலை வாய்ப்பில் முன்னுரிமை, கிராமப்புற மாணவர்களுக்கு உயர் கல்விகளில் தனி இட ஒதுக்கீடு, தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்கு பொறியியல், மருத்துவப் படிப்புகளில் இட ஒதுக்கீடு, கல்வித் துறையில் இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வுகளை ( Compound system) நடைமுறைப்படுத்தல், நுழைவுத் தேர்வு ரத்துக்கு

நிபுணர் குழு அமைப்பு, மருத்துவம் பொறியியல் கல்விக் கட்டணம் குறைப்பு, புதிய புதிய பல்கலைக்கழகங்கள் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள் உருவாக்கம், காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்று சட்டம் இயற்றல், மாணவர்களின் கல்விக் கட்டணங்கள் அனைத்தும் ரத்து, பள்ளி மாணவர்களுக்கும்-கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பேருந்து பாஸ், ஏழை மகளிருக்கு முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி, சத்துணவு ஊழியர்களுக்கும் காலமுறை ஊதியம், பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடம் எனச் சட்டம் என இப்படி எண்ணற்ற திட்டங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மனதில் கொண்டு கொண்டுவரப்பட்டன.

ஆழிப்பேரலையால் கடல் கொண்ட பூம்புகார் நகரை நிர்மாணித்தார், தமிழர் கட்டிட கலை கொண்டு தலைநகர் சென்னையில் வான் புகழ் வள்ளுவனுக்கு கோட்டம், குமரி எல்லையில் விண்ணை தொடும் அளவில் வள்ளுவனுக்கு சிலை, உலகின் மிக நீண்ட கடற்கரைகளில் ஒன்றான மெரினாவில் கண்ணகி, அவ்வையார், இளங்கோவடிகள் என தமிழுக்கு தொண்டு செய்த பதினேழு பேர்களின் சிலைகளை நிறுவி எதிகால தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் விதமாக அமைத்த பெருமை கலைஞரையே சாரும். கலை, இலக்கியம், மொழி, ஊடகம் என பலவற்றிலும் அவர் ஆற்றிய தொண்டு காலம் கடந்து நிற்கும் வரலாற்று செய்திகள்.

டாக்டர் கலைஞரின் பல திட்டங்கள் இந்தியாவிற்கே முன்னோடியாக அமைந்தன. இந்தியாவில் அதிகஅளவில் மருத்துவகல்லுரிகள் உள்ள மாநிலம் தமிழ்நாடு தான். மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்பதை தமது அரசின் குறிக்கோளில் ஒன்றாக கொண்டிருந்தார் கலைஞர். நூல்கள் தான் அறிவின் திறவுகோள் என்பதால் பேரறிஞர் அண்ணா

பெயரில் உலகத்தரம் வாய்ந்த நூலகத்தை உருவாக்கினார். கிராமந்தோறும் ஊர் புற நூலகம் அய்யன் திருவள்ளுவர் பெயரில் ஊர் தோறும் படிப்பகம், நூல்களை பதிப்பிக்கவும் சந்தைப்படுத்தவும் வெகு மக்களிடம் கொண்டு செல்ல விரிவான திட்டங்கள் என அவரின் தொலைநோக்கு பார்வை எதிர்கால சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கான அடித்தள கட்டமைப்பாக இருந்தது

கல்வி துறையில் அவர் ஆற்றிய சாதனைகள் இனவரலாற்றின் புரட்சிகர பக்கங்களில் ஒன்று. மத்திய அரசின் பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்ட கல்வியை மாநில அரசின் பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும், நுழைவுத்தேர்வு முறைகள் நீக்கப்பட வேண்டும், கிராமப்புற, அரசு பள்ளி மாணவர்களின் கல்வி மேம்படவும் அவர்களின் கல்வி உரிமை பாதுக்காக்கப்பட வேண்டும் போன்ற சவாலான பணிகள் நம் முன் உள்ளது. இது ஒரு ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைக்கான போராட்டம். குறுகிய கால இலக்கை நோக்கிய பயணம் அல்ல. இது மிக நீண்ட நெடிய போராட்டங்கள் மிகுந்த பயணம். அந்த பயணத்தை காலம் தந்த தலைவனாய் கலைஞர் தோன்றி சரித்திர சாதனைகளை படைத்து, தனது பணியை நிறைவாக செய்திருக்கிறார். அடுத்த கட்ட நகர்விற்கான இலக்கை அடையாளம் காட்டி சென்றிருக்கிறார். அந்த மாபெரும் தலைவனுக்கு நன்றிகளையும் வீரவணக்கத்தை செலுத்தி அடுத்த கட்ட பயணத்தை தொடர்வோம். அதுவே அவருக்கு நாம் செய்யும் புகழாஞ்சலி.''

**தனிப்பட்ட வாழ்க்கை**

கருணாநிதி புலால் உணவுகளை உண்பவராக இருந்து பின் ( தற்பொழுது) தாவர உணவு முறையை பின்பற்றி வருகிறார். இவர் அரசியல் பணிகளையும், எழுத்துபணிகளையும் ஓய்வின்றி செய்ய முடிவதற்கு நாளும் யோகப் பயிற்சி,

நடைப்பயிற்சி ஆகியவற்றைத் தவறாமல் கடைப்பிடித்து வந்தமையே காரணமாகக் கூறப்படுகிறது.

இவரின் தன் வரலாற்று நூல் நெஞ்சுக்கு நீதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாளிதழான முரசொலி மற்றும். குங்குமத்தில் தொடர் கட்டுரைகளாக வெளிவந்தமையாகும். இந்நூல் நான்கு பாகங்களாக வெளிவந்துள்ளது.

**விருதுகளும், பெற்ற சிறப்புகளும்**

உலகக் கலைப் படைப்பாளி என்ற விருது அகில இந்திய திரைப்பட தொழிலாளர்கள் ( அ) பெப்சி மாநாட்டில் இந்திய மாநிலமான தமிழகத்தின் முதல்வராக, 2009ஆம் ஆண்டில் இருந்த கருணாநிதிக்கு வழங்கப்பட்டது.

கடந்த 9. அக்டோபர் 2009 அன்று அகில இந்திய திரைப்பட தொழிலாளர்களின் மூன்று நாள் மாநாடு தொடங்கியது. மாநாட்டின் முதல் நாளான அன்று, அகில இந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில், அதன் தலைவர் வி. சி. குகநாதன் தலைமையில், சம்மேளனத்தின் நிர்வாகிகள் கருணாநிதிக்கு உலகக் கலைப் படைப்பாளி என்ற விருதை வழங்கினர். கருணாநிதி அவர்கள், 1970ல், பாரிஸில் நடந்த உலக தமிழ் மாநாட்டின் ஒரு கௌரவ உயர் பதவியாளராக இருந்தார். 1987ல், அவர் மலேஷியாவில் நடந்த உலக தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். 2010 க்கான ‘உலக தமிழ் செம்மொழி மாநாட்டின்’ அதிகாரபூர்வமான கருப்பொருள் பாடலை உருவாக்கும் பொறுப்பை ஏற்றார். இதன் பின்னணி இசையை ஏ. ஆர். ரகுமான் அமைத்தார். தமிழ் இலக்கியத்தில், தனது இலக்கிய பங்களிப்பைத் தவிர, கருணாநிதி அவர்கள், தனது மக்கள் நலனிற்காக தனது ஆதரவை நீட்டித்தார். மாநிலத்தின் வளர்ச்சிக்காக, கிராமப்புறங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இலவச காப்பீடு திட்டங்கள், தொழில்மயமாக்குதலுக்கான நடவடிக்கைகள் பலவற்றையும் மேற்கொண்டார். சமூகநலன்களை நோக்கி இன்றும் அவருடைய வேலை தொடர்கிறது. ஐ.டி

துறையை மாநிலத்தில் வரவேற்கும் விதமாக, அவருடைய பதவி காலத்தில், டைடல் மென்பொருள் பூங்காவை உருவாக்கினார். ஒரகடத்தில், புதிய டிராக்டர் உற்பத்தி செய்யும் செல்லைத் தொடங்கினார். மஹிந்திரா மற்றும் நிசான் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்த அமைப்பின் கீழ் செயல்படுகிறது.

**கலைஞர் கருணாநிதி பற்றி சுவையான சிறு குறிப்புகள்**

- தமிழ்நாட்டின் நிரந்தரத் தலைப்புச் செய்தி... கலைஞர் கருணாநிதி! ஆட்சிக் கட்டிலில் இருந்தாலும் எதிரணியில் தொடர்ந்தாலும் புகழ்க் கடலில் மூழ்கி,விமர்சன முத்தெடுத்து வெளியே வருபவர். பொது வாழ்வில் தலைமுறைகள் தாண்டியும் வலம் தமிழ்த் தேனி.
- டி.எம்.கருணாநிதி என்றுதான் ஆரம்ப காலத்தில் தன்னை அழைத்துக்கொண்டார் ( திருவாரூர் முத்துவேலர்), பிறகு, மு.கருணாநிதி என்று கையெழுத்துப் போட்டார்.
- ஆண்டவரே' என்றுதான் எம்.ஜி.ஆர். இவரை அழைப்பார். பிற்காலத்தில் `மூக்கா' என்றும் அழைத்திருக்கிறார். `மூனாகானா' என்று அழைப்பது சிவாஜியின் ஸ்டைல். இன்று கருணாநிதியின் மனைவி, மகன்கள், பேரன் பேத்திகள் உட்பட அனைவருமே `தலைவர்'என்றுதான் சொல்கிறார்கள்!.
- தினமும் டைரி எழுதும் பழக்கம்கொண்டவர் அல்ல கருணாநிதி. ஆனாலும், அவருக்கு எல்லாம் நினைவில் அப்படியே இருக்கும். `என்னுடைய மூளையே எனக்கு ஒரு டைரி' என்பார்!.
- தினமும் இரவுத் தூக்கம் சி.ஐ.டி.காலனி வீட்டில்தான். அதிகாலை எழுந்ததும் கோபாலபுரம் போவார். காலை உணவு அங்கு. முரசொலிக்கோ, தலைமைச் செயலகமோ போய்விட்டு மதிய உணவுக்கு சி.ஐ.டி. நகர். சிறு தூக்கத்துக்குப் பிறகு, மீண்டும் கோபாலபுரம். அங்கிருந்து அறிவாலயம்

செல்வார். இரவுச் சாப்பாட்டுக்கு டி.ஐ.டி நகர் போய்விடுவார். கருணாநிதியின் ஒருநாள் இதுதான்!.

- அதிகாலையில் எழுந்ததும் அண்ணா அறிவாலயம் சென்று நடைப் பயிற்சி செய்யும் வழக்கத்தை வைத்திருந்தார் கருணாநிதி. முதுகு வலி ஆபரேஷனுக்குப் பிறகு வாக்கிங் நின்றுவிட்டது! கருணாநிதிக்கு யோகா கற்றுக்கொடுத்தவர் டி.கே.வி.தேசிகாச்சார்.`நாராயண நமஹ' என்பதற்குப் பதிலாக, `ஞாயிறு போற்றுதும்' என்று இவர் சொல்வார். `இரண்டும் ஒன்றுதான்' என்று தேசிகாச்சாரும் சொல்லி ஒப்புதல் வழங்கி இருக்கிறார்!.
- கலைஞர் கருணாநிதிக்குப் பிடித்தலை சங்கு மார்க் வேட்டிகள்.`இதுதான்யா திருப்தியா இருக்கு' என்பார்!.
- ஆரம்ப காலத்தில் அசைவ உணவுகளை விரும்பிச் சாப்பிட்டவர். செரிமானத்தில் பிரச்னை இருந்தால், சைவமே பெரும்பாலும் சாப்பிடுகிறார்.நித்தமும் ஏதாவது ஒருவகைக் கீரை இருக்க வேண்டும். மற்றபடி இட்லி,சோறு,சாம்பார் வகையறாக்கள் விருப்பமானவை!.
- தி.மு.க. தேர்தல் செலவுக்கு எதிர்பாராத வகையில் 11 லட்சம் ரூபாய் வசூலித்துத் தந்ததைப் பாராட்டி, அண்ணா அணிவித்த மோதிரத்தைக் கழற்றியதே இல்லை.தங்க சங்கிலிகளை எப்போதுமே அணிந்ததில்லை!.
- சின்ன வயதில் ஆர்வமாக விளையாடியது ஹாக்கி. திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் ஹாக்கி டீமில் இருந்திருக்கிறார். இப்போது கிரிக்கெட் பார்ப்பதில்தான் அதிக ஆர்வம்!.
- ஏதாவது ஒன்றைப் படித்தால், அதை அப்படியே ட்விஸ்ட் செய்வதில் தனித்திறமை உண்டு. `வீரன் ஒருமுறைதான் சாவான்... கோழை பலமுறை சாவான்' என்பது புகழ்பெற்ற பொன்மொழி. அதை கருணாநிதி,

`வீரன் சாவதே இல்லை....கோழை வாழ்வதே இல்லை' என்று மாற்றிப் பிரபலப்படுத்தினார்!.

- ஆரம்ப காலத்தில் மறவன் மடல் என்று எழுதி வந்த கருணாநிதி, அண்ணா மறைவுக்குப் பிறகுதான் `உடன்பிறப்பே' என்று தலைப்பிட்டு கடிதங்கள் எழுத ஆரம்பித்தார். `கடிதங்கள் எழுதுவதால்தான் என் மனவருத்தங்கள் குறைகின்றன' என்பர்!.
- பதில் அளிக்க இயலாத கேள்விகளுக்கு எதிர்க்கேள்வி போடுவது அவரது பாணி. `ஆண்டவனை ஏற்றுக்கொள்கிறீர்களா?' என்று ஒரு முறை கேட்கப்பட்டது. `அது பிரச்னை அல்ல. ஆண்டவன் நம்மை ஏற்கிறானா என்றுதான் பார்க்க வேண்டும்' என்று திருப்பி அடித்தார்!.
- கலைஞர் 40-க்கும் மேலான படங்களுக்கு கதை-வசனம் எழுதியிருக்கிறார். இதில் அவருக்கு அதிகம் பிடித்த வசனம்,`மனச்சாட்சி உறங்கும் சமயத்தில்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது!.
- *ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்' என்றுதான் என் கல்லறையில் எழுத வேண்டும் என்று கருணாநிதி தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்!.
- பூஜை அறை மாதிரியான மாடத்தில் கலைஞர் கருணாநிதியின் அப்பா முத்துவேலர், அம்மா அஞ்சுகம், முதல் மனைவி பத்மாவதி ஆகியோரின் படங்கள் இருக்கின்றன.முக்கியமான நாட்களில், அங்கு வணங்கி விட்டுத்தான் வெளியில் புறப்படுவார்!.
- சிறுகதை, நாவல், நாடகங்கள், கவிதைகள், திரைக்கதை, வசனங்கள், பாடல்கள் கார்ட்டூன் என எதையும் விட்டுவைத்ததில்லை கருணாநிதி. ஆளும் திறமை இட்து மூளை காவியமும் கற்பனையும் வலது மூளை. பரவலாக மனிதனுக்கு இரண்டில் ஒன்றுதான் மேன்மையாக இருக்கும்.

இரண்டும் மேன்மையாகச் செயல்படுவது கலைஞருக்குத்தான்' என்றார் நரம்பியல் நிபுணர் ராமமூர்த்தி!.

- 'தென்றலைத் தீண்டியதில்லை, ஆனால், தீயைத் தாண்டியிருக்கிறேன்' கோயில் கூடாது என்பதற்காக அல்ல, அது கொடியவர் கூடாரமாக ஆகிவிடக்கூடாது `வீழ்வது நாமாக் இருப்பினும்,வாழ்வது தமிழாக இருக்கட்டும்'- கருணாநிதி எழுதிய இம் மூன்றும் தமிழகத்தில் அதிக முறை சொல்லப்பட்ட வாக்கியங்கள்!.
- 12 முறை எம்.எல்.ஏ. 5 முறை முதலமைச்சர், 10முறை தி.மு.க. தலைவர் என்பது மாதிரியான சாதனை இதுவரை யாரும் செய்ததில்லை. இனியும் முடியுமா என்பது சந்தேகம்!.
- புழல் ஏரி உடைவது மாதிரி இருக்கிறது என்ற தகவல் கிடைத்தும்,அதைச் சரிப்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கொடுத்துவிட்டு, நள்ளிரவு 2.30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் கவலையுடன் உட்கார்ந்திருந்த சம்பவம் அவரது அதிகப்படியான் அக்கறையை உலகத்துக்குச் சொன்னது!.
- படுக்கையில் உட்கார்ந்து பரீட்சை அட்டை வைத்து எழுதுவதுதான் அவரது வழக்கம்.உயரத்துக்காக இரண்டு தலையணைகளை அடுக்கிவைத்துக் கொள்வார். இன்றுவரை மை பேனாவைத்தான் பயன்படுத்துவார்!.
- கோபாலபுரம், சி.ஐ.டி. நகர், தலைமைச் செயலகம், அறிவாலயம்,முரசொலி ஆகிய ஐந்து இடங்களிலும் அன்றைய செய்தித்தாள்கள் மொத்தமும் கலைஞர் கருணாநிதிக்காகத் தனியாகக் காத்திருக்கும்!.
- கடற்கரை மணலில் உட்கார்ந்து காற்று வாங்கிய படி பேசுவதுதான் கலைஞர் கருணாநிதிக்குப் பிடிக்கும். அது முடியாததால், மாமல்லபுரம் ஜி.ஆர்.டி. ஹோட்டலில் கடலைப் பார்த்த அறையில் அடிக்கடி தங்குகிறார்!.

- கலைஞர் கருணாநிதிக்குப் பிடித்த தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம், பிடித்த புராணம் மகாபாரதம். எப்போதும் மேசையில் வைத்திருப்பது திருக்குறள்!.
- தனிமை பிடிக்காது. எப்போதும் நண்பர்கள் புடைசூழ இருக்க வேண்டும் என்பது கலைஞர் கருணாநிதியின் ஆசை!.

**மறைவு**

2016 ஆம் ஆண்டு முதல் சுவாசக் கோளாறு காரணமாக அவதிப்பட்டு வந்த கருணாநிதிக்கு ட்ரக்கியாஸ்டமி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனால் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை, அதனை மாற்றுவதற்காக மருத்துவமனைக்குச் சென்று உடலை பரிசோதித்து வந்தார். அதன் பிறகு கருணாநிதி உடல்நலத்தில் வயது காரணமாக நலிவு ஏற்பட்டுள்ளது என்றும் சிறுநீரக பாதையில் ஏற்பட்டுள்ள தொற்றின் காரணமாக காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக தனியார் மருத்துவமனை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன்பிறகு, 24 மணி நேரமும் மருத்துவர்கள் அடங்கிய குழு கருணாநிதியை வீட்டிலேயே கண்காணித்து வந்தனர். பின்பு கருணாநிதியின் உடலில் நலிவு அதிகமானதை அடுத்து, சூலை 27, 2018 அன்று நள்ளிரவில் இவர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்பு சூலை 29, 2018 அன்று கருணாநிதியின் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டதாக மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு கருணாநிதியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுவருவதாக கூறப்பட்டது. அதன் பின்பு ஆகத்து 06, 2018 அன்று இவரின் உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து அதற்கு மறுநாள் ஆகத்து 07, 2018 அன்று சிகிச்சை பலனின்றி சென்னையில் காலமானார்.

**குடிசைகளைக் கோபுரமாக்கிய கலைஞர்**

முதல் முதலாக இந்தியாவில் பாகிஸ்தான் இந்தியா பிரிவினைக்கு பிறகு டில்லி நகரில் தற்காலிக டெண்ட் குடியிருப்புகள் உருவாகியது. அதாவது லாகூர்

வழியாக ரயிலில் வந்தவர்கள், ரயில் நிலையங்களுக்கு அருகிலேயே கிடைத்த பொருட்களைக் கொண்டு குடியிருப்புகளை உருவாக்கிக்கொண்டனர்.

கவனிக்க இது ஏழைகள் வசிக்கும் குடிசை வீடுகள் அல்ல, 1948, 1949ஆம் ஆண்டுகளில் இந்த நடைமுறை நாட்டின் முக்கிய நகரங்களின் ரயில் நிலையங்களுக்கு அருகிலேயே உருவாகியது.

மும்பை, கொல்கத்தா உள்ளிட்ட நகரங்களில் வேலை தேடிச் சென்ற மக்கள் தற்காலிக டெண்ட் போட்டு வசிக்கத் துவங்கினர். பின்னர் அவர்களே தகரம் மற்றும் மரக்கட்டைகளைக் கொண்டு குடியிருப்புகளை உருவாக்கி வசித்தனர்.

இதில் டில்லி, கொல்கத்தா, மும்பையில் உருவான குடிசைப் பகுதிகளில் தாராவி மிகப் பெரியதாக உருவாகியது ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிசைப் பகுதி என்று பெயரெடுத்து - இன்றும் அப்படியேதான் உள்ளது.

கொல்கத்தாவின் ஹவுரா குடிசைப் பகுதி இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. பழைய டில்லி ( புரானா டில்லி)யிலும் மிகப் பெரிய குடிசைப் பகுதி உள்ளது.

1987இல் கமல் நடித்த நாயகன் படத்தில் தமிழர்கள் முதலாக மும்பை தாராவி என்னும் குடிசைப் பகுதியைக் கண்டனர். சிறிய அறையில் ஒட்டுமொத்த குடும்பமே வசிக்கும். இந்த குடியிருப்பைக் கண்ட ரயில்வே துறை ரயிலில் படுக்கை வசதிகளை உருவாக்கியது.

இதே பகுதியை 1995இல் வெளிவந்த ரஜினி நடித்த பாட்ஷா படத்திலும் காட்டுவார்கள். அதே தாராவி அப்படியே இருந்தது. 1999இல் வெளிவந்த விஜய் நடித்த நெஞ்சினிலே படத்திலும் காட்டினார்கள். அதே தாராவி அப்படியே இருந்தது. 2018இல் வெளிவந்த ரஜினி நடித்த காலா படத்திலும் பார்த்தோம். அதே தாராவி அப்படியே இருந்தது.

ஆனால், தமிழ் சினிமாவில் சென்னை குடிசைப் பகுதிகளை கடைசியாக 1970க்கு முன் வந்த படங்களில் பார்த்ததுதான். அதன் பிறகு வந்த படங்களில் குடிசைப் பகுதியைக் காட்டவேண்டும் என்றால் அய்தராபாத் செல்வார்கள். அல்லது தமிழ்நாட்டிலேயே செட் போட்டு படம் எடுப்பார்கள்.

எங்கே போனது தமிழ்நாட்டில் மட்டும் இந்த குடிசைகள் என்று கேட்போருக்கு, 1970ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களின் சீரான சமூகநீதிச் சிந்தனையின் காரணமாக தொடங்கப்பட்ட ஒரு பொதுத்துறை நிறுவனம்தான் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.

சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கொண்ட குடியிருப்புகளைக் கட்டிக்கொடுப்பதுதான் இந்த வாரியத்தின் முதன்மையான நோக்கம். சென்னையில் மட்டும் செயல்பட்டுவந்த இந்தத் திட்டம் தமிழகத்தின் மற்ற பகுதிகளிலுள்ள பெருநகரங்கள் தொடங்கி பேரூராட்சி வரை என்று அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

வெறும் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றிக் கொடுப்பது மட்டும் இந்த வாரியத்தின் நோக்கம் கிடையாது. அங்கு வசிக்கும் மக்களுக்குப் பாதுகாப்பு, நல்ல வாழ்வியல் சூழல், நல்ல குடிநீர், மின்சாரம் தொடங்கி அனைத்து வகையான வசதிகளும் கிடைக்கச் செய்வதும்தான். இந்த வாரியத்தின் மூலம் இதுவரை நான்கு லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மற்ற மாநிலத்தலைவர்களுக்கு வாராத இந்த சிந்தனை ஏன் கலைஞருக்கு வந்தது என்றால் அவர் பெரியாரின் பாட சாலையில் பயின்ற சமூக நீதிக் கல்வியின் பயனால் தமிழ்நாடு மக்களுக்கு கிடைத்த நற்திட்டம். அதனால் இன்று தமிழ்நாட்டில் பெருநகரங்களில் குடிசைப்பகுதிகளே இல்லாத நிலை ஏற்பட்டது.

**பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டம்**

பிச்சை எடுக்கும் தொழிலை ஒழிக்க போலீசாரும், சமூக நலத்துறையினரும் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தெரிவித்த கருத்துகள்

திண்டுக்கல்

1972-ம் ஆண்டு தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்காக மறுவாழ்வு திட்டத்தை மறைந்த முதல்-அமைச்சர் கருணாநிதி கொண் வந்தார். இதன் மூலம் பிச்சைக்காரர்கள் மீட்கப்பட்டு அவர்கள் தகுதிக்கு ஏற்ப சுயதொழில் வேலைவாய்ப்புகளை அரசு உருவாக்கிக் கொடுத்தது.

ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் என்று மக்கள் கூடுகிற இடங்களில் பிச்சை எடுப்பவர்களை, வாகனங்களில் வந்து பிடித்துப் போவார்கள். அரசு வாகனங்கள் வருவதைக் கண்டாலே போதும் தங்களைப் பிடிக்க வருகிறார்கள் என்று பிச்சைக்காரர்கள் ஓடி ஒளிந்தார்கள். அவ்வாறு பிடித்துப் போனவர்களில் நோயாளிகளாக இருந்தால் அரசு மருத்துவ மனைகளில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்படும்.

- மன நோயாளிகளாக இருந்தால் மனநல காப்பகத்தில் சேர்க்கப்படுவர்.
- மாற்றுத் திறனாளிகளாக இருந்தால் அவர்களின் தகுதிக்கு ஏற்ப சுயதொழில்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

நிர்பந்தங்களால் பிச்சை எடுக்க வந்தவர்களாய் இருந்தால் உறவினர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப் படுவார்கள். இதற்காக தமிழ்நாட்டில் 6 இடங்களில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு மையங்கள் கட்டித் தரப்பட்டன.

காசு பார்க்கும் கயவர்கள் 'பிச்சை எடுத்து உண்ணுவது அவமானம். உழைத்து உண்பதே தன்மானம்' என்பது அந்தத் திட்டத்தின் நோக்கமாக

அமைந்தது. நாளடைவில் அது முடங்கிப் போனதால் பஸ், ரெயில் நிலையங்கள், போக்குவரத்து சிக்னல்கள், வழிப்பாட்டு தலங்கள் போன்ற இடங்கள் மீண்டும் பிச்சைக்காரர்களின் புகலிடமாக மாறிப்போயின. குழந்தை களின் வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக ஆதரவற்ற முதியோர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்கு ஆளாகுகின்றனர்.

இதில் கொடுமை என்னவென்றால்? குழந்தைகள், பெண்களை கட்டாயப்படுத்தி இந்தத் தொழிலில் தள்ளி காசு பார்க்கும் கயவர் கூட்டமும் நிழல் மறைவாய் இருக்கத்தான் செய்கி றது. இயக்குனர் பாலாவின் 'நான் கடவுள்' திரப்படம், இந்த அக்கிரமத்தை வெளிச்சம் போட்டு காட்டி இருந்தது. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுக்காக மத்திய அரசு ரூ.182 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், ஐதராபாத், இந்தூர், லக்னோ, நாக்பூர், பாட்னா, அகமதாபாத் ஆகிய 10 நகரங்களில் இந்தத் திட்டம் அமல்படுத்தப் படுகிறது.

தற்போது தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களை கட்டுப்படுத்தவும், அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெளி மாநிலங்களைச் சேர்ந் த சிலரும் தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பதை தொழிலாகச் செய்து வருகிறார்கள். போக்குவரத்து அதிகமாக இருக்கும் 'சிக்னல்' பகுதிகளில் அவர்களைக் குழந்தை குட்டிகளுடன் காணமுடிகிறது.

**பிற்படுத்தப்பட்ட வகுப்புக் கமிஷன் உருவாக்கம்**

இந்திய அரசியலமைப்பு நாட்டின் இறுதிச் சட்டம். இடஒதுக்கீடு முறையின் தோற்றம் இந்தியாவின் பழைய பாரபட்சமான சாதி அமைப்பில் இருந்திருக்கலாம். சமத்துவத்தை சமமாக நடத்த முடியாது என்பதால், இந்திய அரசியலமைப்பு சமத்துவத்தை வளர்ப்பதற்கு நேர்மறையான பாகுபாட்டை அனுமதிக்கிறது. இந்திய சமூகத்தை ஜனநாயக மற்றும் சமத்துவ சமூகமாக

மாற்றும் நோக்கத்துடன், நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இடஒதுக்கீட்டுக் கொள்கையை கடைப்பிடித்து, சமூகத்தை பிரதான நீரோட்டத்தில் இணைக்க முடியும். எனவே, இடஒதுக்கீடுகள் பொது விதிக்கு விதிவிலக்காக இருந்தன. கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடுகள் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களை மாநிலத்தின் கண்ணோட்டத்தில் உயர்த்துவதற்காக வழங்கப்படும். இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக சமூக, கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மற்றும் சுரண்டப்படும் SC/ST/OBC வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

1980 ஆம் ஆண்டின் மண்டல் கமிஷன் அறிக்கை இந்தியாவில் ஓபிசி இடஒதுக்கீட்டை முதலில் வரையறுத்தது. இந்தியாவில் மண்டல் கமிஷன் நிறுவப்படுவதற்கு முன்பு, மாநிலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மட்டங்களில் சாதிய பாகுபாடுகளை அனுபவித்தது. வாழ்க்கைத் தரம், பட்டியலிடப்பட்ட சாதிகள், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் OBC குடும்பங்கள், இந்து முன்னோடி சாதிகள் மற்றும் பிற மதக் குழுக்கள் உட்பட, பிரதான மக்களை விட மிகவும் ஏழ்மையானதாகக் கருதப்பட்டது. மண்டல் கமிஷன் பரிந்துரைத்தபடி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இருபத்தி ஏழு சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்த முடிவுக்கு எதிராக நாடு முழுவதும் பல போராட்டங்கள் நடந்தன, மேலும் பல ரிட் மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன, ஆனால் அவை வழங்கப்பட்ட இட ஒதுக்கீட்டை பாதிக்கவில்லை. 1992 இல் உச்ச நீதிமன்றம் இந்திரா சாவ்னி Vs யூனியன் ஆ்ஃப் இந்தியா வழக்கில் OBC இட ஒதுக்கீட்டை (கிரீமி லேயர் தவிர்த்து) உறுதி செய்தது.

**மண்டல் கமிஷன் அறிக்கை**

1979 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களால் சமூக அல்லது கல்வியில் பின்தங்கியவர்களைக் கண்டறியும் நோக்கத்துடன் ஆணையம் நிறுவப்பட்டது. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய வகுப்பினரை நிர்ணயிப்பதற்கான அளவுகோல்களை உருவாக்குவதும், அடையாளம் காணப்பட்ட தனிநபர்களின் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினரை முன்னேற்றுவதற்கான முன்முயற்சிகளை பரிந்துரைப்பதும் கமிஷனின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. அதைத் தொடர்ந்து, தாங்கள் கண்டறிந்த உண்மைகளைக் கோடிட்டுக் காட்டுவதுடன், தங்களுக்குத் தகுந்ததாகக் கருதப்படும் ஏதேனும் பரிந்துரைகளைச் செய்தும் அறிக்கை ஒன்றை அவர்கள் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. தேவையான தரவு மற்றும் ஆதாரங்களைச் சேகரிக்க, மண்டல் கமிஷன் பல்வேறு முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தியது. "மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக" தகுதி பெற்றவர் யார் என்பதை தீர்மானிக்க.

மிகவும் முழுமையான ஆராய்ச்சி, விசாரணை மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களின் உதவிக்குப் பிறகு, சமூகப் பின்தங்கிய நிலையைக் கண்டறிய 11 குறிகாட்டிகளை ஆணையம் உருவாக்கியது. இந்த குறிகாட்டிகள் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரம். மண்டல் கமிஷன் 1980 டிசம்பரில் அதன் அறிக்கையை வழங்கியது, அது பின்தங்கிய நிலையைக் குறிக்கப் பயன்படுத்திய அளவுகோல்களை விளக்கியது, மேலும் இந்திய மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட OBC அல்லது பிற பிற்படுத்தப்பட்ட சாதிகளில் அதன் அவதானிப்புகள் மற்றும் முடிவுகளின்

அடிப்படையில் பரிந்துரைகளை வழங்கியது. மற்றும் கல்வியில் பின்தங்கிய சாதிகள். மண்டல் கமிஷன் அறிக்கை கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற அரசு வேலைகளில் OBC களுக்கு ( 3743 சாதிகளை உள்ளடக்கியது) 27% இடஒதுக்கீட்டிற்கு பரிந்துரைத்தது. இந்திய மக்கள்தொகையில் ஓபிசி 52% என்ற காரணத்திற்காக இந்த பரிந்துரை செய்யப்பட்டது, மேலும் சமூக பின்தங்கிய நிலைக்கு எதிரான போரின் இன்றியமையாத பகுதியாக பின்தங்கிய மக்களின் மனதில் போராட வேண்டும் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும் என்று அவர்கள் நம்பினர். இந்தியாவில், அரசு சேவைகள் எப்போதுமே கௌரவம் மற்றும் அதிகாரத்தின் சின்னமாக பார்க்கப்படுகின்றன. அரசுப் பணிகளில் ஓபிசியினரின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம், அவர்களுக்கு இந்த நாட்டின் நிர்வாகத்தில் உடனடி பங்களிப்பை ஏற்படுத்த முடியும். உச்ச நீதிமன்றம் 1992 இல் OBC களுக்கு 27% இடஒதுக்கீட்டை உறுதி செய்தது ( இந்திரா சாவ்னி வழக்கு), கிரீமி லேயருக்கு உட்பட்டது.

ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டதால் இந்த அறிக்கை பல விமர்சனங்களைச் சந்தித்தது. பிபி மண்டல் 1931 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை பெரிதும் நம்பியிருந்தார், அதாவது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட கடைசி சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பு. சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய வகுப்பினரைக் கண்டறிய சாதியைக் கருத்தில் கொண்டால், ஜாதியை இடஒதுக்கீட்டின் அடிப்படையாகக் கொள்ளலாம், ஆனால் சமூகத்தின் முன்னோடி பிரிவுக்கு சமமாக வந்த சாதியைச் சேர்ந்தவர்கள் அகற்றப்பட வேண்டும்.

**க்ரீமி லேயர்**

கிரீமி லேயர்" என்ற வார்த்தை முதன்முதலில் உச்ச நீதிமன்றத்தால் இந்திரா சாவ்னி வெர்சஸ் யூனியன் ஆ்ஃப் இந்தியா என்ற வழக்கில்

உருவாக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அடையாளம் காணும் போது, அவர்களில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறியவர்களை (" கிரீமி லேயர்") விலக்க வேண்டும் என்று இந்த வழக்கில் கூறப்பட்டது. இந்த வழக்கில் கூறப்பட்ட காரணம், "சமூகம் நிலையானதாக இல்லை" என்பதாகும். தனித்துவமான அரசியலமைப்பு விதிகளின் குறிக்கோள் ஒரு சில மக்களையும் குடும்பங்களையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகப் பிரிப்பது அல்ல, மாறாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தைப் பாதுகாப்பதாகும். இதன் விளைவாக, முன்னோக்கி மற்றும் பின்தங்கிய குழுக்களைப் பிரிப்பது சட்டபூர்வமானது மட்டுமல்ல, அரசியலமைப்பு ரீதியாகவும் தேவைப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றவர்களுடன் போட்டியிட போதுமான திறன்களை வளர்த்துக் கொள்ளாத வரை, அவர்கள் முன்னேறிய வகுப்பினராக வகைப்படுத்த முடியாது. இருப்பினும், அவர்கள் தேவையான திறன்களைப் பெற்றவுடன், அவர்கள் பின்தங்கியிருக்க மாட்டார்கள். அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் என்றும், பிறரை அதிகம் அல்லது மிகவும் பின்தங்கியவர்கள் என்றும் அழைப்பது முரண்பாடாக இருக்கும்.

சட்டநாதன் குழு 1971 இல் கிரீமி லேயர் வரம்பை 100,000 ரூபாய்க்கு மேல் பெற்றோரின் மொத்த ஆண்டு வருமானமாக நிர்ணயித்தது. 1993 இல் " கிரீமி லேயர்" உச்சவரம்பு விதிக்கப்பட்டபோது, அது ஒரு லட்சமாக இருந்தது. பின்னர் 2004-ல் ஆண்டுக்கு 2.5 லட்சமாக உயர்த்தப்பட்டு, 2008-ல் □ 4.5 லட்சமாகவும், 2013-ல் ரூ. 6 லட்சமாகவும், 2017-ல் ரூ. 8 லட்சமாகவும் உயர்த்தப்பட்டது. இன்று கிரீமி லேயர் அல்லாத விண்ணப்பதாரராகத் தகுதிபெற ஒருவரின் குடும்ப ஆண்டு வருமானம். எட்டு லட்சத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எவரேனும் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதற்குப் போதுமான நிதி வலிமையைப் பெற்றிருந்தால், இடஒதுக்கீடு பாதுகாப்பை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் வசதி படைத்த பிரிவினர், கணிசமான அளவு குறைந்த செல்வந்தர்களாக உள்ள குழுவில் உள்ள மற்றவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்றனர். இந்த நபர்கள் உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான நன்மைகளை " மெல்ல மாட்டார்கள்" என்று உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். இடஒதுக்கீட்டின் நன்மையிலிருந்து இவர்களை விலக்கும் வகையில் பொருளாதார உச்சவரம்பு அமைக்கப்படும். இதன் விளைவாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே உள்ள கிரீம் நீக்கப்பட வேண்டும்.

**பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் தேசிய ஆணையம்**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம் ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாகும். இந்திய அரசியலமைப்பின் பிரிவு 338B, 123 வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2017 மற்றும் 102 வது திருத்தச் சட்டம், 2008 ஆகியவற்றின் படி, இது ஒரு அரசியலமைப்பு அமைப்பு. 102வது திருத்தம் கமிஷனுக்கு அசாதாரண அதிகாரத்தை ( NCBC) வழங்கியது. சேவைகள் மற்றும் கல்வியில் OBC இடஒதுக்கீடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆணையம் முறையாக விசாரணை நடத்த இது உதவுகிறது. NCBC ஆனது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் ஒரு பகுதியாகும், இது ஆகஸ்ட் 14, 1993 இல் நிறுவப்பட்டது. இது 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க நிறுவப்பட்டது.

தலைவர், துணைத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களுக்கான சேவை விதிமுறைகள் மற்றும் பதவிக் காலம் ஆகியவை குடியரசுத் தலைவரால்

அமைக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பு அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினருக்கு ( SEBC) உருவாக்கப்பட்ட பாதுகாப்பின் செயல்திறனை மதிப்பாய்வு செய்வதற்காக, அத்தகைய பாதுகாப்புகள் தொடர்பான அனைத்து விஷயங்களையும் ஆணையம் விசாரித்து மேற்பார்வை செய்கிறது. இது சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய குழுக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறது, அத்துடன் யூனியன் மற்றும் எந்த மாநிலத்தின் கீழும் அவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுகிறது. NCBC அந்த பாதுகாப்புகளை வருடாந்தர அடிப்படையில் செயல்படுத்துவது மற்றும் ஆணையம் பொருத்தமானதாக கருதும் மற்ற நேரங்களில் ஜனாதிபதிக்கு அறிக்கை செய்கிறது. NCBC அந்த பாதுகாப்புகளின் செயல்பாடு குறித்து ஜனாதிபதிக்கு ஆண்டுதோறும் மற்றும் ஆணையம் பொருத்தமானதாக கருதும் மற்ற நேரங்களில் அறிக்கை செய்கிறது. ஜனாதிபதி இந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் சமர்ப்பிக்கிறார். அத்தகைய அறிக்கையின் நகல் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதி, மாநில அரசு சம்பந்தப்பட்ட எந்த தலைப்பிலும் இருந்தால், மாநில அரசுக்கு வழங்கப்பட வேண்டும். சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய குழுக்களின் பாதுகாப்பு, நலன், மேம்பாடு மற்றும் முன்னேற்றம் தொடர்பான எந்தவொரு கூடுதல் பணிகளையும் என்சிபிசி நிறைவேற்ற வேண்டும். சிவில் நீதிமன்றத்திற்கு நிகரான அதிகாரங்கள் இதற்கு உண்டு.

என்சிபிசி சட்டம் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினருக்கான தீர்வை வகுத்தது. இந்திய குடிமக்களிடையே சமத்துவத்தையும் அமைதியையும் நிலைநாட்ட ஆணையத்தின் தேவை உருவாக்கப்பட்டது. சில பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்களுக்குத் தங்களின் உரிமைகள் மற்றும் பலன்களைப் பற்றி எந்த யோசனையும் இல்லை, ஏனெனில் சிலர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக

இருந்தாலும், கிரீமி லேயரில் இருப்பதால் அவர்கள் கல்வியிலும் சமூகத்திலும் முன்னேறியிருக்கிறார்கள், அவர்களால் உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எஞ்சியுள்ளனர். வெளியே. இந்தச் சட்டத்தின் நோக்கம், இந்த வகையான குடிமக்களைச் சேர்ப்பது மற்றும் விலக்கப்படுவதைப் பராமரிப்பதாகும்.

அக்டோபர் 2015 இல், என்சிபிசி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, பெற்றோரின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 15 லட்சம் வரையில், OBCக்கான குறைந்தபட்ச உச்சவரம்பாகக் கருதப்பட வேண்டும் என்று NCBC பரிந்துரைத்தது. ," மற்றும் "மிகப் பின்தங்கிய" தொகுதிகள் மற்றும் 27% ஒதுக்கீட்டை அவர்களுக்கிடையில் அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகிர்ந்துகொள்வது, அதனால் வலுவான OBC கள் ஒதுக்கீடு நன்மைகளில் ஏகபோக உரிமையை கொண்டிருக்காது.

**அரசியலமைப்பு விதிகள்**

பிரிவு 15-'மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்தல்'. கட்டுரை 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த பொதுவான சமத்துவக் கோட்பாடு, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும் பல்வேறு சூழ்நிலைகளை இது பட்டியலிடுகிறது. கலை படி. 15(4), பிரிவு 15 அல்லது பிரிவு 29(2) இல் உள்ள எதுவும் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய மக்கள் அல்லது பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதைத் தடுக்கவில்லை. தற்போது இந்த பிரிவின் கீழ் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினருக்கு கல்வி நிறுவனங்களில் சேர்க்கையில் இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

பிரிவு 16- பொது வேலை வாய்ப்பு விஷயங்களில் சமத்துவம். கலை. 16 குறிப்பிட்ட சூழ்நிலையில், அதாவது, மாநிலத்தின் கீழ் உள்ள வேலை விஷயங்களில் பொதுவான சமத்துவக் கோட்பாட்டின் குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு வழங்குகிறது. கலையின் படி இந்த கட்டுரையில் எதுவும் இல்லை. 16(4), அரசின் பார்வையில், மாநிலத்தின் கீழ் உள்ள சேவைகளில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஆதரவாக நியமனங்கள் அல்லது பதவிகளில் இடஒதுக்கீடு செய்வதற்கான எந்தவொரு குறிப்பிட்ட ஏற்பாட்டையும் உருவாக்குவதைத் தடுக்கிறது.

**இட ஒதுக்கீடு கொள்கையை செயல்படுத்துதல்**

1990 ஆம் ஆண்டு கருணாநிதி தலைமையிலான திமுக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் எஸ்சி மற்றும் எஸ்டி இடஒதுக்கீட்டை பிரித்தது. எஸ்டியினருக்கான 1% இடஒதுக்கீடு தமிழகத்தில் மொத்த இடஒதுக்கீடு விகிதத்தை 69 சதவீதமாகக் கொண்டு வந்தது.

1992 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் 1992 ஆம் ஆண்டில் விதி 16(4) இன் படி அனுமதிக்கப்பட்ட இடஒதுக்கீடுகளின் மொத்த அளவு 50% ஐ தாண்டக்கூடாது என்று தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, 1994-1995 கல்வியாண்டில் அதை 50% ஆக குறைக்க சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் மசோதா, 1993 சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது ( 1994 இன் சட்டம் 45). இந்த மசோதா ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

ஜெயலலிதாவின் அதிமுக ஆட்சியில் தமிழக அரசியல்வாதிகள் அடங்கிய கட்சிக் குழு ஒன்று டெல்லிக்கு சென்று மத்திய அரசை சந்திக்கிறது. தமிழக

அரசின் சட்டத்தை அரசியல் சாசனத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும் என்றும், எந்த நீதிமன்றத்திலும் அதை எதிர்த்துப் போராட முடியாது என்றும் அவர் கோரினார். தமிழகத்துக்கு 69 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்து குடியரசுத் தலைவரின் கையெழுத்து பெறப்பட்டது.

1994ஆம் ஆண்டு, 9வது அட்டவணையில் 69 சதவீத இடஒதுக்கீட்டைச் சேர்த்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் புகார் செய்வதற்காக புதுதில்லி செல்லும் வழியில் வழக்கறிஞர் கே.எம்.விஜயன் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு உடல் ஊனமுற்றார். பின்னர் 69% இட ஒதுக்கீடு அதே ஆண்டில் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

**சேலத்தில் இரும்பு உருக்காலை**

சேலத்திலுள்ள கஞ்சமலை வடக்குப் படுகை இரும்புத் தாது சுரங்கத்தை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான சேலம் உருக்காலைக்குக் கொடுக்காமல், தனியார் நிறுவனமான ஜிண்டலுக்குத் தமிழக அரசு நியாயங்களைப் புறக்கணித்துவிட்டு உரிமம் வழங்கியுள்ளது. கடந்த காலங்களில் பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையில் சேலம் இரும்பாலை அமைந்தது. சேலம் இரும்பாலைக்கும், சேதுக் கால்வாய்க்கும், தூத்துக்குடி துறைமுகத்துக்கும் பேரறிஞர் அண்ணா எழுச்சி நாள் என்று அறிவித்தார். அன்று தமிழகம் முழுவதும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த சேலம் இரும்பாலை எப்படி தமிழகத்துக்கு வந்தது என்பது தமிழகத்தின் சரித்திரத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று.

பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது இதுகுறித்த முயற்சிகளை மேற்கொண்டார். 'காமராஜ் பிளான்' என்று முதல்வர் பொறுப்பிலிருந்து விலகிய அவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். அன்றைய பிரதமரான லால்பகதூர் சாஸ்திரியின்

அமைச்சரவையில் நீலம் சஞ்சீவ ரெட்டி மத்திய அரசில் உருக்குத் தொழில் அமைச்சராக இருந்தார். தன்னுடைய மாநிலமான ஆந்திரத்திலுள்ள விசாகப்பட்டினத்தில் இந்த இரும்பாலையை அமைக்க விடாப்பிடியாக முயன்றார் அவர்.

காமராஜ், அன்றைய கம்யூனிஸ்ட் தலைவர் பி.இராமமூர்த்தியிடம் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு பிரதமர் சாஸ்திரியை சந்தித்து சேலத்துக்கு இரும்பாலை வேண்டும் என்று வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டார். சாஸ்திரியைச் சந்தித்து இதுகுறித்து தமிழக அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டனர். அதன்பின்பு காமராஜ் அவசியம் இரும்பாலை சேலத்துக்கு வேண்டும் என்று சாஸ்திரியிடம் கேட்டுக்கொண்டார். அதன் காரணமாகத்தான் சேலத்தில் இந்த இரும்பாலை அமைந்தது.

முதல்வராக கருணாநிதி இருந்த போது பிரதமர் இந்திரா காந்தி 1970 செப்டம்பர் 16 அன்று சேலம் இரும்பு உருக்காலைக்கு அடிக்கல் நாட்டினார்.சேலம் இரும்பாலையின் ரிஷிமூலம், நதிமூலம் என்று ஆராய்ந்தால் பல செய்திகள் உள்ளன.

சேலத்தைச் சேர்ந்த அருணாசல ஆசாரி தயாரித்த உருக்கு வாள் லண்டன் தொல்பொருள் காட்சியகத்தில் அவரது பெயரோடு சேலம், தமிழ்நாடு என்று எழுதப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 1893இல் தாமஸ் ஷொலாண்டு, 1917-18இல் டாக்டர் வி.எஸ்.துவே, 1944இல் எம்.கே.என். அய்யங்கார் ஆகியோர் கஞ்சமலை இரும்புத் தாதுவை ஆய்வு செய்து அரசிடம் அறிக்கைகள் வழங்கினர். ஆனால், உருக்கு உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி அப்போது கிடைப்பதற்கு பெரும் பிரச்சினையாக இருந்தது என்பதால், உருக்காலை முயற்சி அடுத்த கட்டத்தை எட்டவில்லை.

ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழகத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அன்றைய தி.மு.க. உறுப்பினர் ஈ.வெ.கி.சம்பத் ஆகியோர் அங்கே இரும்பாலை எப்படி உள்ளது என்று கவனித்து அதுபோன்ற உருக்காலையை நெய்வேலி நிலக்கரிக் கொண்டு சேலத்தில் அமைக்க நாடாளுமன்றத்தில் கோரிக்கை எழுப்பினர். அதன்பின் மேற்கு ஜெர்மனி நிபுணர்கள் கஞ்சமலை வந்து சேலத்தில் உருக்காலை அமைக்க முடியுமா என ஆய்வு செய்தனர்.

1960க்குப் பின் தமிழக அரசால் இந்த உருக்காலைக்கு 24,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. மேலும் இதுகுறித்து ஜப்பான் நாட்டோடும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு 2.5 லட்சம் டன் இரும்பு உற்பத்தி செய்யலாம் என்று 1966இல் தமிழக அரசு ஓர் அறிக்கையைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியலு. 1970இல் சேலம், விசாகப்பட்டினம் விஜயநகரில் உருக்காலைகள் அமைக்க, மத்திய அரசு முறைப்படி அறிவிப்பு செய்தது. 1973இல் சேலம் உருக்காலை இந்திய உருக்காலை ஆணையத்தின் சார்பு நிறுவனமாக அறிவிக்கப்பட்டு முதல் கட்டமாக ரூ.136 கோடி மூதலீட்டில் 32 ஆயிரம் டன் திறன்கொண்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ( குtச்டிணடூனுண்ண குtனுனுடூ) உற்பத்தி செய்யும் குழு உருட்டாலை திட்டத்துக்கு மத்திய அரசு 1977இல் ஒப்புதல் அளித்தது.

1970 ஆம் ஆண்டில், கலைஞர் உலகத் தரம் வாய்ந்த எஃகு உற்பத்தியாளரான சேலம் ஸ்மெல்ட்டரைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து, தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து வேலை வாய்ப்புகளை உருவாக்கினார்.

**மனு நீதி திட்டம் தந்தது கலைஞர்**

இந்த திட்டம் தமிழ் நாட்டில் வருவாய் கிராமங்களில் செயல்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது, 1969ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிகிறது.

மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் இதனை நடத்தும் தகுதி படைத்தவர்கள். மாவட்ட ஆட்சியரின் கீழ் பணி செய்யும் அனைத்துத் துறை அலுவலர்களும் கூட்டம் நடத்தி அதில் கலந்துகொள்வார்கள் என்று தெரிகிறது.

- மூன்று ஆண்டுகள் இந்த திட்டத்திற்கான கால வரம்பு என்று கூறப்படுகிறது.
- இந்த திட்டத்தின் கீழ், மாதம் ஒரு கிராமம் வீதம் மூன்றாண்டு இடைவெளிக்குள் தம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களில் முகாம்களை அதிகாரிகள் நடத்துவார்கள்.
- இந்த முகாம்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன்கிழமை அன்று நடத்தப்படு வேண்டும் என்று தெரிகிறது.
- தொடர்புடைய கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டு உடனடியாகத் தீர்க்க முற்படுவது இத்திட்டத்தின் நோக்கம் என்று கூறலாம்.

சுருக்கமாக சொன்னால், மாவட்ட ஆட்சியர் அதிகாரிகள் கிராமங்களில் நடத்தும் குறைதீர் கூட்டம் ஆகும்.

**விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்**

1972 -ம் ஆண்டு தமிழக மாணவர்கள் விவசாயப் பொறியியல் கற்க தென்னிந்தியாவில் முதன் முதலில் விவசாயக் கல்லூரி ஆரம்பித்தவர் கருணாநிதி. அதிலிருந்த கால்நடைப் பிரிவை தனியாகப் பிரித்து, 1989-ம் ஆண்டு ஆசியாவிலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தார். 1969 முதல் 1976 வரையிலான ஆட்சிக் காலத்தில் பதினைந்து ஏக்கர் நில உச்ச வரம்பு சட்டம் மூலம் 1 லட்சத்து 78

ஆயிரத்து 880 ஏக்கர் உபரி நிலங்கள் கைப்பற்றப்பட்டு 1,37,236 விவசாயிகளுக்குக் கொடுத்தார்.

1990-ம் ஆண்டு பம்புசெட் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசம் என அறிவித்தார். இதனால் பலன் அடைந்த விவசாயிகளின் அப்போதைய எண்ணிக்கை 16 லட்சம். இந்தியாவிலேயே முதன்முதலாகக் விவசாயிகளுக்காக 'மின்சாரம் இலவசம்' என்று கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் அது. அதற்குப் பின்னால் ஒரு கதையும் இருக்கிறது. 1989-ம் ஆண்டு கருணாநிதி ஆட்சிக்கு வந்தவுடன் மின்சாரத்தை இலவசமாகக் கொடுக்கும் யோசனையில் மும்முரமாக இருந்தார். அப்போதைய மின்வாரிய அதிகாரிகள் "அதிக செலவாகும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் மின்சாரம் இலவசம் என்று கிடையாது" என்று சொன்னார்கள். அதனை மறுத்த கருணாநிதி, "விவசாயிகள் கஷ்டப்படுறாங்க. அவங்களுக்கு பயன்படுற மாதிரி ஏதாவது நல்ல திட்டம் வேணும்னு தோணுது. எனக்கு இதுதான் சரின்னு தோணுது. விவசாயிகள் மின்சாரத்துக்காக ரொம்ப கஷ்டப்படுறாங்க. அதனால இதுதான் சரியா இருக்கும்னு நினைக்கிறேன்" என்று இலவச மின்சாரத்துக்கான ஆணை வெளியிட்டு உறுதி செய்தார். இதைத்தான் இன்று பல மாநிலங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன. 1996 முதல் 2001ம் ஆண்டில் 32 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் தமிழக முழுவதிலும் அமைத்தார்.

1991-ம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்ற திட்டத்தை ரத்து செய்ய முடிவெடுத்தார். இதைக் கண்டித்து மாநிலம் முழுவதிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்திய தி.மு.க பலமாகத் தனது எதிர்ப்பைப் பதிவு செய்தது. இதனைக் கண்டு கொஞ்சம் பின்வாங்கினார் ஜெயலலிதா. மீண்டும் 1996-ம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த தி.மு.க

தலைவர் கருணாநிதி இலவச மின்சாரத்தை 25 விழுக்காட்டிலிருந்து 27 விழுக்காடாக அதிகரித்தார். 1996-2001-க்கு இடைப்பட்ட காலத்தில் இயற்கைச் சீற்றத்தால் இறக்கும் ஆடுகளுக்கு 1000 ரூபாயும், மாடுகளுக்கு 5,000 ரூபாயும், கன்றுக்கு 3,000 ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கியவர்.

1996-97-ல் வறட்சி, 1997-ம் ஆண்டு நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன்கள் அனைத்தும் மத்திய காலக் கடன்களாகவும், மத்தியகாலக் கடன்கள் அனைத்தும் நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றப்பட்டது. அபராத வட்டியாக இருந்த 50 கோடி ரூபாய் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. 1998-99ல-ம் ஆண்டு நடப்புக் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்குக் கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது.

விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல பாதைக் கட்டணம் செலுத்த வேண்டி இருந்தது. ஆனால், அரசு நிலங்களில் பதிக்கும் விவசாயக் குழாய்களுக்காக விதிக்கப்பட்ட பாதைக் கட்டணம் 2000-2001-ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டிடங்கள், 10,000 எக்டேர் தரிசு நிலத்தினை மேம்பாடு செய்து மரக்கன்று சாகுபடி, நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் மாத ஓய்வூதியம், கூட்டுறவு வங்கிகள் நகைக் கடனை 1 லட்சமாக உயர்த்தியது, யூரியா உரத்திற்கு விற்பனையாக இருந்த 4 விழுக்காட்டு வரியை 2 விழுக்காடாகக் குறைப்பு, பழைய ஆயில் இஞ்ஜின்களுக்குப் பதிலாக புதிய ஆயில் இஞ்சின் வழங்குதல், கரும்பு பயிர்க்கடன் மற்றும் ஆதார விலையை உயர்த்துதல், கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் போக்குவரத்துக்கட்டணம் வழங்குதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு

குடியிருப்பு மனை என்பது உள்ளிட்ட பல திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார் கருணாநிதி

பஞ்சாப் மற்றும் ஆந்திர மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகண்ட திட்டமான ‘உழவர் சந்தை’ திட்டத்தை 1999-ம் ஆண்டு தமிழகத்திலும் அறிமுகப்படுத்தினார், கருணாநிதி. விவசாயிகள் இடைத்தரகர்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்கவே இத்திட்டத்தைக் கொண்டுவந்தார். அப்போது 103 உழவர் சந்தைகளை தமிழகம் முழுவதும் அமைத்தார்.

ஆனால் 2001-ம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு உழவர் சந்தை திட்டத்தை ரத்து செய்து, பூட்டுப் போட்டார். 2007-ம் ஆண்டில் பழைய உழவர் சந்தைகளையும் சேர்த்து 153 - ஆக விரிவுபடுத்தி அத்திட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தார். 2006-ம் ஆண்டு தி.மு.க ஆட்சிக்குப் பதவியேற்ற நாள் அன்று மேடையிலேயே விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருந்த 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன்களை முழுவதுமாக ரத்து செய்து உத்தரவிட்டார். அதனால் தமிழகத்தில் உள்ள 22 லட்சத்து 40 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயனடைந்தன. விவசாயிகளுக்கு 8 லட்சத்திற்கு மேலான உர அடையாள அட்டைகளை வழங்கியுள்ளார்.

பயிர்க் காப்பீடு திட்டத்தில் 2006-ம் ஆண்டு 50 சதவிகிதம் காப்பீட்டுத் தொகையை அரசே மானியமாகக் கொடுத்து ஒரு லட்சம் விவசாயிகளைப் பயனடைய வைத்தது. 2009-2010-ம் ஆண்டுகளில் 7 லட்சத்து 80 ஆயிரம் விவசாயிகள் அரசின் மானிய உதவி பெற்று பயிர் காப்பீடு செய்தனர். 2006 முதல் 2010 வரையிலான நான்கு ஆண்டுகளில் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 891 கோடி ரூபாயை வழங்கினார். 2006-2010-ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட தனது ஆட்சிக் காலத்தில் ஆதி திராவிட விவசாயிகள் தாட்கோ

நிறுவனம் மூலம் 2000-ம் ஆண்டு வரை பெற்ற கடன் தொகை வட்டி உட்பட 5 கோடியே 25 லட்சம் முழுவதுமாக தள்ளுபடி. 1 லட்சத்து 57 ஆயிரத்து 57 நிலமற்ற ஏழை விவசாயிகளின் குடும்பங்களுக்கு 2,11,356 ஏக்கர் இலவச நிலம் வழங்கப்பட்டது உள்ளிட்ட பல திட்டங்களை கொண்டு வந்தார் கருணாநிதி.

2005 - 2006-ம் ஆண்டு விவசாயிகளுக்கான பயிர்க் கடன் வட்டி 9 சதவீதமாக இருந்தது. அதை 2006 - 2007-ம் ஆண்டு 7 சதவீதமாகக் குறைத்து, 6,31,283 பேருக்கு, 1250 கோடியே 62 லட்ச ரூபாயும், 2007-2008- ம் ஆண்டு 5 சதவீதமாகக் குறைத்து, 6 லட்சத்து 48 ஆயிரத்து 397 பேருக்கு 1,393 கோடியே 97 லட்ச ரூபாயும், 2008-2009-ம் ஆண்டு 4 சதவீதமாகக் குறைத்து, 6 லட்சத்து 91 192 பேருக்கு 1570 கோடியே 99 லட்ச ரூபாயும் 2009-2010-ம் ஆண்டு பயிர்க் கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியை முற்றிலும் ரத்து செய்தார். 2010 - 2011-ம் ஆண்டில் 8 லட்சத்து 1960 விவசாயிகளுக்கு 2453 கோடி ரூபாய் பயிர்க் கடன்களை ரத்து செய்தார். 2006-க்கு பின்னர் மொத்தம் 36 லட்சத்து 71 ஆயிரத்து 372 விவசாயிகளுக்கு 8,838 கோடியே 6 லட்ச ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளன. அப்போது நிலுவையில் இருந்த இரண்டு லட்சம் பம்பு செட்டுகளுக்கு படிப்படியாக இலவச மின் இணைப்பு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2006-ம் ஆண்டு முதல் 2008-ம் ஆண்டு வரை தமிழக நெல் விவசாயிகள் மேம்பாட்டிற்காக, மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயிக்கும் விலையுடன் மாநில அரசின் சார்பில் மானியம் வழங்கியது, தி.மு.க. விவசாயிகளின் நலனைக் கருதி தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறார். விவசாயிகளின் பிரச்னை குறித்து ஆராய்வதற்கு விவசாயிகள் நல வாரியம் அமைத்தார். முதன் முதலாக நிதி நிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்னர், விவசாயப் பிரதிநிதிகளை அழைத்து ஆலோசித்து அதன்படி

தயாரித்தவர். தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மொத்தமாக 29 அணைகள் கட்டப்பட்டுள்ளன. நீர் பாசனக் கால்வாய்கள், கூட்டுக்குடிநீர் திட்டங்கள் எனப் பல திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2011-ம் ஆண்டுக்குப் பின்னர் வரைக்கும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், விவசாயிகளுக்கு ஆதரவாக அவரது குரலோ, எழுத்தோ ஒலித்துக் கொண்டேதான் இருந்தது.

**பெண்களுக்கு சொத்துரிமை**

தொன்று தொட்டு பெண்கள் ஆண்களை சார்ந்தே வாழ வேண்டும் என்ற நிலை இருந்துவந்தது. இளம் வயதில் அப்பா அல்லது அண்ணன்கள், திருமணத்திற்கு பிறகு கணவன் அல்லது மாமனார், முதுமையில் குழந்தைகளை நம்பி வாழ வேண்டியுள்ளது. சுயமாக சிந்தித்து செயல்பட பெண்களுக்கு வாய்ப்பில்லாதநிலை. பெண்களை ஆட்டி அடக்கிவைப்பதை ஆண்கள் வழக்கமாக கொண்டிருந்தனர்.

கல்வியில்லாததால் துணிவும், பணம் இல்லாததால் பொருளாதார சுதந்திரமும் இல்லாமல் தவித்த பெண்கள் சுயமரியாதையுடன் வாழ உழைத்த தந்தை பெரியாரின் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுத்தவர் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி.

பெண்களுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக்கல்வியை வழங்கினார். அதேபோல, மரபுவழி சொத்தில் பெண்களுக்கு சம உரிமை அளித்து சட்டம் இயற்றினார். திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம் போன்ற எண்ணற்ற திட்டங்களை பெண்களின் மேம்பாட்டுக்காக செயல்படுத்தியவர் கருணாநிதி. அதனால் தான் அவரது மறைவை கேட்ட பெண்கள் கதறி அழுது புலம்பினர்.

பெண்களுக்கு சுயமரியாதை வாழ்வு தந்தகருணாநிதி, தமிழகத்திற்குகிடைத்த மாமுத்தாகும். மரபுவழி சொத்தில் பெண்களுக்கு சம உரிமை அளித்து சட்டம்கொண்டுவந்தது கருணாநிதியின் மிகப்பெரும் சாதனையாகும். அந்த சமூகநீதி போராளியின் புகழ் உலகில் பெண்கள் வாழும் வரை நிலைத்து ஓங்கும் என்பதில் ஐயமில்லை.

திராவிட இயக்கத்தின் அடிப்படை லட்சியங்களை ஒட்டி, தலைவர் கருணாநிதியின் ஆட்சிக்காலம் நெடுகிலும் பாலின சமத்துவத்தை உருவாக்கும் வகையில் அரசுப் பணிகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக்குழு எனப் பெண்கள் தங்களின் உரிமையைப் போற்றி வாழ்வதற்கானப் பல திட்டங்களை, இந்தியாவுக்கே முன்னோடியாக வழங்கினார். முத்தான இந்தத் திட்டங்களில் முத்தாய்ப்பானது, குடும்பச் சொத்தில் பெண்களுக்கான சம உரிமை வழங்கும் சட்டமாகும்.

செங்கல்பட்டில் 1929-ம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெரியார் நிறைவேற்றிய தீர்மானம், குடும்பச் சொத்தில் பெண்களுக்குப் பங்கு வேண்டும் என்பதை வலியுறுத்தியது. தொடக்கக் காலம் முதற்கொண்டே, பெண்ணினத்தின் விடுதலை - மறுமலர்ச்சி - உரிமை ஆகியவற்றைப் போற்றிய பெரியாரின் பெருங்கனவை, ஏறத்தாழ 60 ஆண்டுகள் கழித்து, 1989-ல் மூன்றாம் முறையாக முதல்வரான தலைவர் கருணாநிதி நனவாக்கினார். குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கும் சட்டத்தைத் தலைவர் கருணாநிதி தலைமையிலான திமுக அரசு நிறைவேற்றி, இந்தியாவுக்கே முன்னோடியாகத் திகழ்ந்தது.

வர்ணாசிரமம் - மனுஸ்மிருதி போன்றவற்றைக் காரணம் காட்டி பெண்களுக்கான சொத்துரிமை காலம் காலமாக மறுக்கப்பட்டு வந்த

சமுதாயத்தில், ஆணுக்கு இணையாகப் பெண்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற குரலைச் சீர்திருத்தச் சிந்தனையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலிருந்தே இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதற்கான சட்டம் நிறைவேற்றப்படவில்லை.

நமது அரசியல் சாசனத்தை உருவாக்கிய அம்பேத்கர், சுதந்திர இந்தியாவில் சளைக்காமல் போராடினார். நாடாளுமன்றத்தில் இந்து வாரிசு உரிமைச் சட்டத்தை உள்ளடக்கிய இந்து நடைமுறைச் சட்டத் தொகுதியை (Hindu Code Bills) நிறைவேற்றுவதற்காக அவர் மேற்கொண்ட போராட்டங்கள்,

தொலைநோக்குடையவை - உறுதியானவை - உரிமைக் குரலாக ஒலித்தவை. எனினும், பழமைவாதம் மாறாத - மதவாத அரசியல் சக்திகள் அதனைத் தடுத்தே வந்தன.

மனைவி - மகள் - அடிமைகள் இவர்களுக்குச் சொத்துரிமை கிடையாது என்கிற பழைய விதிகளை மீறக்கூடாது எனக் குறுக்கே நின்றன. அதனால், அம்பேத்கர் தனது அமைச்சர் பதவியையே துறந்தார் என்பது சமூகநீதிப் போராட்டத்தின் வரலாறு. பல தடைகளைக் கடந்து 1956-ம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அது முழுமையானதாக நிறைவேற்றப்படவில்லை. குடும்பச் சொத்தில் பெண்களுக்கு உரிமைகள் வழங்குவதில் பல சிக்கல்கள் நீடித்தன. ஓர் ஆணின் தனிச் சொத்தில் பெண்களுக்கு உரிமைகள் கிடைத்தாலும், பரம்பரைக் குடும்பச் சொத்தில் பெண்களுக்கான பங்கு கிடைப்பதற்குத் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது.

இந்நிலையில்தான், 1989-ல் பரம்பரைக் குடும்பச் சொத்தில் மகன்களுக்கு இருக்கும் உரிமை போலவே, மகள்களுக்கும் உண்டு என்பதைச் சட்டமாக்கி, பெண்களுக்குச் சம உரிமை வழங்கினார் தலைவர் கருணாநிதி. பங்காளி என்றால் அது ஆண்களுக்கு மட்டுமே உரிய சொல்லாக இருந்து வந்த நிலையில், குடும்பச்

சொத்து எனும் பங்கை ஆள்வதில் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்கிற சட்டத்தின் மூலம் அவர்களையும் 'பங்காளி' ஆக்கி, ஆண்டாண்டு காலப் பழியைத் துடைத்தெறிந்தவர் தலைவர் கருணாநிதி.

பெண்களுக்கான குடும்பச் சொத்துரிமை குறித்த விவாதங்கள் இந்திய அளவில் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்றங்களில் அவை தொடர்பான வழக்குகளும் தொடரப்பட்டன. தீர்ப்புகள் பல கோணங்களில் வெளிப்பட்டு வந்த சூழலில்தான், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை விசாரித்த நீதிபதிகள் அருண் மிஸ்ரா, எஸ்.அப்துல் நசீர், எம்.ஆர்.ஷா ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த 11 ஆம் தேதி மிக முக்கியமான தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

இந்து கூட்டுக்குடும்பச் சொத்தில் மகன்களைப் போலவே மகள்களுக்கும் சம உரிமை உண்டு. அந்த உரிமையை யாரும் மறுக்க முடியாது. இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956, மகள்களுக்கு வழங்கிய சம உரிமை இன்றும் செல்லும். சொத்து பாகப்பிரிவினையில் இந்து வாரிசு உரிமைச் சட்டம் 2005 திருத்தத்துக்கு முன்பு தந்தை இறந்திருந்தாலும் அந்தக் குடும்பத்தின் ஆண் மக்களுக்கு உள்ளதைப் போலவே பெண் மக்களுக்கும் அந்த சொத்தில் சம உரிமை உண்டு' என நீதிபதிகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பெரியாரும், அம்பேத்கரும் நடத்திய உரிமைப் போராட்டத்தை, அவர்களின் சிந்தனைகளைச் செயல்படுத்தும் வகையில், 31 ஆண்டுகளுக்கு முன்பே குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கி தலைவர் கருணாநிதி நிறைவேற்றிய சட்டத்திற்கு உறுதியான அங்கீகாரத்தை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

**பல்கலைக்கழக உருவாக்கம்**

- கோவையில் வேளாண் பல்கலைக் கழகம்

- சென்னையில் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம்
- நெல்லையில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
- சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகம்
- சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம்
- கோவை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களில் தலா ஓர் அண்ணா தொழிற்நுட்ப பல்கலைக் கழகமும்
- சென்னையில் மேலும் ஓர் அண்ணா தொழிற்நுட்ப பல்கலைக் கழகம்
- சென்னையில் ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம்
- மத்திய அரசின் சார்பில் சென்னையில் கடல்சார் பல்கலைக் கழகம்
- திருவாரூரில் மத்திய பல்கலைக் கழகமும்
- திருச்சியிலும் கோவையிலும் பல்கலைக் கழகங்களுக்கு நிகரான மத்திய கல்வி நிலையங்கள்.
- MGR மருத்துவ பல்கலைக்கழகம் நிறுவியது கலைஞர்

**உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு**

ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் 1990ஆம் ஆண்டு இறுதியில் திமுக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பின்னர், கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதன் பின்னர் நடைபெற்ற ஐந்தாண்டு கால அதிமுக ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த அந்த ஆட்சியினர் முன்வரவே இல்லை. 1996ஆம் ஆண்டு, திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பக்கம் 6இல், "அடுத்து அமைக்கப்படும் திமுக அரசு, புதிய சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடரிலேயே உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் தேதிகளை அறிவிக்கும் என்று உறுதி கூறுவதோடு, அது வெறும் அறிவிப்பாக இருந்து விடாமல், நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற உறுதியை அளிக்கிறோம்" என்றும்

குறிப்பிட்டிருந்தோம்.

அவ்வாறு அறிவித்ததற்கிணங்க 96ஆம் ஆண்டு அக்டோபர் 9 மற்றும் 12 தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையர் மூலமாக அறிவிப்பு செய்யப்பட்டது. இதற்கான வேட்பு மனு செப்டம்பர் 3ந்தேதி முதல் 10ந்தேதி வரை தாக்கல் செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. தேர்தல் ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு முறையில் நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 6 மாநகராட்சிகள், 104 நகராட்சிகள், 635 பேரூராட்சிகள், 12,584 ஊராட்சிகள் ஆகியவற்றுக்கு 96ஆம் ஆண்டு அக்டோபரில் 9 மற்றும் 12ஆம் தேதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடத்துவதென்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் முக்கியமான அம்சம் என்னவென்றால் தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல்களில் முதல் முறையாக பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டதுதான். மொத்தமுள்ள ஆறு மாநகராட்சிகளில் திருச்சி மாநகராட்சி மேயர் பதவி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. திருநெல்வேலி மாநகராட்சி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது.

மொத்தம் 474 மாநகராட்சி வார்டுகளில் பெண்களுக்கு 161 என்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 35 என்றும் - மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பதவிகள் மொத்தம் 28இல் பெண்களுக்கு 10 என்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 4 என்றும் - மாவட்டப் பஞ்சாயத்து வார்டுகள் பதவிகள் மொத்தம் 649இல் பெண்களுக்கு 242 என்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 97 என்றும் - நகராட்சித் தலைவர்கள் பதவிகள் மொத்தம் 106இல் பெண்களுக்கு 35 என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 6 என்றும் இப்படியே ஒவ்வொரு பதவியிலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் என்ற அளவிற்கு

தொகுதிகள் பிரிக்கப்பட்டன. உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் முதல் பட்டியல் 8-9-1996 அன்று வெளியிடப்பட்டது.

சென்னை மாநகர மேயர் பதவிக்கு மு.க.ஸ்டாலின், மதுரை மாநகர மேயர் பதவிக்கு பெ.குழந்தைவேலு, சேலம் மாநகர மேயர் பதவிக்கு டாக்டர் சூடாமணி ஆகியோர் பெயர்கள் முதல் பட்டியலிலேயே வெளியிடப்பட்டன. அதிமுக சார்பில் சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கு ஜெயக்குமாரும், மதுரை மாநகராட்சிக்கு காளிமுத்துவும் நிறுத்தப்படலாம் என்று ஏடுகளில் எல்லாம் செய்திகள் வந்தன. அதைத் தொடர்ந்து 9-9-1996 அன்று சென்னை மாநகர மேயர் பதவிக்கு திமுக சார்பில் மு.க. ஸ்டாலினும், அதிமுக சார்பில் ஜெயக்குமாரும் மாநகராட்சி ஆணையரிடம் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். சென்னை மேயர் பதவிக்கு தமிழக ஜனதா கட்சித் தலைவராக அப்போதிருந்த சந்திரலேகாவும், மதிமுக சார்பில் எஸ்.எஸ். சந்திரனும் வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தனர். ஆனால் இரண்டொரு நாட்களிலேயே அதிமுக திடீரென ஒரு முடிவினை எடுத்தது. சென்னை மேயர் தேர்தலில் திமுக வேட்பாளர் ஸ்டாலினை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, மேயர் தேர்தலில் தனது வேட்பாளராக ஜெயக்குமாரை அறிவித்து, வேட்பு மனுவையும் தாக்கல் செய்த பிறகு, அதிமுக வேட்பாளர் சென்னை மாநகர மேயர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும், ஜனதா கட்சி வேட்பாளர் சந்திரலேகாவை அதிமுக ஆதரிக்கும் என்றும் இரண்டு கட்சிகளும் இணைந்து ஸ்டாலினை எதிர்த்தால் சுலபமாக வெற்றி பெற்று விடலாம் என்றும் திட்டமிட்டு அறிவித்தார்கள். தாங்கள் போட்டியிலிருந்து விலகியது மாத்திரமல்லாமல், திமுகவைத் தவிர்த்த ஏனைய கட்சிகளும் போட்டியிலிருந்து விலகிக் கொண்டு ஜனதா வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்றும், திமுக வேட்பாளரைத் தோற்கடிக்க வேண்டுமென்றும் ஜெயலலிதா அறிக்கை விடுத்தார்.

சந்திரலேகா மீது திராவகம் வீசியவர் ஜெயலலிதாதான் என்று வழக்கு தொடர்ந்த சுப்பிரமணியன் சுவாமி, தனது வேட்பாளருக்கு ஜெயலலிதா ஆதரவு தருகிறார் என்றதும் அதனை ஏற்றுக் கொண்ட விசித்திரத்தை அப்போது தமிழ்நாடு கண்டது. சென்னை மேயர் தேர்தலில் பிரச்சாரம் மிகவும் கடுமையாக இருந்தது. எதிர்க்கட்சிகள் எல்லாம் இணைந்து எப்படியாவது ஸ்டாலினைத் தோற்கடிக்க வேண்டுமென்ற வெறியோடு பணியாற்றிய போதிலும், ஸ்டாலினைப் பொறுத்தவரையில் கடுமையாக உழைத்தார். ஒவ்வொரு நாளும் மக்களை நேரில் சென்று சந்தித்து வாக்கு கேட்பதிலேயே குறியாக இருந்தார். சென்னை மேயர் தேர்தல் நடைபெற்று இருபதாண்டுகளுக்குப் பின்னர் அந்தத் தேர்தல் நடைபெற்றதால் பிரச்சாரம் மிகவும் பரபரப்பாக இருந்தது. மேலும் முதல் முறையாக மேயரை வாக்காளர்களே நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கின்ற முறை அப்போதுதான் நடைபெற்றது. ஸ்டாலின் மேயர் தேர்தலில் போட்டியிடுவது பற்றி பத்திரிகையாளர் சோ தனது துக்ளக் இதழில் " சென்னை மேயர் தேர்தலில் உங்கள் ஓட்டு யாருக்கு? ஏன்?" என்ற கேள்விக்கு பதில் அளித்த போது, "ஸ்டாலினுக்கு. அவருக்கு எதிராக நிற்பவர்களின் அணுகுமுறைகளைப் பார்க்கும்போது இருப்பதற்குள் நல்ல வேட்பாளர் ஸ்டாலின்தான் என்ற முடிவுக்கு நான் வருகிறேன். அவர், கருணாநிதியால் திணிக்கப்படுவதாகவும் நான் நினைக்கவில்லை.

இருபதாண்டுகளாக அரசியலில் இருக்கிறார். கட்சியில் பொறுப்புகளை வகித்திருக்கிறார். இருமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இப்போதும்கூட மக்கள் ஆதரவிருந்தால்தான் அவர் மேயராக முடியும். ஆகையால் இதில் திணிப்பு என்ற பேச்சுக்கே இடமிருப்பதாக நான் நினைக்கவில்லை. தன்னுடைய தொகுதியில் அவருக்கு நல்ல பெயரே இருக்கிறது. மேயர் தேர்தலில் என் ஓட்டு அவருக்கே" என்று சோ எழுதியிருந்தார்.

14-10-1996 அன்று உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் எண்ணி அறிவிக்கப்பட்டன. திமுக, தமாகா கூட்டணியே மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது.

மாநகராட்சி கவுன்சிலர்கள் தேர்தலைப் பொறுத்த வரையில் சென்னையில் மொத்தம் 155 இடங்களில், திமுக, தமாகா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி 150 இடங்களிலும், அதிமுக 2 இடத்திலும், சுயேச்சைகள் 3 இடத்திலும் வெற்றி பெற்றார்கள். ஏனைய மாநகராட்சிகளிலும் இதே போன்ற நிலைமை தான். அதுபோலவே தமிழகத்தில் தேர்தல் நடைபெற்ற 102 நகராட்சிகளில் திமுக 48 இடங்களிலும், தமாகா 28 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களிலும் கூட்டணி சார்பில் வெற்றி பெற்றன. திருநெல்வேலியில் மேயராக திமுக வேட்பாளர் உமா மகேசுவரியும் - சேலத்தில் மேயராக திமுக வேட்பாளர் டாக்டர் சூடாமணியும், கோவையில் மேயராக தமாகா வேட்பாளர் கோபாலகிருஷ்ணனும், திருச்சியில் மேயராக தமாகா வேட்பாளர் புனிதவள்ளியும் வெற்றி பெற்றார்கள். தமிழகத்தில் மொத்தம் உள்ள ஆறு மாநகராட்சிகளிலும் திமுக, தமாகா கூட்டணியின் வேட்பாளர்களே மேயர் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றனர். சென்னை மாநகராட்சி திமுகவின் பொறுப்பிலே இருந்த போதுதான், 1973ஆம் ஆண்டு முதல்வராக இருந்த நானே அதனைக் கலைப்பதாக பேரவையிலே அறிவித்தேன். அதே மாநகராட்சிக்கு 23 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் திமுக வெற்றி பெற்று மேயர் பொறுப்பையேற்றது. தாய்மார்களுக்கு முதன் முதலாக உள்ளாட்சிகளில் 33 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யப்பட்டது 1996ஆம் ஆண்டு திமுக ஆட்சியிலேதான். அதன் காரணமாக தமிழகம் முழுவதிலும் 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் பதவி வகித்திடும் நிலை உருவானது. 1989இல் இந்தியாவிலேயே முதல் முறையாக அரசுப் பணிகளில், வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு

இடஒதுக்கீடு வழங்கும் திட்டம் திமுக ஆட்சியில்தான் நடைமுறைப் படுத்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கான பெண்கள் அரசு வேலை வாய்ப்புகள் பெற வழிவகுக்கப்பட்டது.

1990இல் திமுக ஆட்சியிலேதான் இந்தியாவிலேயே முதல்முறையாக பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கி, தனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. சலுகைகள் வழங்கிடும் நலத்திட்ட உதவிகளில் பெண்களுக்கு முன்னுரிமை தரும் பல திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய திமுக ஆட்சியிலேதான், பெண்ணுரிமையைப் பறைசாற்றும் வகையில் இட ஒதுக்கீடு நிர்ணயம் செய்து, நிர்வாகத்திலும், உள்ளாட்சி மன்றப் பதவிகளிலும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுப் பெண்ணின் பெருமை போற்றப் பட்டது.

**கலைஞர் ‘சமத்துவபுரம்’ திட்டம் தொலைநோக்கு பார்வை கொண்டது**

புரட்சியாளர் அம்பேத்கர் வெளிநாட்டில் சென்று படிப்பதற்காக பரோடா மன்னர் சாயாஜிராவ் அவர்களிடம் உதவி பெற செல்கிறார். மன்னர் அம்பேத்கர் அவர்களிடம் கேட்கிறார். நீ என்ன கேட்க விருப்பப்படுகிறாய், நான் சமூகவியல், பொருளாதாரம், மற்றும் பொது நிதி பற்றி படிக்கப் போகிறேன் என்றார். இந்த படிப்பை பயின்று என்ன செய்யப் போகிறாய் என்று மன்னர் கேட்டார். என்னுடைய படிப்பை என் சமுதாயத்தை, அவர்களின் மோசமான நிலையில் இருந்து மேம்படுத்தவும், அவர்களுக்கு வழி காட்டுவதற்கும், மேலும் சமுதாயத்தை சீர்படுத்த பயன்படுத்துவேன் என்றார். மன்னரிடம் கல்வி உதவிக் கேட்டு படிக்க சென்ற அம்பேத்கர் தன் நலனுக்காக பயன்படுத்தாமல் சமுதாயத்தை இப்போதைய நிலையில் இருந்து உயர்த்த முடியுமா என்பதை யோசித்து பயன்படுத்தினார்.

இதை நான் கலைஞருடன் பொருத்திப் பார்க்கிறேன், 14 வயது சிறுவன் ஆன கலைஞர், இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட போது, தங்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்றி விடுவார்களோ என்ற கோபம் கலைஞருக்கு இருந்தது. அந்த கோபம் தான் பின்னாளில் மாநில சுயாட்சியாக உருவானது. அரசியலைப் பற்றி பிஸ்பார்க் என்பவர் சொல்வார், "Art of Possible" அதுதான் அரசியல் என்று இத்தாலியைச் சேர்ந்த பிஸ்மார்க் சொல்வார். சில மாற்றங்களை, கருத்துருவாக்கங்களை செய்ய வேண்டிய தேவை இருக்கும். அது இயக்கங்களுக்கு இல்லாத சிக்கல் தேர்தல் அரசியலில் இருக்கும் கட்சிகளுக்கு இருக்கிறது. ஆனால் அதை மாற்றியிருக்கிறார்கள், அண்ணா மாநிலங்களவையில் உரையாற்றுகிற போது "நாங்கள் தமிழ்நாடு கோரிக்கையை கைவிட்டு விடுகிறோம், ஆனால் காரணங்கள் அப்படியே தான் இருக்கிறது" சொன்னார். காரணங்கள் அப்படியே இருக்கும் வரை கோரிக்கைகள் வரத்தானே செய்யும். எனவே அதற்கு மாற்றாக தான் அண்ணா இந்த கோரிக்கையை வைத்தார், கலைஞர் அதை வளர்த்தெடுத்தார்.

மாநிலங்கள் உரிமை என்று வருகிறபோது ஆண்டு தோறும் அரசு சார்பாக இரண்டு இடங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெறும். செங்கோட்டையில் குடியரசு நாளன்று குடியரசுத் தலைவரும், விடுதலை நாள் அன்று பிரதமரும் கொடியேற்றுவார்கள். உடனே கலைஞர் செங்கோட்டையில் குடியரசு நாளில் குடியரசுத் தலைவரும், விடுதலை நாளில் பிரதமரும் கொடியேற்றுகிறார்கள், ஆனால் மாநிலங்களில் மட்டும் இந்த இரண்டு நாட்களிலும் ஆளுநர்கள் மட்டுமே ஏன்? கொடியேற்றுகிறார்கள் என்று கேட்டார். அதன் பிறகு தான் இந்த முறை மாற்றப்பட்டது. விடுதலை நாளில் மாநில முதல்வர்கள் கொடியேற்றலாம் என்ற உரிமையை பெற்றுத் தந்தவர் கலைஞர்.

கலைஞர் தேசிய வளர்ச்சி குழு கூடிய போது ஒரு கோரிக்கையை வைத்தார். மாநில சுயாட்சி குறித்து பேசினார், குழுவை அமைத்தார், அறிக்கையை சமர்ப்பித்தார். இவையெல்லாம் யாரும் செய்யாத ஒன்று. நீதிபதி பி.வி.இராஜமன்னார் தலைமையில் குழுவை அமைத்து, அதில் கல்வியாளராக இருந்த லட்சுமண சாமி முதலியார், சந்திரா ரெட்டி ஆகியோரை உறுப்பினர்களாக நியமித்து அவர்கள் வகுத்த கொள்கையை ஒன்றிய அரசிற்கு அனுப்பி வைத்தார். மாநிலங்களவைக்கு என்ன பொருள்? மாநிலங்கள் தங்கள் கருத்துக்களை சொல்வதற்கான ஒரு இடம். அங்கு சிறிய மாநிலத்திற்கு ஒரு இடம், பெரிய மாநிலங்களுக்கு 10 இடம் என்றால் அங்கே நாங்கள் என்ன கருத்து சொல்லி வெற்றி பெறப் போகிறோம். எல்லா மாநிலங்களுக்கும் சம எண்ணிக்கையில் மாநிலங்களவை உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இதை கலைஞர் கோரிக்கையாக வைத்த போது பல்வேறு மாநில முதல்வர்கள் இந்த கருத்தை ஆதரித்து பேசத் தொடங்கினார்.

அம்பேத்கர் இறுக்கமான மத்திய அரசு என்று உரையாற்றினார். முதன் முதலில் அரசியலமைப்பு அவையில் அம்பேத்கர் பேசும் போது வலுவான ஒரு மத்திய அரசு வேண்டும் என்று தான் பேசினார். பின்னர் தன் கருத்தை மாற்றிக் கொண்டார். பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் சிறு சிறு வேறுபாடு உண்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, பட்டியல் இன மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுங்கள், அதுவும் ஊருக்குள் கட்டிக் கொடுங்கள் என்று பெரியார் சொன்னார். சிறிய இடமாக இருந்தாலும் அடுக்குமாடிகளாக கட்டிக் கொடுங்கள் என்றார். ஆனால் அம்பேத்கர், எங்களுக்கு தனியாக வீடு கட்டிக் கொடுங்கள், நாங்கள் ஒரே இடத்தில் குவிந்திருந்தால்தான் பாதுகாப்பாக இருப்போம் என்று தனது பார்வையில் பேசினார்.

கலைஞர் சமத்துவபுரங்களைக் கட்டினார். பெரியார், அம்பேத்கர் ஆகிய இரு தலைவர்களின் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு ஊருக்குள் கட்டி, 40 விழுக்காடு இடங்களை பட்டியலின மக்களுக்கு ஒதுக்கினார் கலைஞர். இதை எளிதாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது, இந்த சமத்துவபுரங்கள் காலப்போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தும். இது எதிர்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை குறித்து 50 ஆண்டுகள் கழித்து வரலாற்று ஆய்வாளர்கள் எழுதக்கூடும்.

**சமத்துவ நாயகன்**

கலைஞர் அவர்களின் சமூக நீதிக்கான பங்களிப்பின் சான்று – சமத்துவபுரம் திட்டம் . கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சியில் சாதனைகளாக பல திட்டங்கள் தொடர்ந்து செயல்படப்பட்டிருந்தாலும் சமத்துவபுரம் உருவாக்குவதற்கான காரணங்கள், கலைஞர் அவர்களின் மதிநுட்பத்துக்கும், நிர்வாகத்திறனுக்கும், தொலைநோக்கப் பார்வைக்கும் , பற்றி எரியும் ஒரு பிரச்சனையை ஒரு அரசு எப்படி அணுகி தீர்வு தந்தது என்பதை நாம் அறிந்துகொள்ள வாய்ப்பாகவும் இருக்கிறது. சமூக நீதிக்கான போராளியாகவே ஆட்சியில் இருந்தபோதும் இல்லாத போதும் அவர் இருந்திருக்கிறார். கொள்கைகளில் எந்த அளவுக்கு அவர் உறுதியாக இருந்தார் என்பதற்கு முன்னுதாரணமாய் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் உள்ளது.சாதி பிரிவினை காலங்காலமாக இருந்து, அக்ரகாரம், ஊர், சேரி, ஒவ்வொரு சாதிக்குமான தெருக்கள் என கிராமங்கள் இருப்பிட வாரியாக பிரிந்து கிடக்கையில் இந்தியாவில் எந்தத் தலைவரும் யோசனைக்கூட செய்யாத திட்டமாக அனைவரும் ஓரிடத்தில் வாழ சமத்துவபுரத்தை முன்வைக்கிறார் கலைஞர். அதுவும் எப்போது? தென் மாவட்டங்களில் சாதி கலவரங்கள் கொழுந்து விட்டு எரியும் சமயத்தில் அதற்கு தீர்வாக வைக்கிறார். அவர் வைத்த தீர்வு

இருநூறுக்கும் மேலான சமத்துவபுரங்களாய், சமூக நீதிக்கும், சாதி ஒழிப்பிற்குமான கலைஞர் அவர்களின் அர்ப் பணிப்பை பறைசாற்றும் விதமாக இன்றளவும் இருக்கிறது. இந்த திட்டம் உருவான போது இருந்த கள நிலவரத்தை விரிவாக பார்ப்பது, எந்த சூழ்நிலை யிலும் சமூக நீதி என்பதில் இருந்து கலைஞர் பின்வாங்கவில்லை என்பதை உணர்வதற்கு எளிதாக இருக்கும். 1967 திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்தபின் மெட்ராஸ் என்பது தமிழ்நாடாக பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. பின் தமிழர், அவர்தம் வரலாறு இதனை தொடர்ந்து வலியுறுத்த எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முழக்கத்துடன் கழக ஆட்சி பல்வேறு பெயர் மாற்றங்களை முன்னெடுக்கிறது, சேர, சோழ, பாண்டிய போக்குவரத்துக் கழகங்கள் என்று பேருந்துகள் மன்னர் பெயர்களில் போக்குவரத்துக்கழகங்கள் என்று மாறியதை உதாரணமாய் சொல்லலாம். பின் 1977 இல் எம்ஜிஆர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அதிமுகவின் ஆட்சியில் தமிழர் அடையாள பெயர்கள் என்றிலிருந்து தலைவர்களின் பெயர்களாக, பல்கலைக்கழகங்கள், மாவட்டங்கள் மாறுகின்றன. திண்டுக்கல் அண்ணா மாவட்டமாகவும், ஈரோடு பெரியார் மாவட்டமாகவும், திருச்சி, கோவை பல்கலைக்கழகங்கள், பாரதிதாசன், பாரதியார் என உருமாறி பெயர் மாற்றம் தொடர்கிறது.

தலைவர்கள் பெயர்களில் இருந்து தனிமனிதர் பெயராக எம்ஜிஆர் அவர்களின் அம்மா சத்யா பெயரில் போக்கு வரத்துக்கு கழகம் தொடங்க முன்னெடுப்புகள் நடக்கும்போது இது விமர்சனங்களுக்கு உள்ளாகிறது. பின் இந்த பெயர் மாற்றங்கள் எதற்காக தொடங்கின என்பதில் இருந்து விலகி, மாற்றம் பெற்று சாதி பெயர்களாக, வோட்டு அரசியிலை குறி வைத்து மாறுகிறது, ஜெயலலிதா அவர்களின் தலைமையில் நடைபெற்ற அதிமுகவின் ஆட்சியில், திருச்சி பிரிக்கப்பட்டு முத்தரையர் மாவட்ட மாகவும், விழுப்புரம் ராமசாமி

படையாச்சி யாகவும் பெயர் மாற்றம் கொள்கிறது. பின் அந்த போக்கு , பேருந்துகளுக்கும் வந்து அழகு முத்து கோண் போக்குவரத்துக்கழகம் தொடங்கப்படுகிறது . இப்படிப் போகையில் சுந்தரலிங்கம் போக்குவரத்து கழகத்தை ஜெயலலிதா அறிவிக்கிறார். அப்போது தேர்தல் நேரம் அவரால் அதனை அறிவிப்பாக செய்ய முடிந்ததே தவிர செயல்படுத்த முடியவில்லை. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, கலைஞர் அவர்கள் ஆட்சியில் அமர, ஏற்கனவே அறிவித்த இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்து கிறார். வெடிக்கிறது தென் மாவட்டங்களில் கலவரம், மாற்றுச் சாதி அதுவும் தான் கீழாக நோக்கும் சாதி, அந்த சாதியை சேர்ந்த ஒருவரின் பெயரில் இருக்கும் பேருந்துகளுக்கு நான் போவதா என்ற எரியூட்டப்பட்ட ஆதிக்க வெறி பேருந்துகளை எரிக்க வைக்கிறது. சாதி கலவரங்கள் தேனீ, விழுப்புரம் மாவட்டங்களில் பரவுகிறது, இந்த நிலையில் கலவரத்தில் ஈடுபட்ட இரு தரப்பு சாதிகள், பிரச்சனையை மேலும் பெரிதாக்கும் வண்ணம் இமானுவேல் போக்குவரத்து கழகம், புலித்தேவன் போக்குவரத்துக்கழகம் வேண்டும் என்று அரசை நிர்பந்திக்கின்றன. இந்த சிக்கலான சூழ்நிலையில் இதனை முடிவுக்கு கொண்டுவர, மதிநுட்பத்துடன், கலைஞர் ஒரே நாளில் பத்தொன்பது மாவட்டங்களின் பெயர்களையும், இருபத்தி ஒன்று போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களையும் அதிரடியாக சாதி அடையாளம், கட்சி அடையாளம் இல்லாமல் மாற்றுகிறார். இதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பினாலும் அவரின் உறுதியில் இருந்து பின் வாங்கவில்லை. கலவரம் முடிவுக்கு வருகிறது, பிரச்சனை முடிந்தது என்று அப்படியே விட்டு இருந்தால் இது ஒரு சம்பவமாகத்தான் இருக்கும், ஆனால் ஒரு சம்பவத்தை வரலாறாக மாற்ற கலைஞரை போன்ற தலைவர்களால் தான் முடியும். கலவரம் அடங்கினாலும், பதட்டத்தை தணிக்கவும், சாதி போக்கு ஒழியவும், கலைஞர் அவர்கள் முன் வைத்த மகத்தான திட்டம்தான் சமதுவப்புரம்

. அவர் இந்த திட்டத்தை முன்வைத்தபோது அவரைத் தவிர அனைவராலும் காகிதத்தில் நன்றாக உள்ளது, ஆனால் நடைமுறை சாத்தியம் இல்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

ஓரே ஆண்டில் அதற்கு செயல் வடிவம் கொடுத்தார் கலைஞர். ஏனோதானோ என்று அவசரகதி யில் இவர் இந்த திட்டத்தை முன்வைக்கவில்லை, எவ்வளவு விரிவாக திட்டம் தீட்டியிருக்கிறார் என்று பார்த்தால் வியப்பாக உள்ளது. இந்த திட்டத்தின் பெயரையே பார்ப்போம் – சாதி பிரிவினையே ஒழிக்க வேண்டும் என்பது இந்த திட்டத்தின் நோக்கம், இதற்கு சாதி ஒழிப்பிற்காக தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட பெரியாரை நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்பதால் திட்டத்தின் பெயர் “பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் “சமதுவப்புரத்தில் 1. அனைத்து சாதிகளுக்கும் சமஉரிமை2. அனைவரும், விழாக்களையும், திருமணங்களையும் நடத்துவதற்கு ஒரே மண்டபம்.3 . அனைத்து சாதிக்கும் ஒரு மயானம்தான்.4. சாதித்தலைவர்களின் சிலைகள் கூடாது5. ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள் இருக்கும் .அந்த நூறு வீடுகளுக்கும் வரைமுறையும் வகுத்துள்ளார்6. 40% தலித்துகளுக்கு 7. 25% பிற்படுத்தப்பட்டோருக்கு 8. 25% மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 9. 10 % மற்றவர்க்கு இந்த விதிகளை மீறுபவர்களுக்கு , சமத்துவபுரத்தில் இடம் கிடையாது , வெளியேற வேண்டும். இதில் அதற்கும் மேல் என்னும் சொல்லும்படியாக இன்னொரு விதியையும் வைத்திருக்கிறார் , அதுதான் மாற்று திறனாளிகளுக்கு மூன்று சதவீத உள் ஒதுக்கீடு , இத்தனை விரிவாக ஒரு திட்டத்தை எந்த தலைவரும் மக்களுக்காக செய்தார்களா என்பது சந்தேகமே . 145 சமத்துவபுரங்கள் 1997 முதல் 2001 வரையிலான கலைஞரின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டன. தேர்தல் வர ஆட்சி மாறுகிறது , ஜெயலலிதா இந்த திட்டத்தை முடக்குகிறார். இதில் நாம் கவனிக்கவேண்டிய

அம்சம், தோழர் ஆளூர் ஷா நவாஸ் அவர்கள் முன்வைக்கும் கோணம், கலைஞர் அறிவித்த அனைத்து திட்டங்களையும் ஜெயலலிதா அவர்கள் முடக்கவில்லை, அவர் தினமும் சென்று வந்த பாலம் கலைஞர் கட்டியதுதான் அதனை அவர் முடக்கவில்லை,

எந்த எந்த திட்டங்களை முடக்குகிறார்? சமத்துவ புரத்தை, சமச்சீர்கல்வியை, அண்ணா நூலகத்தை முடக்குகிறார். எங்கெல்லாம் சமூக நீதிக்கென திட்டம் வகுக்கப்பட்டதோ, அந்த திட்டங்களை அவர் முடக்கியிருக்கிறார். இந்தப் போக்கினை இனப்பகையின் நீட்சியாகவே நாம் காண வேண்டும். அவர் தொடங்கியதை இவர் எதிர்த்தார் என்று நாம் இதனை காண இயலாது, பின் 2008 ஆட்சிக்கு வந்த கலைஞர் சமத்துவபுரத்தை மீண்டும் முன்னெடுக்கிறார். 95 சமத்துவப் புரங்கள் தொடங்கப்படும் என்றும் அறிவிக் கிறார். ஏன் குறிப்பாக 95 ? பெரியாரின் பெயரை திட்டத்திற்கு வைத்த கலைஞர் , பெரியார் வாழ்ந்த ஆண்டுகளான 95 ஐ நினைவுப்படுத்தும் வண்ணம் 95 சமத்துவப்புரங்களை அறிவித்து, அறிவித்த தோடு நில்லாமல் தனது ஆட்சி காலத்தில் அமைத்தும் வைக்கிறார்.கலைஞர் இந்த திட்டத்தை தொடங்கி வைத்து சொன்னது , “இந்த சமத்துவபுரங்கள், தமிழ்நாட்டை ஒரு பெரிய சமத்துவபுரமாக மாற்றும் , நாடு முழுவதும் மாற்றம் உண்டாக இது முன்னோடியாக இருக்கும்“. அவரின் கனவு நினைவாவதற்கு நடைமுறை சிக்கல்கள் உள்ளன , ஏனெனில் இன்றும் பரவலாக மனிதர் நெருங்கினாலும், மனம் நெருங்காமல் இருக்கிறது. மனங்களை நெருங்க வைக்க திராவிடக் கொள்கை பெரியார் , அண்ணா , கலைஞர் வழியில் சமத்துவத்துக்கும் , சமூகநீதிக்கும் தொடர்ந்து பயணிக்கும்.

**அலை பூங்கா (Tidel park)**

**எல்காட் முதல் டைடல் பார்க் வரை**

கலைஞர் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துவதற்காக எல்காட் நிறுவனத்தை நிறுவினார். டைடல் பார்க் போன்ற தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. தகவல் தொழில்நுட்பக் கல்வி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களை நிறுவுதல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தினார்.

**டைடல் பார்க்**

சென்னையில் டைடல் பூங்காவை கலைஞர் 2000 ஆம் ஆண்டு நிறுவினார். ஐபிஎம், இன்ஃபோசிஸ் மற்றும் டிசிஎஸ் போன்ற தொழில்துறை ஜாம்பவான்களை ஈர்த்தது. இது, ஒரு முக்கிய தகவல் தொழில்நுட்ப இடமாக சென்னை உருவாவதற்கும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் பங்களித்தது.

**தகவல் தொழில் நுட்பத்துக்கு தனித்துறை**

கலைஞர் இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னோடியாகப் பங்காற்றினார். சென்னையில் தகவல் தொழில்நுட்பத்துக்கான தனித் துறையை உருவாக்கி, நாட்டிலேயே முதல் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கினார். இந்தியாவிலேயே ஐடி வளர்ச்சிக்காக தனிக் கொள்கையை அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடு.

பெண்கள் பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெருக்கிடும் வகையில் திமுக ஆட்சியில் 1990-ம் ஆண்டிலிருந்து அரசு பதவிகளில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு வழங்கி கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

பள்ளிகளில் இரண்டாம் வகுப்பு வரை முற்றிலும் பெண்கள் ஆசிரியையாக நியமிக்க வேண்டும், என 1997-ல் கலைஞர் ஆணையிட்டார்.

1973 முதல் இந்தியாவிலேயே முதன்முறையாக கலைஞர் ஆட்சியில் தான் காவல்துறையில் மகளிரை பணிநியமனம் செய்யும்முறை அமுல்படுத்தப்பட்டது.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் தான் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கி கலைஞர் ஆணையிட்டார்.

உள்ளாட்சி அமைப்புகளில் தமிழகத்தில் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கியது போல பாராளுமன்றத்திலும் மற்ற மாநிலங்களிலும் அமுல்படுத்தலாம். என கலைஞர் ஆலோசனை கூறினார்.

சுயமரியாதை சுடர் தந்தை பெரியார் அவர்கள் 1929-ம் ஆண்டு செங்கல்பட்டு மாநாட்டில் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு அளிக்க வேண்டும் என்று இந்தியாவிலேயே முதன்முதலில் தீர்மானம் நிறைவேற்றினார். என்பதை கருத்தில் கொண்டு 60 ஆண்டுகளுக்குப் பிறகு 1990-ல் பெண்களுக்குப் பரம்பரை சொத்தில் சம உரிமை அளித்திடும் சொத்துரிமை சட்டம் வழங்கி சரித்திரம் படைத்தார்.

திமுக ஆட்சியில் 1989-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணி பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ளவும், வேலைக்குச் செல்ல முடியாமல் அதனால் ஏற்படும் வருவாய் இழப்பினை சரிகட்டவும் முடியாமல், அதனால் ஏற்படும் வருவாய் இழப்பினை சரிகட்டவும் கர்ப்பிணி பெண்களுக்கு 6000 ரூபாய் உதவி வழங்கப்பட்டது. கலைஞர் ஆட்சியில் மட்டும் 25 லட்சத்து 76 ஆயிரத்து 612 ஏழை மகளிர்க்கு மொத்தம் 1389 கோடியே 42 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. இதுதான் இப்போது 2011

அதிமுக ஆட்சியில் 12,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதற்கும் தலைவர் கலைஞர்தான் உந்துசக்தி என்பதை மறந்துவிட முடியாது.

**ஏழைப் பெண்களுக்கு திருமண நிதிஉதவி திட்டங்கள்**

கழக ஆட்சியில் 1990-ம் ஆண்டு 8-ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியாக ரூ.5000/- வழங்கும் திருமண நிதி உதவி திட்டம் தொடங்கப்பட்டது.

பின்னர் 1996-ம் ஆண்டு முதல் 10வது படித்த ஏழைப் பெண்களுக்கும் வழங்கலாம் என திட்டத்தை நீட்டித்து திருமண நிதி உதவியையும் ரூ.5000/-லிருந்து ரூ.10000/-ஆக உயர்த்தி கலைஞர் ஆணையிட்டார். இந்த திருமண நிதி உதவிதான் 2006 முதல் 15000 ரூபாய் என்றும், 2010 முதல் 20000 ரூபாய் என்றும் கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மகளிர் மறுமண நிதி உதவி திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதி உதவி திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவி திட்டம், ஈ.வெ.ரா மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவி திட்டம், இவைகளின் மூலம் இலட்சக்கணக்கான ஏழை மகளிர் கலைஞர் ஆட்சியில் பயனடைந்தனர்.

இந்த திருமண நிதி உதவியை 2011 அதிமுக ஆட்சியில் 25000 ஆக உயர்த்தப்பட்டது. இதற்கு முதன்முதலாக உந்து சக்தியாக விளங்கியவர் தலைவர் கலைஞர் அவர்களே.

விதவைப் பெண்களுக்கும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும் முதியோர் உதவி திட்டத்தின் கீழ் உதவி தொகை வழங்கி 1988-ல்ஆணையிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் 12940 ஏழைப் பெண்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது.

கலைஞர் ஆட்சியில் அனைத்து ஆரம்ப சுகாதாரநிலையங்களிலும் கூடுதல் மருத்துவர்கள்/செவிலியர்கள் நியமிக்கப்பட்டு கிராமப்புற மகளிர்க்கு 24 மணி நேர மருத்துவ சேவை அளிக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள பெற்றோரில் எவரேனும் ஒருவர் 35 வயதுக்கு முன்னதாக குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால் குழந்தை பெயரில் 22,000 ரூபாய் வைப்புத் தொகையும், இரு பெண் குழந்தைகள் உள்ளவர்களுக்கு ஒவ்வொரு குழந்தை பெயரில் 15000 ரூபாய் வைப்புத் தொகையும் கழக அரசியல் வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் சிசுக் கொலையை அறவே ஒழிக்கும் நோக்கில் தொட்டில் குழந்தை திட்டம் முதன் முதலாக கலைஞர் ஆட்சியில்தான் கொண்ட வரப்பட்டது.

கைவிடப்பட்ட ஆதரவற்ற அனாதை குழந்தைகளை தத்தெடுத்து பராமரிக்கும் திட்டத்தையும் கலைஞர் அரசுதான் கொண்டு வந்தது.

2006 திமுக ஆட்சியில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச தரிசு நிலங்கள் வழங்குவதென முடிவு செய்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் அந்த நிலங்களை அந்தந்த குடும்பத்தின் பெண்கள் பெயரில் வழங்கி பெண்களுக்கு குடும்பத்தில் ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்திச் கொடுத்தார்.

1998 மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தை அறிமுகப்டுத்தி அதன் மூலம் பூ விற்கும் மகளிர், காய்கறி விற்கும் மகளிர் உள்பட பல்வேறு சிறு வணிகங்களில் ஈடுபட்ட ஏழை மகளிரின் பொருளாதார நலன்களை கழக ஆட்சி மேம்படுத்தியது.

கலைஞர் ஆட்சியில் திருக்கோவில்களில் அறங்காவலர்கள் குழுவில் மகளிர் ஒருவர் கட்டாயம் இடம்பெற வேண்டும். என சட்டம் கொண்டு வரப்பட்டது.

கலைஞர் ஆட்சியில் பெண்களே நடத்தும் நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டன.

கழக ஆட்சியில் அரசின் தொழில் மனைகள் ஒதுக்கீட்டில் பெண்கள் 10 விழுக்காடு மனைகளை ஒதுக்கிட வகை செய்து பெண்களை தொழில் முனைவோராக்கிட ஊக்கம் தரப்பட்டது.

**மகளிர் சுயஉதவிக் குழுக்கள்**

பெண்கள் தன்னம்பிக்கையுடனும் சுயமரியாதையுடனும் சொந்தக் காலில் நிற்க வேண்டும். என்பதற்காக 1989-ம் ஆண்டு கலைஞர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் ஆதகம்பாடி எனும் ஊருக்கருகில் உள்ள காட்டுக் கொட்டகை எனுமிடத்தில் மாரியம்மன் மகளிர் மன்றம் எனும் பெயரில் குப்பம்மாள் என்பவர் தலைவராகவும், ஜெயலட்சுமி துணைத் தலைவராகவும் கொண்ட மகளிர் சுய உதவிக் குழு ஒன்றை முதன் முதலாக 23.7.1990 அன்று தொடங்கி வைத்தார் என்பது வரலாறு.

கழக ஆட்சியில் 1997-98-ல் 14 மாவட்டங்களிலும், 98.99-ல் 7மாவட்டங்களிலும் 1999-2000-ல் 7 மாவட்டங்களிலும், என சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் செயல்படத் தொடங்கி 31.12.2010 வரை 75,66,497 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு 488970 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன இவர்களின் மொத்த சேமிப்பு 2698 கோடி ரூபாய். இவர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.

30.9.2010 அன்றைய அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு 96 கோடியே 50 லட்ச ரூபாய் சுழல்நிதி மானியமாக வழங்கப்பட்டது.

2006-11 கழக ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 5 ஆயிரம் 7 ஆயிரம் பேராக இருந்தாலும், பல மணி நேரம் நின்று கொண்டே அவர்களுக்கு தன் கையாலேயே நிதி உதவி,சுழல் நிதி வழங்கினார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காகவே மாவட்டங்கள் தோறும் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. மாநில அளவில் நிரந்தர சந்தைக்காக வள்ளுவர் கோட்டம் அருகில் 10 கோடி ரூபாய் செலவில் நவீன பலமாடி மாளிகை ஒன்றைக் கட்டி அந்த கட்டிடத்திற்கு கலைஞர் அவர்கள் அன்னை தெரசா மகளிர் வளாகம் என பெயரிட்டு திறந்து வைத்தார்கள்.

மகளிர் சுய உதவி குழு ஏழை விதவைப் பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை 1975-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தி செயல்படுத்தியவர் கலைஞர்.

**உள்கட்டமைப்பு அதிகரிப்பு**

கருணாநிதியின் நூற்றாண்டை முன்னிட்டு, அவர் முதல்வராகவும், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் இருந்த காலகட்டத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள், கட்டமைப்புகளின் நோக்கம், பயன்பாடு அடங்கிய டிஜிட்டல் ஆவணத் தொகுப்பை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயம், மருத்துவம், உயர் கல்வி, தொழில் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, சாதி, மத வேறுபாடுகள் நீங்க இடஒதுக்கீடு, சமத்துவ-சமுதாயம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, விவசாய உற்பத்தியை பெருக்கியது என பல்வேறு துறைகளிலும் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

நாட்டிலேயே பணக்கார மாநிலங்களான மகாராஷ்டிரா, மேற்கு வங்கத்தில்கூட உணவு உற்பத்தி இல்லாததால், பஞ்சம் ஏற்பட்டது. முன்னாள் முதல்வர் கருணாநிதி 'ஐஆர்-8' என்ற நெல் வகையை அறிமுகப்படுத்தி, ஏக்கருக்கு 45 மூட்டைகள் உற்பத்தி செய்யும் நிலையை உருவாக்கியதால் தமிழகத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படவில்லை.

குடிசைப் பகுதிகள் இல்லா தமிழகம் என்ற கொள்கையை வகுத்தார் கருணாநிதி. தமிழக கட்டிட வடிவமைப்பில் நவீனங்களைப் புகுத்தினார். 1971-ல் முதன்முதலாக சிப்காட் தொழில் வளாகங்கள் உருவாக்கினார். 1997-ல் கார் தொழிற்சாலைகளை உருவாக்கி "இந்தியாவின் டெட்ராய்ட் சென்னை" எனப் புகழ்பெறச் செய்தவர் கருணநிதி.

நெடுஞ்சாலைத் துறையை நவீனமயமாக்கி, தமிழகத்தில் முதன்முதலில் மேம்பாலங்கள் அமைத்து, நெடுஞ்சாலையை நவீனப்படுத்தினார். தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி, தமிழக இளைஞர்கள் ஐ.டி. தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் நிலையை ஏற்படுத்தினார். அனைத்தையும் நவீனமயமாக்கிய சிற்பி கருணாநிதி என்று உறுதியாக கூறலாம்.

கருணாநிதி முதல்வராகவும், பொதுப்பணித் துறை அமைச்ச ராகவும் இருந்த காலத்தில் கட்டப்பட்ட முக்கியமான கட்டிடங்கள்,கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் நோக்கம், பயன்பாடுகள் உள்ளிட்ட விவரங்களைத் தொகுத்து டிஜிட்டல் ஆவணம் உரூாவக்க வேண்டும். அப்போதுகட்டப்பட்ட 100 கட்டிடங்களின் புனரமைப்பு மற்றும் சீரமைப்புப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான காலஅளவு, நிதியை நிர்ணயிக்க வேண்டும்.

கருணாநிதி காலத்து கட்டிடப் பணிகள் குறித்து சாதனைக் கூட்டங்கள், விழாக்கள் நடத்துவதுடன், குறும்படங்கள் வெளியிட வேண்டும். முக்கியக்

கட்டிடங்களில் மின் ஒளிவிளக்கு அலங்காரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட முடிவுகள் இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

தொழில் வளர்ச்சிக்கு தகுந்தாற் போல், உலகத் தரத்துடன் உட்கட்டமைப்பு ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப் படும் என்று முதல்வர் கருணாநிதி கூறினார். சென்னையை அடுத்த ஸ்ரீ பெரும்புதூர் அருகே உள்ள சுங்குவார் சத்திரம் சிப்காட் தொழிற் பேட்டையில் காப்ரோ இந்தியா நிறுவனம், கார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த அயல்நாடு வாழ் இந்தியரான லார்ட் சுவராஜ் பால் நிறுவிய காப்ரோ குழுமத்தின் துணை நிறுவனமான காப்ரோ இந்தியா நிறுவனத்தின் சார்பில் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கபட்டுள்ளது.

இதன் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இதை தொடங்கி வைத்து, முதல்வர் கருணாநிதி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது, தமிழகத்தில் புதிய தொழில் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும். இதில் எனது தலைமையிலான நடவடிக்கை குழுவில் தொழில் அதிபர்கள், வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்புகள் தெரிவித்த ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு புதிய தொழில் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில் அதிபர்களின் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும். தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, உலக தரம் வாய்ந்த உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அதிக கவனம் செலுத்தப்படும்.

தமிழகத்தில் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. சென்னையில் கோயம்பேடு - மதுரவாயல் - சுங்குவார் சத்திரம் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்படும். மாநில அரசு, மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை

ஆணையத்துடன் இணைந்து இந்த சாலை 6 வழிபாதையாக மாற்றும் என்று கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், காப்ரோ போன்ற நிறுவனங்கள், வேலை வாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இந்த பகுதியின் மேம்பாடு, உள்ளூர் மக்களின் எதிர்பார்புக்கு தகுந்தாற் போல் இருக்க வேண்டும். இந்த வெற்றியில் அவர்களின் பங்கும் இருக்க வேண்டும். இந்த பகுயில் உருவாகும் புதிய வேலை வாய்ப்புகள், அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த தொழிற்சாலையை விரைவில் அமைத்த காப்ரோ குழுமத்தை பாராட்டிய முதல்வர் கருணாநிதி, இந்த குழுமம் மாநில அரசு பின்தங்கிய பகுதிகளை தொழில் மயமாக்க அதிக அக்கறை செலுத்தி வருகிறது. அந்த வகையில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியான திண்டுக்கல் மாவட்டம் நிலக் கோட்டையில் காப்ரோ நிறுவனம் கார் உதிரி பாகங்களை தயாரிக்கும் தொழிற்சாலையை தொடங்க உள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த தொழிற்சாலை தொடங்குவதற்காக நிலக்கோட்டையில் சிப்காட் 20 ஏக்கர் நிலம் வழங்க அனுமதி அளித்து உள்ளது.

**தொழில்துறை வளர்ச்சி**

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் தொழில் துறை வளர்ச்சிக்கு என்ன செய்தன என்று கேட்பவர்களுக்கு, தமிழ்நாட்டில் அந்நாள் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் மத்திய உணவு அமைச்சராகவும் இருந்த சி.சுப்பிரமணியனின் சுயசரிதையைப் பரிந்துரைக்கும் பழக்கம் எனக்குண்டு. வெறும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் மட்டுமே 1967-ல் காங்கிரஸை வீழ்த்தி திமுகவை ஆட்சிக்குக் கொண்டுவரவில்லை; வேலைவாய்ப்பின்மைக்கும் பஞ்சத்துக்கும் பசி பட்டினிக்கும் அதில் ஒரு

முக்கியமான பங்குண்டு என்பதை அந்தப் புத்தகத்தைப் படிப்பவர்கள் உணர்ந்துகொள்வார்கள்!

### குஜராத் - தமிழகம் ஒப்பீடு

பண்டைய தமிழகத்தின் வணிகப் பெருமைகளுடன் நவீனத் தமிழகத்தை ஒப்பிட முடியாது. நவீன இந்தியாவின் பொருளாதாரம் என்பது குஜராத்திகளின் பொருளாதாரம். குஜராத்திகள் குஜராத்திலும் பின்னர் மஹாராஷ்டிரத்திலும் தங்களை நிலைநிறுத்திக்கொண்டதால், இந்த இரு மாநிலங்களே இந்தியாவின் தொழில் துறையைக் கையில் வைத்திருக்கின்றன. ஒரு ரிலையன்ஸுடன் அம்பானியுடன் ஒப்பிட்டால் தமிழ்நாட்டின் மிகப் பெரிய பல நிறுவனங்களை ஒன்றுசேர்த்தால்கூட அது சுண்டைக்காய்க்குச் சமானம்தான். சுதந்திரத்துக்குப் பின் வட இந்தியாவுக்கே வளர்ச்சித் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. திராவிட நாடு முழக்கம், பின்னாளில் மாநில சுயாட்சி என்று அண்ணா போர் முழக்கமிட முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருந்தது தமிழகம் வஞ்சிக்கப்பட்டதுதான். இப்படிப்பட்ட பின்னணியில் 50 ஆண்டுகளில் குஜராத், மஹாராஷ்டிரத்துக்கு அடுத்த நிலையில் - இங்கே தொழில் துறை வளர்ந்திருப்பதே ஒரு சாதனை!

தமிழ்நாட்டு வணிகச் சமூகங்கள் என்று எடுத்துக்கொண்டால் குறிப்பிடத்தக்க வரலாற்று நீட்சியைக் கொண்ட ஒரே வணிகச் சமூகமாக நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகம் இருந்தது. அவர்களது பிரதான வணிகம் முத்து, பிற்காலத்தில் வட்டித்தொழில் என்றானது. காரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு மட்டும் சுமார் 1,500-க்கும் மேற்பட்ட வட்டி நிறுவனங்கள் நடந்த காலம் உண்டு. இரண்டாம் உலகப் போரின்போது பர்மா, மலேசியாவில் செல்வத்தையும் பல லட்சம் ஏக்கர் நிலங்களையும் இழந்த பின் அவர்களும் முடங்கினார்கள்.

சுதந்திரத்துக்குப் பிறகு தொழில் முதலீட்டின் பக்கம் அவர்கள் வந்தார்கள் என்றாலும், முருகப்பா குழுமம், எம்.ஏ.எம். குழுமம் போன்ற சில குழுமங்களைத் தாண்டி அவர்கள் மேலே செல்லவில்லை. இவை நீங்கலாக வேறு எந்தச் சமூகத்துக்கும் பெரிய அளவிலான தொழில் முதலீடுகள் கிடையாது. விதிவிலக்கு பிராமணச் சமூகம். தமிழகத்தில் பிராமணர்களிடமே சொல்லிக்கொள்ளும்படியான தொழில் முதலீடுகள் பெரிய அளவில் எல்லாத் துறைகளிலும் இருந்தன. டிவிஎஸ், சிம்சன், மெட்ராஸ் சிமெண்ட்ஸ், சேஷசாயி என்று இந்தப் பட்டியல் மிகப் பெரியது. காங்கிரஸ் ஆட்சி தமிழகத்தில் நடந்தபோது இந்த நிறுவனங்களில் பலவும் அதன் பின்னணியில் இருந்தன. பலனடைந்தன.

**திமுக எதிர்கொண்ட சவால்கள்**

பிராமணரல்லாதோர் இயக்கமாக வளர்ந்து ஆட்சியில் உட்கார்ந்த திமுகவுக்குத் தொழில் துறையை வளர்த்தெடுப்பதில் இருந்த சவால்களை மேற்கண்ட பின்னணியில் பொருத்திப்பார்த்தால் விளங்கும். ஒருபுறம், குஜராத் போன்ற பொருளாதாரம் நம்மிடம் கிடையாது. மறுபுறம், டெல்லியில் ஆட்சியில் உட்கார்ந்திருந்தவர்கள் அந்நாளில் திமுகவைத் தடைசெய்ய நேரம் பார்த்துக்கொண்டிருந்தவர்கள். தமிழகத்தில் தொழில் துறையைக் கையில் வைத்திருந்தவர்களோ திமுகவைச் சங்கடமாகப் பார்த்தவர்கள். இந்த நெருக்கடிகளினூடாகவே தொழில் துறையை வளர்த்தெடுத்தது திமுக. தமிழர், தமிழ் நிறுவனங்கள் என்ற எல்லைக்குள் எல்லோரையும் அரவணைத்தது. தொழில் வளர்ச்சிக்கும் முதலீடுகளுக்கும் ஏற்ற வன்முறையற்ற அமைதியான சூழலை வளர்த்தெடுத்தது.

காமராஜர் ஆட்சியில் தமிழகத் தொழில் துறையில் சில முக்கியமான கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன. என்றாலும், தமிழ்நாட்டில் இன்றுள்ள

தொழில் துறைக்கான முழுக் கட்டுமானங்களில் பெரும் பகுதி திராவிடக் கட்சிகளின் ஆட்சிக் காலகட்டத்தில், குறிப்பாக திமுக ஆட்சிக் காலகட்டத்திலேயே உருவாக்கப்பட்டன. காமராஜர் பார்வையும் கருணாநிதி பார்வையும் என்றுகூட தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஒப்பிடலாம். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக, எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தத் தொழில்கள் நடைபெறுகின்றனவோ அவற்றை ஊக்குவிக்கும் வகையில் காமராஜர் தொழிற்பேட்டைகளை உருவாக்கினார். ஓர் உதாரணம்- திண்டுக்கல்லில் பூட்டு தயாரிக்கும் தொழிற்பேட்டை. கருணாநிதி தொழில் சூழல் இல்லாத இடங்களிலும் தொழிற்பேட்டைகளை உருவாக்கினார். தமிழக வரலாற்றில் 1971 – 1976 காலகட்டம் முக்கியமானது. தமிழகத்தின் ஒவ்வொரு 50-வது கிலோ மீட்டரிலும் ஒரு தொழிற்பேட்டை இருக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு திமுக அரசு செயல்பட்ட காலகட்டம் அது. சென்னை தொடங்கி நாகர்கோவில் வரையில் அப்போதுதான் பல தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன. மானிய விலையில் இடம், தடையில்லா மின்சாரம், விரைவான தொழில் ஒப்புதல் போன்றவற்றால் தொழில் முனைவோர் பெருகினர்.

**கருணாநிதியின் முன்னகர்வுகள்**

டெல்லியுடனான உறவை மாநிலத்துக்குத் திட்டங்களைக் கொண்டுவரும் உறவாக வளர்த்தெடுத்தவர் கருணாநிதி. சேலம் உருக்காலை அதன் தொடக்கம். டெல்லியிலேயே உட்கார்ந்து இந்திராவுடன் சண்டை போட்டு அவர் கொண்டுவந்த திட்டம் அது. மத்திய அரசின் ஆதிக்கத்தைத் தொழில் துறையில் நீர்த்துப்போகச் செய்யும் வகையில் அவர் யோசனையில் உதித்ததே மாநில – மத்திய – தனியார் கூட்டு முதலீட்டுத் திட்டம். அப்படி உருவானவைதான் தூத்துக்குடி ஸ்பிக், மதுரை தமிழ்நாடு கெமிக்கல்ஸ், காரைக்குடி டிசிஎல்,

மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் எல்லாம். அதேபோல, மத்திய அரசின் பொதுத் துறை மாதிரி, மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களையும் உருவாக்கினார். இதில் ஒன்று தனியார் பங்களிப்புடன் கூடியது, மற்றொன்று அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள். அதாவது பூம்புகார் கப்பல் நிறுவனம், டான்ஸி நிறுவனம் (தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிட்), தமிழ்நாடு அக்ரோ இன்டஸ்ட்ரி போன்றவை. இத்திட்டத்தின்படி தொழில் தொடங்குவதற்கு மட்டுமே அரசு உதவும். மற்றபடி வரவு-செலவு அனைத்தையும் அவர்களே செய்துகொள்ள வேண்டும். இதே பாணியில் தீப்பெட்டி, நெசவு என்று பல்வேறு சிறுதொழில்களுக்கான கூட்டுறவு நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றில் பல தனியாருடன் போட்டியிட முயன்று தோற்றாலும் இந்த முயற்சியின் பின்னிருந்த கனவு மெச்ச வேண்டியது.

1990-களில் மத்திய அரசின் தாராளமயமாக்கல் கொள்கையைத் தமிழகம் கச்சிதமாகப் பயன்படுத்திக்கொண்டது. 1996-2001 திமுக ஆட்சிக் காலகட்டமும் மிக முக்கியமானது. தகவல் தொழில்நுட்பத் துறை ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதைக் கணித்து நாட்டிலேயே முதல் முறையாக 1997-ல் அத்துறைக்கான கொள்கையை அறிவித்தார் கருணாநிதி. இதற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரே வாஜ்பாய் காலத்தில் தேசிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை வெளியானது. ஒருபுறம் ‘டைடல் பார்க்’ மூலம் நிறுவனங்களை இங்கு ஈர்த்தபோது, மறுபுறம் அங்கு வேலைவாய்ப்புகளுக்கு நம் மாணவர்களைத் தயாராக்கும் வகையில் உயர் கல்வித் துறையையும் முடுக்கிவிட்டார் கருணாநிதி. 1999-ல் அவர் நடத்திய உலகத் தமிழ் இணைய மாநாடு இன்னொரு முக்கியமான செயல்பாடு. இன்று இணைய உலகில் தமிழ் முன்னே நிற்க பல வகைகளில் விதை போட்ட நிகழ்வு அது. அதேபோல, தமிழ்நாட்டை மின் ஆளுகையின் கீழ் கொண்டுவரும்

முயற்சியின் தொடக்கமாக திருவாரூர், திருவள்ளூர் மாவட்டங்களில் மின் நிர்வாகத்தைக் கொண்டுவந்தார். இதன் பின்னிருந்த கனவுகள் பெரியவை.

தமிழகத்தில் இன்றைய இளம் தலைமுறையினர் பலர் "திராவிட இயக்கம் – குறிப்பாக, கருணாநிதி தமிழ்நாட்டுக்கு என்ன செய்தார்?" என்று ஃபேஸ்புக்கில் கமென்ட் போடும்போதெல்லாம் நான் இதைத்தான் நினைத்துக்கொள்வேன்: நம்மை ஏனைய சமூகங்களுக்கு முன் கணினிக்கு முன் கொண்டுவந்ததும்கூட அவர்கள் செய்த மகத்தான சாதனை என்று!

**சுய மதிப்பீட்டு கேள்வி**

- சி.என். அண்ணாதுரை மதராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என பெயர் மாற்றம் தி.மு.க. நிர்வாகம் பற்றி குறிபிடுக
  ------------------------------------------------------------------------------------------------------------------------
- பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் , பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் பற்றி விளக்குக.
  ------------------------------------------------------------------------------------------------------------------------
- சமத்துவபுரம் திட்டம் என்றால் என்ன? இதன் மூலம் சமுக முனேற்றம் பற்றி கூறுக.
  ------------------------------------------------------------------------------------------------------------------------

## இயல் – நான்கு

**அதிமுக நிர்வாகம் ; எம்.ஜி.ஆர். - சத்துணவுத் திட்டம் - கல்விச் சீர்திருத்தங்கள் - மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் டூ அறிமுகம் - கிருஷ்ணா நீர் திட்டம் - புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவுதல் - தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் - கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக்கழகம் - ஜே. ஜெயலலிதா - நலத்திட்டங்கள் - அம்மா உணவு - மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி - தொட்டில் குழந்தை திட்டம் - உள்கட்டமைப்பு மேம்பாடு - மழை நீர் சேகரிப்பு.**

குறிக்கோள்கள்

- அதிமுக நிர்வாகம்; தோற்றம் மற்றும் பணிகள்
- கிருஷ்ணா நீர் திட்டம் பயன்கள்
- ஜே. ஜெயலலிதா நலத்திட்டங்கள் குறித்து கூறுக
- மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி திட்டம

அஇஅதிமுக என்றழைக்கப்படும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது தமிழகம் மற்றும் புதுச்சேரி யூனியனில் செல்வாக்கு கொண்ட ஒரு பிராந்திய கட்சியாகும். பெயரில் இந்தியா இருந்தாலும் இது தமிழ்நாட்டில் மட்டுமே செல்வாக்கு பெற்ற கட்சி.

அறிஞர் அண்ணா புற்றுநோயால் இறந்ததற்கு பிறகு கலைஞர் மு.கருணாநிதி திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் முதலமைச்சரானார். அப்போது திமுகவில் பொருளாளராக இருந்த எம்ஜிஆர் கட்சி கணக்கு கேட்டற்காக கலைஞர் அவரை கட்சியிலிருந்து நீக்கினார். அதன் பிறகு 17 அக்டோபர் 1972 அன்று மதுரையில் எம்ஜிஆரால் அதிமுக துவங்கப்பட்டது. இக்கட்சி தமிழகத்தில் ஏழு முறை பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது. தற்போது தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அங்கமாகவும் இக்கட்சி இருக்கிறது.

## வரலாறு

அனகாபுத்தூர் இராமலிங்கம் என்பவர் அ.தி.மு.க. என்ற பெயரில் ஒரு கட்சியை பதிவு செய்திருந்தார். அந்தக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு எம்ஜிஆர் அதிமுகவிற்கு தலைமை தாங்கினார். கட்சிப் பதிவை விட்டுக் கொடுத்ததற்காக அனகாபுத்தூர் இராமலிங்கத்திற்கு மேல்சபை உறுப்பினர் (எம்.எல்.சி) பதவியும் அளித்தார். பின்னர் இக்கட்சி அ.இ.அ.தி.மு.க எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கட்சிக்கொடியை நடிகர் பாண்டு எம்ஜிஆரின் வழிகாட்டுதலோடு உருவாக்கினார். அதிமுக என்ற பெயரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று எம்ஜிஆர் மாற்றினார். இதை கட்சிக்குள் சிலர் ஏற்கவில்லை. பின்னர் பொதுச்செயலாளர் பதவியை விட்டு விலகுவதாக அறிவித்த பின் எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

## எம்.ஜி.ஆர். காலம்

21.10.1972ம் ஆண்டு திமுகவை சேர்ந்த எம்.எல்.ஏக்கள் பலர் அதிமுகவில் தங்களை ஐக்கியப் படுத்திக் கொண்டனர். அதில் முக்கியத்துவம் வாய்ந்தவர் திருவள்ளூர் தொகுதி எம்.எல்.ஏ துரைராஜ். தீவிர எம்.ஜி.ஆர் ரசிகனான அவர் தொகுதி மக்களுடன் இதுபற்றி ஆலோசனை நடத்தியதற்கு பின்பு அதிமுகவில் தன்னை இணைத்துக்கொள்ள தயாரானார். இந்த சூழலில் திமுகவினர் கட்சி தாவுவதை எதிர்த்து திமுகவினரே பேருந்துக்களை கொளுத்தி, தகராறில் ஈடுபட்டனர்.

அதன் பிறகு சென்னை கடற்கரையில் நடந்த பிரமாண்டமான கூட்டத்தில் அதிமுகவின் தொடக்கம் பற்றியும், அதிமுகவின் வருங்காலம் பற்றியும் எம்.ஜி.ஆர் பேசினார். ஆரம்பம் முதலே எம்.ஜி.ஆருக்கு உறுதுணையாக இருந்து வந்த ஜேப்பிஆரும், முசிறி புத்தனும் இக்கூட்டத்துக்கான ஏற்பாடுகளை

சிறப்பாகச் செய்திருந்தனர். இக்கூட்டத்தில் திமுகவிலிருந்து விலகி, காளிமுத்து, முனு ஆதி, துரைராஜ், எட்மண்ட் ஆகியோர் எம்.ஜி.ஆர். முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர்.

மெல்ல மெல்ல அதிமுக வளர்ச்சியை பெற்றுக் கொண்டிருந்தது. 1973ம் ஆண்டு திண்டுக்கல் தொகுதி திமுக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாங்கம் மரணமடைந்தார். அதன் பிறகு அத்தொகுதிக்கு மே 20ம் தேதி தேர்தல் என்று அறிவிக்கப்பட்டது. அந்த சமயத்தில் தான் ‘உலகம் சுற்றும் வாலிபன்’ படம் வெளியாக காத்திருந்தது. திமுகவுக்கு எதிராகக் களம் இறங்கியதால் ’உலகம் சுற்றும் வாலிபன்’ படத்தை வெளியிட திமுக அரசு தடையாக இருந்தது.
ஆனால் எம்.ஜி.ஆரோ அதை பற்றியெல்லாம் கவலைப்படாமல், தேர்தல் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதிமுக காணும் முதல் தேர்தல் அது தான்.

அதிமுக சார்பில், தொகுதி வேட்பாளராக வழக்கறிஞர் மாயத்தேவர் அவர்கள் நிறுத்தப்பட்டார். மே 11ம் தேதி, உலகம் சுற்றும் வாலிபனை வெளியிட எம்.ஜி.ஆர் முடிவு செய்து போஸ்டர்களை ஒட்ட உத்தரவிட்டார்.

ஆனால் அப்போது அப்படத்திற்கு மட்டும் போஸ்டர்கள் மீதான வரியை சென்னை மாநகராட்சி மூலம் திமுக அரசு உயர்த்த, சென்னையைத் தவிர்த்து இதர நகரங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. திண்டுக்கல் தேர்தலோ மே 20, படம் வெளியீடு மே 11. இரண்டுக்கும் 9 நாட்கள் தான் வித்தியாசம். 5.2 கோடி ரூபாய் செலவில் எடுக்கப்பட்ட அத்திரைப்படத்தை எம்.ஜி.ஆரே இயக்கியும், தயாரித்தும் வெளியிட்டார்.

இது எல்லாம் ஒரு பக்கம் நடக்க, திண்டுக்கல் தொகுதி தேர்தலில் திமுக வெற்றி பெற அமைச்சர்கள் அனைவரும் களமிறக்கப்பட்டனர். முதலமைச்சர்

கருணாநிதி கிராமம் கிராமமாக சென்று பிரச்சாரம் செய்தார். எம்.ஜி.ஆரோ அனல் பறக்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டார். தேர்தலில் அதிமுகவே வென்றது!

இதன்பிறகு இந்திராகாந்தியால் கொண்டு வரப்பட்ட எமர்ஜென்சி காலத்தில் திமுக ஆட்சி சட்டவிரோதமாகக் கலைக்கப்பட்டது. 1977இல் நடைபெற்ற தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் மார்க்சிஸ்டு கட்சி, ஃபார்வார்டு பிளாக், முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி வைத்து போட்டியிட்ட அதிமுக பெரும்பாலான இடங்களில் வெற்றி கண்டது. நான்குமுனைப் போட்டியில் திமுக மொத்தம் 234 இடங்களில் வெறும் 48 இடங்களை மட்டும் பெற்றது.

**ஜெயலலிதா காலம்**

தமிழக முதல்வராக இருந்த எம்ஜிஆர் டிசம்பர் 24, 1987இல் மரணமடைந்தார். அவருக்கு பின் யார் தலைமை தாங்குவது என்ற கோஷ்டிச் சண்டை நடந்தது. ஆர்.எம்.வீரப்பனின் ஆதரவுடன் எம்ஜிஆரின் மனைவி வி.என்.ஜானகி தலைவராகவும் முதல்வராகவம் ஆனார். அதை ஜெயலலிதா ஏற்கவில்லை. 132 சட்டமன்ற உறுப்பினர்களில் 33 பேர் ஜெயலலிதாவை ஆதரித்தனர். மற்றவர்கள் ஜானகியை ஆதரித்தனர். சட்டமன்ற பேரவைத் தலைவர் பி.எச்.பாண்டியனும் ஜானகியை ஆதரித்தார்.

பிறகு ஜனவரி 26, 1988 இல் சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. இதில் ஜெயா கோஷ்டியும், ஜானகி கோஷ்டியும் மோதிக் கொண்டனர். 111 உறுப்பினர்களுடன் ஜானகி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் சட்டமன்றத்தில் கலவரம் நடைபெற்றதால் ஒன்றிய அரசு ஜானகி ஆட்சியைக் கலைத்தது.

ஜனவரி 21, 1989 இல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் திமுக வென்றது. அதன்பின் திமுக அரசும் பிரதமர் சந்திரசேகர் ஆட்சியால் சட்டவிரோதமாகக் கலைக்கப்பட்டது. 1991 இல் அடுத்த சட்ட மன்றத் தேர்தல்

நடைபெற்றது. தேர்தலுக்கு முன்பாக சென்னை பூந்தமல்லியில் ராஜிவ் காந்தி விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதால் எழுந்த அனுதாபத்தை வைத்து அதிமுக ஜெயலலிதா தலைமையில் வென்றது. அதன் பிறகு அவரது தலைமையில் 2001, 2011, 2016 ஆகிய தேர்தல்களில் அதிமுக வென்றது. ஜெயலலிதா முதலமைச்சர் ஆனார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகுஅவரது இறுதிக் காலத்தில் சொத்துக்குவிப்பு வழக்கில் அவர் குற்றம் சாட்டப்பட்டார். அந்த வழக்கில் 20 ஆண்டுகளாக வாய்தா வாங்கி தப்பி வந்த ஜெயலலிதா 5 டிசம்பர் 2016 இல் மறைந்த பிறகு குற்றவாளி என அறிவிக்கப்பட்டார். இரண்டாவது குற்றவாளியாக சசிகலா அறிவிக்கப்பட்டார்.

**புரட்சி தலைவர் எம்ஜிஆர் – சத்துணவு உணவு திட்டம்**

1982 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல், பள்ளிகளில் மாணவர் வருகையை தக்க வைத்தல், , அதே நேரத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவை மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். பசி அல்லது நோய்வாய்ப்பட்ட குழந்தையால் முழுமையாக ஒருமுகப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த முடியாது. இதனை கருத்தில் கொண்டு, அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், சிறப்புப் பயிற்சி மையங்கள், மதராசாக்கள் மற்றும் சர்வ சிக்ஷா அபியான் கீழ் செயல்படும் மக்தாப்களில் பத்தாம் வகுப்பு வரையிலான தொடக்க மற்றும் உயர்நிலை வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு சூடான சமைத்த மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

I. எல்லோருக்குமான தொடக்கக் கல்வி என்ற நோக்கில் மாணவர் சேர்க்கையை முழு அளவில் அதிகரித்தல் , பள்ளி இடைநிற்றல் விகிதங்களைக் குறைத்தல்.

II. குறைவான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குதல்.

III. பின்தங்கிய நிலையில் உள்ள குழந்தைகளை தவறாமல் பள்ளிக்குச் செல்ல ஊக்குவித்தல் மற்றும் முறையான கல்வியைப் பெற அவர்களுக்கு உதவுதல்.

IV. வேலை வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

1. 5-9 வயதுக்குட்பட்ட தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கும், 10-15 வயதுக்குட்பட்ட உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கும், வாரத்தில் ஐந்து நாட்களுக்கு, ஒரு வருடத்தில் 220 நாட்கள் பள்ளி வளாகத்திலேயே சூடான சத்தான கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கப்படுகின்றது.
2. 15 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு ஒரு வருடத்தில் 312 நாட்களுக்கு சூடான சத்தான கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கப்படுகின்றது.
3. தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு (1வது வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை) ஒரு பள்ளி நாளுக்கு ஒரு குழந்தைக்கு (அரிசி) @ 100 கிராம் மற்றும் உயர் நிலைப் பள்ளி குழந்தைகளுக்கு (6வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை) நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு @ 150 கிராம் வழங்கப்படுகிறது.

4. அனைத்து 5 வேலை நாட்களிலும் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அனைத்து குழந்தைகளுக்கும் முட்டை வழங்கப்படுகிறது. திருட்டு மற்றும் பழுதடைவதைத் தடுக்க வாரத்தின் ஒவ்வொரு நாளும் முட்டைகளுக்கு வண்ணங்களில், "தமிழ்நாடு அரசு" என்ற முத்திரையிடப்படுகிறது.
5. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கப்படுகிறது.
6. இன்றைய குழந்தைகளுக்கு தேவைப்படும் புரதம் வைட்டமின்கள் மற்றும் கலோரிகளை கருத்தில் கொண்டு 20 கிராம் கருப்பு கொண்டக்கடலை / பச்சைப்பயறு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.
7. அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு மாவுச்சத்து தேவைக்கு துணை புரிகிறது.
8. குழந்தைகளிடையே அயோடின் மற்றும் இரும்புச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும், சுகாதார தலையீடு திட்டத்தின் ஒரு பகுதியாகவும், இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது, இது குழந்தைகளின் அயோடின் குறைபாட்டைத் சீர்செய்து முன் கழுத்து கழலை நோயை தடுக்கிறது. இருமுறை செறியூட்டப்பட்ட வைட்டமின் A மற்றும் வைட்டமின் D சத்துடன் கூடிய எண்ணெய் தினமும் சத்துணவில் பயன்படுத்தப்படுகிறது.
9. முக்கியமான தினங்களில், வெல்லம் மற்றும் நெய்யைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கு இனிப்புப் பொங்கல் பரிமாறப்படுகிறது.

**தமிழ் பல்கலைக் கழகம் நிறுவுதல்**

1921ம் ஆண்டு தமிழ் மொழிக்கு எனத் தனியே ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றிய உமாமகேசுவரனார் பிறந்த

தஞ்சையில், தீர்மானம் இட்ட அறுபது ஆண்டுகள் கழித்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவினார் எம்.ஜி.ஆர். தமிழ்மொழி, தமிழர்களின் கலை, இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், மொழியியல், வரலாறு, புவியியல், மெய்யியல், கடலியல், சித்த மருத்துவம், கைவினைக் கலை, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழை மேம்படுத்த, தமிழர்களின் மரபுப் பெருமையைப் பரப்ப, 1981 இல் அன்று முதலமைச்சராகயிருந்த ம. கோ. இரா. முன் முயற்சியில் தமிழக அரசால் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது.

- முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தலைமையில் 13 சூன், 1981 இல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இப்பல்கலைக்கழகத்தின் உடனடித் தேவைக்கும், எதிர்கால விரிவாக்கத்திற்கும் 1000 ஏக்கர் நிலம் தேவை என முடிவு செய்யப்பட்டது.
- 1981 ஆகத்து 1 ஆம் நாள் தமிழக ஆளுநர் மூலம் “தமிழ்ப் பல்கலைக் கழக அவசரச் சட்டம் 1981” பிறப்பிக்கப்பட்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.
- இதனைத் தொடர்ந்து தமிழ் பல்கலைக் கழகத்திற்கு 972.7 ஏக்கர் நிலத்தை எம்.ஜி.ஆர் தலைமையினான அரசு கையகப்படுத்தி ஒதுக்கியது

எம்.ஜி.ஆர். தனது ஆட்சியில் தொழில்நுட்பக் கல்வியில் புரட்சியை ஏற்படுத்தினார். அந்த காலக்கட்டத்தில், தமிழகத்தில் 6 பொறியியல் கல்லூரிகள் மட்டுமே இருந்தன.

எம்.ஜி.ஆர். தனது ஆட்சியில் தொழில்நுட்பக் கல்வியில் புரட்சியை ஏற்படுத்தினார். அந்த காலக்கட்டத்தில், தமிழகத்தில் 6 பொறியியல் கல்லூரிகள் மட்டுமே இருந்தன. பொறியியல் கல்வி பயில வெளிமாநிலங்களுக்குச் செல்லும் நிலை இருந்தது. தமிழகத்தில் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் தொடங்க அவர்

அனுமதி வழங்கிய காரணத்தால் தான், இன்றைக்கு 500-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உருவெடுத்துள்ளன. லட்சக்கணக்கான பொறியாளர்கள் தமிழ்நாட்டில் இருந்து உருவாகி வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். பொறியியல் கல்வி உலக அளவில் பெரிய மாற்றத்தை உருவாக்கியுள்ளது. நாடட்டில் பொறியியல் கல்வியில் தமிழகம் முன்னணியில் இருப்பதற்கு வித்திட்டவர் எம்.ஜி.ஆர்.

**மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் டூ அறிமுகம்**

தமிழ்நாட்டில் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மட்டும் உள்ள பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள் என்று அழைக்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியப் பயிற்சிக்கான பட்டயப் படிப்பு படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரையுள்ள வகுப்புகளுக்கும், இளநிலைப் பட்டப்படிப்புடன் கல்வியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை வகுப்புகளுக்கும், முதுநிலைப் பட்டத்துடன் கல்வியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களாக பதினொன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள பாடப்பிரிவுகளில் அவர்களது பாடப்பிரிவுகளுக்கேற்பவும் ஆசிரியர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு 1978ம் ஆண்டில் புதிய கல்வித் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் என அனைத்து பள்ளிகளிலும் 10ம் வகுப்புக்கு மேல் பொதுவான பாடத்திட்டத்தை கொண்ட 10+2 அதாவது, பத்தாம் வகுப்புக்கு மேல் இரண்டு ஆண்டுகள் பள்ளிகளில் தொடர்ந்து கல்வி பயிலும் மேல்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வந்து சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவையைப்பூர்த்தி செய்யும் திட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பல்வேறு அரசுகளாலும், மக்களாலும் பேசப்பட்டு வந்தது. 1983 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர், ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவுடன் கலந்து பேசி நனவாக்கினார். அதற்கான தொடக்க விழாவைப் பிரதமர் இந்திராகாந்தி, என்.டி.ஆர். ஆகியோரை சென்னைக்கு அழைத்து விழாவை நடத்தினார்.

மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற தமிழக, ஆந்திர அரசுகள் 1983-ம் ஆண்டு கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தை உருவாக்கின. திட்டத்தின்படி ஆந்திர அரசு ஆண்டுதோறும் 12 -டி.எம்.சி. தண்ணீரை கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு, பூண்டி ஏரிக்கு திறந்துவிட வேண்டும்.

ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4 டி.எம்.சி. தண்ணீர், ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீர் என மொத்தம் 12 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டும். பூண்டி ஏரியின் நீர்மட்டம் வெகுவாக குறைகிற போதெல்லாம், கிருஷ்ணா நதிநீர் பங்கீடு திட்டத்தின்படி தண்ணீர் திறந்து விடும்படி தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கோரிக்கை விடுப்பார்கள்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு, அப்போதைய முதல்வர் எம்ஜிஆரின் முன்னெடுப்பு, முதல் துணைவேந்தரான வ.அய்.சுப்பிரமணியத்தின் தொலைநோக்கு ஆகியவற்றுடன் அன்றைய மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் மு.அம்பிகாபதி சட்டமன்றத்தில் விடுத்த கோரிக்கையும் நினைவுகூரப்பட வேண்டியது. இது ஏன் இப்போது நினைவுகூரப்பட வேண்டியதாகிறது என்றால், சமீபத்தில் காலமாகிவிட்ட அம்பிகாபதி, மக்கள் பிரதிநிதிகளில் உள்ளூர் ஆளுமைகளுக்கான உதாரணர்களில் ஒருவர். ஒரு பெரிய பொதுக் காரியம் நடக்க பெரிய மக்கள்

தலைவர்கள், ஆட்சியைக் கையில் வைத்திருப்பவர்கள் மட்டும் அல்ல; உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளும்கூட எப்படிப் பங்காற்றுகிறார்கள் என்பது அவர் வழியே பேசப்பட வேண்டியதாகிறது.

மதுரையில் 1901-ல் தொடங்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தையடுத்து தஞ்சையிலும் ஒரு தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டது. ஆனால், அது தொடர்ந்து செயல்படவில்லை. அதை ஈடுசெய்யும்விதமாக, நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான தமிழவேள் உமாமகேசுவரனார் 1911-ல் கரந்தை தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கினார். 1922-ல் தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று கோரிக்கையையும் அவர் விடுத்தார். சைவ சமாஜங்களைத் தொடங்குவதற்கு அவரைத் துணைக்கு அழைத்துக்கொண்ட தமிழறிஞர்கள், இந்த விஷயத்தில் ஆர்வம் காட்டவில்லை. அவரைச் சமாதானப்படுத்தி அந்தக் கோரிக்கையைக் கைவிடவும் நிர்ப்பந்தித்தனர்.

தனித்தமிழ் இயக்கத்தின் மூலவர் யார், உற்சவர் யார் என்று இன்றும் தொடரும் விவாதங்களில் தேரோடுவதற்கு வடம்பிடித்த தமிழவேளையும் கரந்தைக் கவியரசையும் நாட்டாரையும் யாருமே பேசுவதில்லை என்பது வியப்பிற்குரியதல்ல. தஞ்சையில் இருபதுகளில் உமாமகேசுவரனார் முன்னெடுத்த தமிழ்ப் பல்கலைக்கழகக் கோரிக்கை எண்பதுகளில்தான் நிறைவேறுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினராக இருந்த மு.அம்பிகாபதியால் அந்த அரை நூற்றாண்டுக் கனவு நனவானது. 1981 நிதிநிலை அறிக்கையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் மீது நடந்த விவாதத்தில், சோவியத் பயணத்தின்போது தான் கண்ட ரஷ்ய மொழிக்கான சிறப்புப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளைச் சட்டமன்றத்தில் விளக்கிப் பேசினார் அம்பிகாபதி. தமிழறிஞர்

வ.சுப.மாணிக்கம் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கவும் காரணமாக இருந்தார். சங்கம் வளர்த்த மதுரையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கலாம் என்று விவாதிக்கப்பட்டபோது, அங்கு ஏற்கெனவே காமராஜரின் பெயரில் பல்கலைக்கழகம் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அம்பிகாபதி, கம்பன் பிறந்த சோழ நாட்டிலேயே பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்று உறுதியாக நின்று அதில் வெற்றியும்பெற்றா

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இது 1981 ஆம் ஆண்டு திரு எம்ஜி ராமச்சந்திரனால் நிறுவப்பட்டது; ஆனால் அது 1983 இல் பல்கலைக்கழக மானியக் குழுவின் கீழ் சட்டப்பூர்வ அங்கீகாரத்தைப் பெற்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கம் தமிழியல் உயர்கல்வியை வழங்குவதாகும். இந்தியாவின் பழமையான திராவிட மொழிகளில் தமிழ் ஒன்றாகும்; ஆனால், ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் முதல் தமிழுக்கு முக்கியத்துவம் இல்லை. எனவே, தமிழ் மொழிக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் தமிழறிஞர்கள் பல்கலைக்கழகம் அமைக்க முயன்றனர். 1981 ஆம் ஆண்டு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் திரு எம்.ஜி.ராமச்சந்திரன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்தபோது அறிஞர்களின் முயற்சி வெற்றியடைந்தது.

நாடகம், இசை, மொழிபெயர்ப்பு, மொழியியல், கையெழுத்து இயல் மற்றும் அகராதியியல் ஆகியவற்றில் மேம்பட்ட படிப்புகளை வழங்குவதையும் பல்கலைக்கழகம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் மொழிபெயர்ப்பு, வரலாறு, கட்டிடக்கலை, இலக்கியம், சிற்பம் மற்றும் மொழி ஆகியவற்றில் எம் பில் மற்றும் பிஎச்டி படிப்புகளை வழங்குகிறது.

**அன்னை தெரசா பல்கலைக்கழகம்**

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 15 இயற்றப்பட்டதன் மூலம் நிறுவப்பட்டது. பெண்களுக்கு தரமான உயர்கல்வியை அளித்து அவர்களை தன்னம்பிக்கையுடன் உருவாக்குவதே பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசின் மாநிலப் பல்கலைக்கழகம், தென்னிந்தியாவின் பழனி மலைப்பகுதியில் கொடைக்கானலில் அமைந்துள்ளது. இது 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 15 இயற்றப்பட்டதன் மூலம் நிறுவப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகம் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த பெண் மாணவர்களுக்கும் தனது சேவையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முக்கியத்துவத்தை அளிக்கிறது. இது மகளிர் ஆய்வுகளில் ஆலோசனை சேவைகள் மற்றும் ஆராய்ச்சிகளை கண்காணித்து வழங்குகிறது. கல்விசார் சிறப்பு மற்றும் ஆளுமை மேம்பாட்டிற்காக பாடுபடுகிறது மற்றும் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு சமமான

பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்விப் படிப்புகளை வழங்குகிறது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்விப் பள்ளி 1988 ஆம் ஆண்டு கொடைக்கானலில் தொடங்கப்பட்டது

**ஜே. ஜெயலலிதா நலத்துறை நடவடிக்கைகள்**

ஆண்கள் மட்டுமே நீடித்த ஆதிக்கம் செலுத்தக்கூடிய அரசியலில், பிரகாசிக்கும் பெண்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. அப்படி ஜானகி ராமச்சந்திரனைத் தொடர்ந்து, தமிழகத்தின் இரண்டாவது பெண் முதல்வராகப் பொறுப்பேற்றார் ஜெயலலிதா. 1991, 2001, 2002, 2011, 2015, 2016-ம் ஆண்டு காலகட்டங்களில் முதல்வராக பதவி வகித்ததன் மூலமாக, தமிழகத்தில் அதிக

முறை முதல்வராக பதவி வகித்தவர் என்ற பெருமையும் ஜெயலலிதாவையே சேரும்.

ஒரு பெண்மணியாக அரசியலில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்தாலும், முதலமைச்சராக தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளார் ஜெயலலிதா. குறிப்பாக, பெண்களுக்கும், பெண் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் மகத்தான பல திட்டங்களைச் செயல்படுத்தி மகளிர் முன்னேற்றத்திற்கு ஏணியாக இருந்தார் அந்த இரும்புப் பெண்மணி. பெண்களுக்கான அத்தகைய முன்னோடித் திட்டங்களில், சிறந்த 10 திட்டங்கள் இங்கே...

**பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்**

1992-ம் ஆண்டு முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் ஜெயலலிதா. அத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் வங்கியில் 50,000 ரூபாய் வைப்புத் தொகையும், இரண்டுப் பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தை பெயரிலும் தலா 25,000 வைப்புத் ரூபாயும் இருப்பு வைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் அத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தால் கிடைக்கும் தொகை, ஏழைப் பெண்களின் உயர்கல்வி, திருமணம் போன்ற எதிர்காலத் தேவைகளுக்கு உதவியது, லட்சக்கணக்கான பெண்கள் இத்திட்டத்தால் பயன்பெற்றனர்.

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு நிதியுதவித் திட்டம்**

இது தி.மு.க அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்றாலும், இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.50 ஆயிரம் மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம், படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.25 ஆயிரம் மற்றும் தாலிக்கு 4

கிராம் தங்கம் என அதை உயர்த்தினார் ஜெயலலிதா. 2016-ம் ஆண்டு 6-வது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, இத்திட்டத்தில் வழங்கப்பட்ட உதவித் தொகையுடன், தாலிக்கு வழங்கும் தங்கத்தின் அளவை 8 கிராமாக உயர்த்தி வழங்கினார் ஜெயலலிதா. இத்திட்டத்தின்படி ஆண்டுக்கு பல ஆயிரம் பெண்கள் பயன்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### தொட்டில் குழந்தை திட்டம்

பெண் குழந்தைகள் வளர்ப்பை சுமையாக நினைத்து, அதிக அளவில் பெண் சிசுக்கொலை நடைபெற்று வருவதை தடுக்கும் வகையில், 1992-ம் ஆண்டு ஜெயலலிதா கொண்டுவந்த சிறந்த திட்டம், தொட்டில் குழந்தை திட்டம். இத்திட்டத்தின் மூலம், பிறந்த பெண் குழந்தையை வளர்க்க முடியாத சூழலில் உள்ள பெற்றோர் அதை அரசின் பதுகாப்பில் ஒப்படைக்க வழிசெய்யப்பட, அந்தக் குழந்தைகள் அரசு மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களால் வளர்க்கப்படுவார்கள். இத்திட்டத்தால், தமிழகத்தில் பெண் சிசுக்கொலையின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

### சானிட்டரி நாப்கின் வழக்கும் திட்டம்

பெண்களுக்கு இலவச சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டத்தை 2012-ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி வைத்தார் ஜெயலலிதா. இந்த திட்டத்தின்படி கிராமங்களில் உள்ள 10 முதல் 19 வயது வரையிலான இளம் பெண்கள், மாணவிகள், இல்லத்தரசிகள் மற்றும் சிறைச்சாலையில் இருக்கும் பெண் கைதிகளுக்கும் இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் பெரும் வரவேற்பை பெற்றதுடன், பெண்களுக்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்னைகளுக்கு நல்லதொரு தீர்வாக அமைந்தது.

**பெண்களுக்கான உடல் எடை பரிசோதனைத் திட்டம்**

ஒவ்வொரு ஊரிலும் உள்ள அரசு அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் உடல் எடையை கண்காணித்து, அவர்கள் ஆரோக்கியத்தை உறுதிசெய்ய ஊட்டச்சத்து மாவு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார் ஜெயலலிதா..

**மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம்**

கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய, நடுத்தரப் பெண்கள் சுயமாக முன்னேறவும், சுயதொழில் செய்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும், அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுத்திட்டத்தின் மூலம் கடனுதவிப் பெற வழிவகுத்தார் ஜெயலலிதா. இந்திய அளவில் அதிக பெண் சுயதொழில் முனைவோர் உள்ள மாநிலமாக தமிழகம் முதலிடம் பிடித்ததில், இத்திட்டத்துக்குப் பெரும் பங்கு உண்டு

**அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்**

அரசு மருத்துவமனைகளில் குழந்தை பெற்றுக்கொள்ளும் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் அரசின் பரிசாக, சோப்பு, பொம்மை, துண்டு, ஷாம்பூ, குழந்தைக்கான ஆடை உள்ளிட்ட 16 பொருட்கள் வழங்கும் 'அம்மா குழந்தைகள் நல பரிசுப் பொட்டகம்' என்ற புதிய திட்டத்தை, 2015-ம் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தினார் ஜெயலலிதா.

**பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைத் திட்டம்**

பாலூட்டும் தாய்மார்கள் பயணங்களில், பொதுவெளிகளில் தங்கள் குழந்தைக்கு பசியாற்ற முடியாத தவிப்பை கருத்தில்கொண்டு, அனைத்து பேருந்து நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில், தாய்மார்கள் பாலூட்டுவதற்கு என பிரத்யேக தனியறைகளை

அமைத்துக்கொடுத்தார் ஜெயலலிதா. பல குழந்தைகளின் அழுகையும் அம்மாக்களின் இயலாமையும் தணிந்தது.

**அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம்!**

அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டத்தின் வழியாக, மகப்பேறு காலத்தில் பெண்களின் ஆரோக்கியத்தை காக்க 11 வகை மூலிகை மருந்துகள் அடங்கியிருக்கும் மருத்துவக் குணமுள்ள மூலிகைகள் கொடுக்கப்படும். மசக்கையால் வரும் வாந்தி, மயக்கத்தைக் கட்டுப்படுத்துதல் தொடங்கி மகப்பேறு மாதம் வரை கர்ப்பிணி பெண்ணுக்கு ஏற்ற மூலிகைகளைத் தருவதுதான் இந்தத் திட்டம்.

**வெற்றிப் பெண்மணி தந்த விருதுகள்**

வீர, தீரச் செயல் புரியும் பெண்களை கௌரவிக்கும் வகையில், ஆண்டு தோறும் சுதந்திர தினத்தன்று 'கல்பனா சாவ்லா' விருதுடன், ரூ.5 லட்சம் பரிசுத் தொகை மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட பதக்கம் வழங்கியது ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு. மேலும், சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாசாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை கௌரவப்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை அடங்கிய ‘அவ்வையார் விருதை' வழங்கி ஊக்கப்படுத்தினார் ஜெயலலிதா.

இது தவிர டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு கால நிதியுதவித் திட்டம் தி.மு.க அரசால் கொண்டுவரப்பட்டாலும், கர்ப்பிணிப் பெண்கள் ஆரோக்கியமான

உணவுகளை உண்டு, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கும் வகையில், அவர்களுக்கு மகப்பேறு கால உதவித்தொகையை ரூ.18,000 ஆக உயர்த்தினார் ஜெயலலிதா.

பெண்களை நேசித்த ஜெயலலிதா தமிழகப் பெண்களின் வாழ்வில் மலர்த்திய மாற்றங்களுக்கான வணக்கங்களையும் நன்றிகளையும் வரலாறு நின்று சொல்லும்!

**அம்மா உணவகம்**

சென்னை மாநகராட்சியின் திட்டமான **மலிவு விலை உணவகம்** திட்டம் 2013 மார்ச் 19ஆம் நாள் சென்னை-சாந்தோமில் முதல்வர் ஜெயலலிதாவால் தொடங்கப்பெற்றது. அதே நாளில் 15 இடங்களில் மலிவு விலை உணவங்கள் செயல்பாட்டிற்கு வந்தன. அரசு பொது மருத்துவமனை வளாகங்களில் அம்மா உணவகம் திறக்கப்பட வேண்டும் என்ற பொது மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் முதற்கட்டமாக 20.11.2013 அன்று சென்னை அரசு பொது மருத்துவமனை வளாகத்திலும், இரண்டாம் கட்டமாக 21.2.2014 அன்று அரசு ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகங்களிலும் அம்மா உணவகங்களை ஜெயலலிதா திறந்து வைத்தார்.இந்த உணவகங்களில் இட்லி ஒரு ரூபாய்க்கும், சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கனவுத் திட்டங்களில் ஒன்று ‘அம்மா உணவகம்’. தமிழ்நாட்டை கடந்து பல்வேறு மாநில முதல்வர்களும், 10 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த திட்டத்தைபார்த்து சென்று அமல்படுத்த ஆசைப்பட்டனர். அந்தளவுக்கு, இந்திய அளவில் பெரிதும் கவனம் ஈர்த்த தமிழ்நாட்டின் சமூகநீதி திட்டங்களில் ஒன்றாக அதிமுக அரசால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட திட்டம் இது.

உடல் உழைப்பு தொழிலாளர்கள், பள்ளி செல்லும் குழந்தைகள், வேலைக்கு செல்லும் பெண்கள் என பல்வேறு தரப்பினரின் ஆதரவால் அமோகமாக வரவேற்கப்பட்ட திட்டத்தின் தற்போதைய நிலை கவலைக்கிடமாக மாறி உள்ளது என்பதே யதார்த்தம். கடந்த2013-ம்ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம், 10 ஆண்டுகளுக்குள் சரிவை சந்தித்துள்ளது.

தொழிலாளர்கள் நிறைந்த திருப்பூர் மாநகரில், பலர் பசியாற்றிய இடமாக அம்மா உணவகமே இருந்தது. அம்மா உணவகங்கள் மீண்டும் புத்துணர்வு பெற வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது.

திருப்பூரை சேர்ந்த தொழிலாளர்கள் சிலர் கூறியதாவது: திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வந்த அம்மா உணவகம், 'ஸ்மார்ட் சிட்டி' பேருந்து நிலையத்துக்காக விரிவுபடுத்தப்படும் பணிக்காக அகற்றப்பட்டது. நாள்தோறும் பொதுமக்கள் பசியாறிய உணவகம் அது. இன்றைக்கு அந்த சுவடே அங்கு இல்லை.

திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு சில அம்மா உணவகங்களில் ஆளும் திமுக எம்.எல்.ஏ.க்கள் நேரில் ஆய்வு செய்து வியப்பளித்தனர். அதன் பின்னர் அம்மா உணவகத்தின் வளர்ச்சிக்கு எந்த பணிகளும் மேற்கொள்ளவில்லை. திருப்பூர் ரயில் நிலையம், திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தென்னம்பாளையம் தினசரி சந்தை மற்றும் சந்திராபுரம் என பல்வேறு இடங்களில் அம்மா உணவகங்கள் உள்ளன.

**மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி**

தனது குழந்தைகளை பெற்றோர் பாதுகாத்து அரவணைத்து வளர்ப்பதை போல, பள்ளி மாணவர்களை தமிழ்நாடு அரசு அரவணைத்து அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர எப்போதும் தவறியதில்லை. மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ், இலவச சீருடை, இலவச மிதிவண்டி, என

அடிக்கிக் கொண்டே போகலாம். அந்த வகையில், அதற்கு மேலும் ஒரு மகுடம் சேர்ப்பதாய் ஒரு திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்தது. அது 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் ஆகும்.

பெரும்பாலும் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளாக இருப்பார்கள். இந்த நிலையில், அவர்களுக்கு மடிக்கணினி என்பது பல காலமாக கனவாகவே இருந்து வந்தது. இதனை தொடர்ந்து, அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்கும் திட்டத்தை கடந்த கால அதிமுக ஆட்சியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்.

**திட்டத்தின் நோக்கம்**

வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சியில் மடிக்கணினி பயன்பாடு மற்றும் தேவை அதிகரித்து வருகிறது. இந்நிலையில்,கல்லூரி சேர இருக்கும் நிலையில் ஏழை, எளிய மாணவர்களும் மடிக்கணினி பயன்பாடுகளை கற்க ஏதுவாக தமிழ்நாடு அரசு இலவச லேப்டாப் திட்டத்தை உருவாக்கியது.

2011 சட்டப்பேரவை தேர்தலின் போதே இலவச மடிக்கணினிக்கான அறிவிப்பை தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளான திமுக, அதிமுக குறிப்பிட்டு இருந்தன. அதன்படி 2011 சட்டப்பேரவையில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு 2011ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி திட்டத்தை தொடங்கி வைத்தது.

மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு, முதற்கட்டமாக 9.12 லட்சம் மாணவர்களுக்கு 912 கோடி செலவில் இலவச மடிக்கணினி வழங்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக அடுத்தடுத்த ஆண்டுகளிலும் மடிக்கணினி வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக

லேப்டாப் தயாரிக்கும் நிறுவனங்கள் அரசின் கொள்முதல் விலைக்கு டெண்டர் எடுக்க வர முற்படாததால், இலவச லேப்டாப் வழங்குவதில் சிக்கல் எழுந்தது.

**திட்டத்தின் நீட்சி**

தமிழக அரசின் சார்பில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்கும் திட்டம் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 15 லட்சத்திற்கும் மேற்பட்ட இலவச லேப்டாப்புகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கணிப்பொறி, லேப்டாப்புகள் ஆகியவற்றின் தேவை உலகம் முழுவதும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால் அவற்றின் விற்பனையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

**தொட்டில் குழந்தை திட்டம்**

பெண் சிசுக்கொலையை ஒழிக்கவும், பெண் குழந்தைகளை மரணத்தின் பிடியில் இருந்து காப்பாற்றவும், 1992ல், சேலம் மாவட்டத்தில், தொட்டில் குழந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1992 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது.பெண் சிசுக்கொலை நடைமுறையில் இருந்த மதுரை, தேனி, திண்டுக்கல், தர்மபுரி மாவட்டங்களுக்கும், 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, கடலூர், அரியலூர், பெரம்புலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதம் அபாயகரமான அளவில் குறைந்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ளது. இதற்கு பல்வேறு சமூகப் பொருளாதார காரணங்கள் கூறப்படுகின்றன. இதை உணர்ந்து, இந்த எதிர்மறையான போக்கை சரிசெய்ய, தொட்டில் குழந்தை திட்டம் இந்த மாவட்டங்களுக்கும் 2011 ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது.

தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ், மீட்கப்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கும் திட்டங்களின் கீழ், மாற்றுக் குடும்பத்துடன் மறுவாழ்வு பெறுகின்றனர். புதுமையான தொட்டில் குழந்தை திட்டம் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலிருந்தும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் நேர்மறையான விளைவு, 2001 இல் 942/1000 ஆக இருந்த குழந்தை பாலின விகிதம் 2011 இல் 943/1000 ஆக உயர்ந்துள்ளது.

பெண் சிசுகொலையை தடுக்க தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதிலும் 1992இல் துவக்கப்பட்ட தொட்டில் குழந்தை திட்டம் தமிழகத்தில் பல பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்தது. பிறந்தவுடனே பெற்றோர்களால் கைவிடப்படும் பெண் சிசுக்கள் இந்த திட்டம் மூலம் அரசாங்கத்தால் வளர்க்கப்படுகிறார்கள். 1992 முதல் 2014 வரை, இந்த திட்டத்தின் கீழ் 4000க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டு உள்ளன.

**உள்கட்டமைப்பு மேம்பாடு**

கல்வித் துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாணவ, மாணவியரும் இடையில் நிற்காமல் உயர் கல்வி கற்று, அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அரசு செயல்படுகிறது.

அதனடிப்படையில் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 2 புதிய அரசு பொறியியல் கல்லூரிகள், 7 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் (பாலிடெக்னிக்), 11 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட உள்ளன. புதிய கல்லூரிகள் ஏற்படுத்துவதுடன் இப்போதுள்ள கல்லூரிகளில் மாணவ,

மாணவியர் உற்சாகத்துடன் கல்வி பயிலும் வகையில் நல்லதொரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே என் விருப்பம். இதன் அடிப்படையில் இப்போது தமிழகத்தில் செயல்பட்டு வரும் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 93 அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இக் கல்லூரிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடியாக செய்து தர அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி ஏற்கனவே குறிப்பிட்ட அரசுக் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.100 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இந்த நிதியிலிருந்து புதிய மேஜைகள், நாற்காலிகள் வழங்குதல், நவீன கரும்பலகைகள், அறிவிப்புப் பலகைகள் அமைத்தல், மொழி ஆய்வகங்களுக்கு கணினி மேஜைகள், கணினி நாற்காலிகள் வழங்குதல், புத்தகங்கள் வைக்க அலமாரிகள் அமைத்துத் தருதல், நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்குதல், நூலகங்கள் கணினிமயம் ஆக்கப்படுதல், தரமான ஆய்வுக் கூடங்கள் அமைத்தல், அறிவியல் துறைகளுக்கு புரொஜெக்டர் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். ரேஷன்ல மாற்றம்.. சர்க்கரை, அரிசி வரட்டும்.. 1கார்டுக்கு ரூ.10? புதுஸா இருக்கே.. தமிழக அரசு முடிவு? சுகாதாரமான குடிநீர் வழங்க வசதிகள் ஏற்படுத்தித் தருதல், மாணவர் விடுதிகளில் சமையலறைக் கூடங்களை மேம்படுத்துதல், கழிப்பறை வசதிகள், மின் விளக்கு, மின் விசிறி ஏற்படுத்தித் தருதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும். அரசுக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இதுவரை இல்லாத அளவு உயர் ஒதுக்கீடாக ரூ.100 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது என்றார்.

**மழை நீர் சேகரிப்பு திட்டம்**

2001-ல் தொடங்கப்பட்ட மழை நீர் சேகரிப்பு இயக்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உருவானது. தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டத்தை ரீசார்ஜ் செய்வதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் கட்டிட விதிகள் 1973 இன் பிரிவு 215 (a) க்கு செய்யப்பட்ட திருத்தங்கள், அனைத்து புதிய கட்டிடங்களிலும் RWH கட்டமைப்புகளை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆதாயங்களை ஒருங்கிணைக்க, பொது மற்றும் தனியார் கட்டிடங்களில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட RWH கட்டமைப்புகளை புதுப்பிப்பதற்கும், புதியவற்றை உருவாக்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நகர பஞ்சாயத்துகளில் IEC நடவடிக்கைகள் தொடரப்பட்டு, அனைத்து பங்குதாரர்களையும் உத்வேகத்தைத் தக்கவைக்க உணர்த்தும். 2011-12 ஆம் ஆண்டில், இந்த பாராட்டத்தக்க திட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில், புதிய RWH கட்டமைப்புகள் மற்றும் பழைய RWH கட்டமைப்புகளை புதுப்பித்தல் ஆகியவற்றை டவுன் பஞ்சாயத்துகள் மேற்கொண்டன. இத்திட்டத்தின் வேகத்தைத் தக்கவைக்க டவுன் பஞ்சாயத்து பகுதிகளில் IEC நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6286.84 ஏக்கர் பரப்பளவில் 1821 நீர்நிலைகள் டவுன் பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்படுகின்றன. 243 நீர்நிலைகளை மீட்க ரூ. ஐயுடிஎம் மற்றும் நபார்டு வங்கியின் கீழ் 2011-12 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுக்கு 55.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோல், 2013-2014ல், பொது நிதியின் கீழ், 18.40 கோடி ரூபாய் மதிப்பில், 561 மேம்பாடு பணிகளான, தூர்வாருதல், மதகு தூர்வாருதல் மற்றும் பலப்படுத்துதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 68 டவுன்

பஞ்சாயத்துகளில் ரூ.28.15 கோடி மதிப்பீட்டில் 88 நீர்நிலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டவுன் பஞ்சாயத்துகளில் உள்ள மொத்த கட்டிடங்களின் எண்ணிக்கை 23,92,457 இதில் 22,94,342 கட்டிடங்கள் மழை நீர் சேகரிப்பு வசதிகளுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| கட்டிடகளின் வகைகள் | கட்டிடகளின் எண்ணிக்கை | இதுவரை RWH கட்டமைப்புகளை வழங்கும் கட்டிடகளின் எண்ணிக்கை | இருப்பு |
|---|---|---|---|
| அரசு கட்டிடங்கள் | 24116 | 23190 | 926 |
| குடிருப்பு கட்டிடங்கள் | 2208377 | 2114294 | 94083 |
| வணிக கட்டிடங்கள் | 148170 | 145064 | 3106 |
| தொழில் துறை கட்டிடங்கள் | 11794 | 17794 | 0 |

**IEC செயல்பாடுகளுக்கான செயல் திட்டம்**

- ○ பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தீவிரமான IEC பிரச்சாரமும் ஏற்றுக்கொள்ளப்படும்
- ○ சுயஉதவி குழுக்கள், நலன்புரி சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பள்ளி மாணவர்களின் ஒருங்கிணைப்புடன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல் .
- ○ மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தையும் நன்மைகளையும் வெளிப்படுத்தும் போர்டுகளை அமைத்தல் .
- ○ சுய உதவிக்குழுக்கள், தன்னார்வ தொண்டு, நிறுவனங்களின் பங்கேற்புடன் மழை நீர் சேகரிப்பு குறித்து வீட்டுக்கு வீடு பிரச்சாரம் .
- ❖ வளாக மழை நீரை சேகரிப்பதற்கான செயல் திட்டம்
- ○ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 215 A பிரிவின் கீழ் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை வழங்குவதும் கண்காணிக்கப்படும், அதே வேளையில் திட்ட ஒப்புதல் அளிக்கப்படும்.

- மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்கனவே நகர பஞ்சாயத்து துறைக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது .
- போதுமான மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை வழங்க தேவையான நடவடிக்கை மற்ற அரசு துறைக்கு சொந்தமானது.
- வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் , தற்போதுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புதுப்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்க, டவுன் பஞ்சாயத்து செயல் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது .

❖ ஊரணிகளில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்

**மழை நீர் சேகரிப்பு நுட்பங்கள்:**

- மழை நீர் சேகரிப்பில் இரண்டு முக்கிய தொழில்நுட்பங்கள் உள்ளன.
- எதிர்கால பயன்பாட்டிற்காக மழைநீரை மேற்பரப்பில் சேமித்தல்.
- நிலத்தடி நீருக்கு ரீசார்ஜ் செய்யவும்.

மழை நீரை மேற்பரப்பில் சேமித்து வைப்பது ஒரு பாரம்பரிய தொழில்நுட்பம் மற்றும் கட்டமைப்புகளில் நிலத்தடி தொட்டிகள், குளங்கள், தடுப்பணைகள், தடுப்பணைகள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. நிலத்தடி நீரை ரீசார்ஜ் செய்வது என்பது மழை நீர் சேகரிப்பில் ஒரு புதிய கருத்து மற்றும் பொதுவாக பயன்படுத்தப்படும் கட்டமைப்புகள்:-

**குழிகள்**

ஆழமற்ற நீர்நிலையை ரீசார்ஜ் செய்ய ரீசார்ஜ் குழிகள் கட்டப்படுகின்றன. இவை 1 முதல் 2 மீ, அகலம் மற்றும் 3 மீ வரை கட்டப்பட்டுள்ளன. பாறைகள், சரளைகள், கரடுமுரடான மணல் ஆகியவற்றால் நிரப்பப்பட்ட ஆழமான.

**அகழிகள்**

ஆழமற்ற ஆழத்தில் ஊடுருவக்கூடிய ஸ்ட்ராம் கிடைக்கும் போது இவை கட்டப்படுகின்றன. அகழி 0.5 முதல் 1 மீ வரை இருக்கலாம். அகலம், 1 முதல் 1.5 மீ. ஆழம் மற்றும் 10 முதல் 20 மீ. நீரின் இருப்பைப் பொறுத்து நீண்ட காலம். இவை மீண்டும் வடிகட்டியால் நிரப்பப்படுகின்றன. பொருட்கள்.

**ஆழ்துளைக் கிணறுகள்**

